DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker | Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc. "My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative | kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com | Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன் 647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX Community

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal; Affidavits for Immigration purposes
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோர்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA Mortgage Solutions Inc.
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1281 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 23, 2020

# லிபரல் ஆட்சிக்கு எதிராக கொன்சர்வேர்ட்டிவ் கட்சி கொண்டு வந்த பிரேரணை தோற்கடிக்க உதவிய என்டிபி மற்றும் பசுமைக் கட்சி






நேற்று முன்தினம் புதன்கிழமை மதியத்திற்கு பின்னரான நேரத்தில் ஒட்டாவாவில் உள்ள கனடிய பாராளுமன்றத்தில் சிறுபான்மை லிபரல் அரசுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணை ஒன்று 180-146 என்ற வாக்குகளின் அடிப்படையில் தோற்கடிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சியான கொன்சர்வேர்ட்டிவ் கட்சியினரால் கொண்டு வரப்பட்ட இந்த தீர்மானத்தில் லிபரல் அரசாங்கம் கடந்த காலங்களில் செய்த செலவீனங்களில் முறைகேடுகள் நடந்துள்ளதால், அதனை விசாரிக்க ஒரு சிறப்புக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதே இந்த பிரேரணையாகும்.

மேற்படி பிரேரணைக்கு எதிராக வாக்களித்த எனடிபி கட்சி மற்றும் கீறீன் கட்சி (பசுமைக் கட்சி) ஆகியன இந்த பிரேரணை மூலம் லிபரல் கட்சி தோற்கடிக்கப்பட்டால், நாடு ஒரு பொதுத் தேர்தலை சந்திக்க நேரிடும். ஆனால் தற்போதைய கொரோனா தொற்றுக் காலப்பகுதியில் ஒரு தேர்தலை நடத்தி நாட்டு மக்களை இடர்களுக்குள் மீண்டும் தள்ளுவதை நாம் விரும்பவில்லை என்று கூறி கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் இந்த பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினர்களில் குறிப்பிடத்தக்க அளவு உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு நேரடியாக வந்திருந்து வாக்களிப்பில் கலந்து கொண்டனர். பலர் தங்கள் அலுவலகங்களிலிருந்து கொண்டே இணையவழி ஊடாக வாக்களித்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வாக்கெடுப்பு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய என்டிபி கட்சியின் தலைவர் ஜக்மிட் சிங், தேர்தலைத் தடுக்க வேண்டும் என்பதற்காகவே நாம் இந்த பிரேரணைக்கு எதிராக வாக்களித்தோம். ஆனால் ஜஸ்ரின் ட்ரூடோவின் சிறுபான்மை அரசாங்கத்தின் செயற்பாடுகளை தொடர்ந்து கவனிப்போம். தேவையான நேரங்களில் அவர் விமர்சனம் செய்வோம்'' என்றார். கனடிய பசுமைக் கட்சியும் இதே காரணத்தை முன்வைத்தே கொன்சேர்வேர்ட்டிவ் கட்சியின் பிரேரணையை எதிர்த்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



எனினும் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் Erin O'Toole தனது சக பாராளுமன்ற அங்கத்தவர்களுடன் சேர்ந்து எவ்வாறான நெருக்குதல்களை சிறுபான்மை லிபரல் அரசாங்கத்திற்கு கொடுப்பார் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line | Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 | 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 | 905 794 4404

# நாடு கடந்த தமிழீழ அரசின் முயற்சியினால் விடுதலைப் புலிகள் மீதான பிரித்தானியா அரசின் தடை தவறானது என பிரித்தானியாவின் விசேட ஆணையம் ஒன்று தீர்ப்பளித்தது

விடுதலைப் புலிகள் மீதான பிரித்தானியா அரசாங்கத்தின் தடை தவறானது என பிரித்தானியாவில் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் தொடர்பான விசேட ஆணையம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்திருக்கின்றது.

இவ்வாறான ஒரு சாதகமான தீர்ப்பான நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் தொடுக்கப்பட்ட வழக்கின் மூலமாவே கிட்டியுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கானது திறந்த சாட்சியங்களின் அடிப்படையிலும், இரகசிய சாட்சியங்களின் அடிப்படையிலும் நடைபெற்றது. திறந்த சாட்சியங்களின் விசாரணையின் போது இங்கிலாந்து மகாராணியாரின் QC Maya Lester QC, உட்பட Malcolm Birdling of Brick Court Chambers with Jamie Potter Caroline Robinson of Bindmans LLP ஆகியோர் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பான சட்டத்தரணிகளாக வாதிட்டிருந்தனர்.

இரகசிய விசாரணை போது இங்கிலாந்து மகாராணியாரின் QC Angus McCulloch Q.C Rachel Tony. (தொடர்ச்சி 3ம் பக்கம்)

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX Realtron

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

ZY RENOVATION
உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/ Installation-Flooring/Installation Bathroom/ Kitchen/ Basement Renovations Additions & Extensions
Exterior: Fence/ Interlock/ Deck
ZY- Renovation Call: Ethan@ 647 995 5955

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

**GET APPROVED WITHIN 24 HOURS**

**416.298.2777**

**$375 Mo.**

**www.mortgageSolutions.ca**

**MONTHLY SAVING $2,478**

**SAVE UPTO 75% REFINANCE**



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com



## GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



**NIRMALAN (ROGER):**
(416) 990-7777
(416) 984-7777

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN:**
(416) 894-6244


## உதயன் கதிரோட்டம்

# பிரித்தானியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை விலகுமா?

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை பிரிட்டன் அரசு தொடர்ந்து நீடிக்கக் கூடாது என்ற பிரிட்டனின் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் மேன்முறையீட்டு ஆணைக்குழு நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கிய தீர்ப்பு தொடர்பாக உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் மாத்திரமல்ல, சிங்கள அமைப்புக்களும் இலங்கை அரசும் அதனோடு ஜனாதிபதி பிரதமர் என அனைத்து தரப்பினரும் தங்கள் கருத்துக்களை தெரிவித்து வருகின்றன.

இங்கே நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் எதுவெனில், பிரிட்டனின் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் மேன்முறையீட்டு ஆணைக்குழுவில் இந்த வழக்கை கொண்டு சென்று அதில் வெற்றியைக் கண்டுள்ள நாடுகடந்த தமிழீழ அரசு பற்றிய கருத்தாடல் என்பது முக்கியமானது.

2009ம் ஆண்டிற்கு பின்னர் ஆரம்பிக்கப்பெற்ற நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கு மக்கள் ஆதரவு பெருமளிவில் கிடைக்கவில்லை. குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் சார்ந்த அமைப்புக்களில் புலம்பெயர்ந்த நாடுகளில் செயற்பாட்டாளர்களாக விளங்கியவர்கள் பெரியளவில் நாடு கடந்த தமிழீழ அரசின் வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கியதை நாம் அறிந்து கொள்ள முடியாமல் இருந்தது. அது பலருக்கு தென்பட்டதாக தகவல்களும் வெளியாகவில்லை.

ஆனால் விடுதலை புலிகள் அமைப்பு பலம் பெற்று விளங்கியபோது அதன் செயற்பாடுகளிலும் பின்னர் அவ்வப்போது இடம்பெற்ற இலங்கை அரசுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போதும், முக்கிய பங்கெடுத்த சட்டத்தரணி உருத்திரகுமாரன் விசுவநாதன் நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமராகப் பதவி வகித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் பிரித்தானியாவில் முதலில் தொடரப்பட்ட வழக்கு, அதனைத் தொடர்ந்து பிரிட்டனின் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் மேன்முறையீட்டு ஆணைக்குழு முன்பாக கொண்டு செய்யப்பட்ட மேன்முறையீடு செய்யும் வழக்கு விசாரணையை முன்னின்று நடத்தியவர்கள் பிரித்தானியாவில் செயற்படும் நாடு கடந்த தமிழீழ அரசின் உறுப்பினர்கள் தான் என்பதை அறிகின்றபோது, அவர்களை உலகத் தமிழர்கள் அனைவரும் பாராட்டி மகிழவேண்டும் என்றே நாம் குறிப்பிட விரும்புகின்றோம். அவர்களின் முயற்சி சாதாரணமானது அல்ல என்பதையும் நாம் உணரவேண்டும்.

பிரிட்டனின் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் மேன்முறையீட்டு ஆணைக்குழு முன்பாக இந்த வழக்கை எடுத்துச் சென்ற நாடு கடந்த அரசின் பிரித்தானிய பிரிவின் அங்கத்தவர்கள் முன்னின்று செயற்பட்டு பெற்ற இந்த வெற்றியானது, ஏனைய புலம் பெயர்ந்த நாடுகளில் இயங்கும் நாடு கடந்த தமிழீழ அரசின் அங்கத்தவர்களுக்கும் ஒரு முன்னுதாரணமாக அமைய வேண்டும் என்றே விரும்புகின்றோம்.

இதன் அடுத்த கட்ட நடவடிக்கைகளில் உலகெங்கும் உள்ள தமிழர் நலனுக்காக உழைத்து வரும் அனைத்து அமைப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய ஒரு நேரம் வந்துவிட்டது என்றும் நாம் கருதுகின்றோம்.

இது இவவாறிருக்க தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை பிரிட்டன் அரசு தொடர்ந்து நீடிக்கும் எனத் தாம் நம்புவதாக இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். இவ்வாறு இலங்கையின் பக்கமிருந்து வரும் கருத்துக்களையும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்ந்து கவனித்து செயற்பட வேண்டும் என்பதையும் நாம் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.


## BASEMENT வாடகைக்கு உண்டு

**Birchmount / Eglinton**
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement with separate entrance
மற்றும் எல்லாவித வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Close to TTC, subway, & shopping.
குடும்பம் விரும்பத்தக்கது.

**Call: (416) 821-2181**

## விசேட வாழைஇலைச் சாப்பாடு. ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்

ஸ்காபுறோவில்
மோர்னிங்சைட் - செப்பர்ட்
சந்திப்புக்கு அருகில்
வாழை இலைச்சாப்பாடு மற்றும் Lumprice ஆகியவற்றை ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்.
வெள்ளிக்கிழமைகளில்
வாழை இலையில் 6 மரக்கறிகளுடன் சாப்பாடு - $6.50.
சனிக்கிழமைகளில் மட்டன், சிக்கன் Lumprice - $14.00 மட்டுமே.

**Call: (416) 832-6345**

## SHARED WAREHOUSE WANTED

Looking for shared warehouse space (1000-1500 sq.ft.) in Scarborough

**Call:**
**(416) 421-3223**

## HELP WANTED

General help / delivery person needed for a flower shop.

Duties include:
- Putting the flowers in the water.
- Cleaning the shop and making a few deliveries using a company vehicle.

Must have a valid driver's licence.
Minimum of three days a week (25 to 30 hours per week).

**Call Varadhan:**
(416) 288-1419
(716) 572-2939


# நாடு கடந்த தமிழீழ அரசின் முயற்சியினால் விடுதலைப் புலிகள் மீதான பிரித்தானியா அரசின் தடை தவறானது என பிரித்தானியாவின் விசேட ஆணையம் ஒன்று தீர்ப்பளித்தது

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சட்டத்தரணியாக ஆஜராகினார் வாதிட்டிருந்தார். இந்த வழக்கில், எவ்விதமான பயங்கரவாத செயற்பாடுகளிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபடவில்லை எனச் சுட்டிக்காட்டி தடையினை நீக்குமாறு பிரித்தானியாவின் உள்துறை அமைச்சிடம் 2008ம் ஆண்டில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரியிருந்தது.

இதனை பிரித்தானிய உள்துறை அமைச்சு நிராகரித்திருந்த நிலையில், தடையை நீக்கும் அடுத்த நடவடிக்கையாக பிரித்தானியாவில் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் தொடர்பான விசேட ஆணையத்திடம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சட்ட நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வெளியான 38 பக்கத் தீர்ப்பின்படி விடுதலைப் புலிகள் மீதான தடை தவறானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமது தீர்ப்பையும், அது குறித்த சிபார்சையும் ஆணையம் பிரித்தானிய அரசுக்கு அனுப்பிவைக்கும். அதன் அடிப்படையில் இது தொடர்பில் பிரித்தானிய அரசாங்கம் தனது முடிவை அடுத்த சில வாரங்களில் அறிவிக்கும் எனத் தெரியவருகின்றது. இந்த தீர்ப்பு குறித்து உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் உற்சாகமடைந்துள்ளதை அறியக்கூடியதாக உள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியாக போராட்டங்களை நசுக்குவதற்கான திட்டமும் 20வது திருத்தச் சட்டத்திற்கு பின்னால் இருப்பதை நான் உணர்கின்றேன்

## *பாராளுமன்றத்தில் நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு*



20வது திருத்தச் சட்டத்திற்குப் பின்னால் இலங்கையில் வாழும் தமிழ் சிங்கள இஸ்லாமிய மக்களைப் பாதிக்கும் விடயங்கள் அதிகமாக உள்ளன என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். அதற்கு மேலாக இந்த திருத்தச் சட்டத்தில் எமது தமிழ் மக்களை குறிவைத்தும் பல அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதையும் நாம் கவனிக்கின்றோம். அவற்றுள், தமிழ் மக்கள் தம் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராகவும் உரிமைகளை வென்றெடுப்பதற்கு மேற்கொண்டு வரும் ஜனநாயக ரீதியாக போராட்டங்களை மேற்கொள்வதற்கு காணப்படும் ஒரு சில ஜனநாயக இடைவெளிகளையும் அடைத்து இரும்புக் கரம் கொண்டு எமது போராட்டத்தை நசுக்குவதற்கான ஒரு நிகழ்ச்சி திட்டமும் இதன் பின்னால் இருப்பதாக நான் கருதுகின்றேன்.

20 ஆவது திருத்த சட்டத்தின் ஊடாக ஜனநாயகத்தில் இருந்து சர்வாதிகாரத்தை நோக்கி ஆட்சி பண்புகளின் பரிணாமம் திசை மாறுவதற்கான காரணம் வெறுமனே பதவி மோகம் மட்டும் அல்ல என்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சில அரசியல் நிகழ்வுகளுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக இதனை பார்ப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசிய கட்சியின் தலைவருமான நீதியரசர் விக்னேஸ்வரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

20 ஆவது சட்டத்திருத்த பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது இவ்வாறு தெரிவித்த விக்னேஸ்வரன், தமிழ் மக்கள் தம் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராகவும் உரிமைகளை வென்றெடுப்பதற்கு மேற்கொண்டு வரும் ஜனநாயக ரீதியாக போராட்டங்களை மேற்கொள்வதற்கு காணப்படும் ஒரு சில ஜனநாயக இடைவெளிகளையும் அடைத்து இரும்புக் கரம் கொண்டு எமது போராட்டத்தை நசுக்குவதற்கான ஒரு நிகழ்ச்சி திட்டமும் 20 ஆவது திருத்த

*(தொடர்ச்சி 5ம் பக்கம்)*

இலங்கை செய்திகள்



# செம்பியன்பற்று பகுதியில் விஷமிகளால் தீயிடப்பட்ட மீன்பிடி உபகாணங்கள்



வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று தனிப்பனை கிராமத்தில் கடற்தொழிலாளர் ஒருவரின் படகு, வெளியிணைப்பு இயந்திரம் மற்றும் பெறுமதியான வலைகள் வி'மிகளால் தீயிட்டு எரிக்கப்பட்டு உள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று தனிப்பனை கிராமத்தில் கடற்தொழிலாளர் ஒருவரின் படகு, வெளியிணைப்பு இயந்திரம் மற்றும் பெறுமதியான வலைகள் விஷமிகளால் தீயிட்டு எரிக்கப்பட்டு உள்ளது. தனிப்பனை கிராமத்தில் நேற்று இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த கிராமத்தை சேர்ந்த தர்மபிரகாசம் உதயதாஸ் என்பவரின் படகே இவ்வாறு விசமிகளினால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார். அத்துடன் யாழ் மாவட்ட நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்கும் தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து பொலிசார் மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விசார-ணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வடக்கில் ஊடகவியலாளர்களைத் தாக்கியமைத் தொடர்பில் நோர்வே பிரஜை விளக்கமறியலில்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும், சட்டவிரோத தேக்கு மர மோசடிக் குறித்த விடயம் தொடர்பில் ஆய்வு செய்துகொண்டிருந்த, இரண்டு தமிழ் ஊடகவியலாளர்களை தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் இலங்கை வம்சாவளி, நோர்வே நாட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒஸ்லோவில் இருந்து நாடு திரும்பிய 25 வயது திசாந்தன் இராஜேந்திரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி டி.எஸ். லெனின்குமார் உத்தரவிட்டுள்ளார்.

கணபதிபிள்ளை குமனன் மற்றும் சண்முகம் தவசீலன் ஆகிய இரு ஊடகவியலாளர்களை மனிதாபிமானமற்ற முறையில் தாக்கியது, மரண அச்சுறுத்தல்



விடுத்தமை மற்றும் வனப்பகுதியில் சட்டவிரோத மரக் கடத்தல் தொடர்பான காணொளி ஆதாரங்களை நீக்கியதாக அவர் மற்றும் மூன்று பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முக்கிய சந்தேகநபர்களான யோகேஸ்வரன் அனுஜன் மற்றும் ராஜேந்திர ஆகியோரை மாத்திரமே பொலிஸாரால் இதுவரை கைது செய்ய முடிந்துள்ளது.

தாக்கப்பட்ட இரண்டு ஊடகவியலாளர்களும் பொலிஸார் சரியாக செயற்படாததால் தங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அஞ்சுகின்றனர்.

தாக்குதலில் ஈடுபட்ட ஏனைய இருவரையும் கைது செய்யக் கோரி வடக்கில் தமிழ் ஊடகவியலாளர்கள் ஒக்டோபர் 15ஆம் திகதி, கோஷங்களுடன் கூடிய பதாதைகளை ஏந்தியவாறு முல்லைத்தீவில் போராட்டம் நடத்தினர்.

சட்டவிரோத மர வியாபாரத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள பொ-லிஸார் மற்றும் வனவள திணைக்கள அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அவர்களின் கோரிக்கைகள் எழுத்து மூலமாக மாவட்ட செயலாளர், வன பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டன.

ஊடகவியலாளர்கள் தேக்கு மரக்கன்றுகளை மாவட்ட செயலாளர் மற்றும் பொலிஸாருக்கு பரிசளித்ததோடு, மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வன பாதுகாப்பு அலுவலகம் முன்பாக மரக்கன்றுகளை நட்டனர்.

போராட்டக்காரர்களைச் சந்தித்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர ஏனைய இரு சந்தேகநபர்களையும் இரவுக்குள் கைது செய்வதாக உறுதியளித்த போதிலும், இதுவரை அவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை.



கைது செய்யப்பட்டுள்ள இருவரும், உள்ளூர் அதிகா-ரி ஒருவர் மற்றும் ஒரு ஆளும் கட்சி அரசியல்வாதியுடன் இருக்கும் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் பரவி வருகின்ற நிலையில் சட்டவிரோத மரக் கடத்தல்காரர்களுக்கு வலுவான அரசியல் செல்வாக்கு இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக சட்டத்தரணி அன்டன் புனித்நாயகம், கே.கனேஸ்வரன், தச்சனாமூர்த்தி கங்காதரன், எம்.ஏ.நிம்சாத் மற்றும் பி.சுதர்சன் ஆகியோர் இந்த ஊடகவியலாளர்கள் தனியார் சொத்தில் அத்துமீறி உள்நுழைந்ததாக வாதிட்டுள்ளனர்.

ஊடகவியலாளர்கள் வர்த்தகர்களின் வளாகத்திற்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டு அவர்களிடம் அத்துமீறியமை மற்றும் திருடிய குற்றச்சாட்டு தொடர்பில் காணொளி சந்தேகநபர்களால் பதிவு செய்யப்பட்டதாக, இரு ஊடகவியலாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

வழக்கு இன்று (20/10/20) விசாரணைக்கு எடுக்கப்பட்டு சந்தேக நபர்கள் எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்கப்பட்டனர். பொலிசார் அளித்த அறிக்கை முழுமையாக இல்லை என்றும் அதை சீர் செய்து அனைத்தையும் உள்ளடக்கிய அறிக்கையை பதிவு செய்ய வேண்டும் என்று நீ-திபதி பொலிசாருக்கு உத்தரவிட்டார். சட்டவிரோதமாக வெட்டப்பட்ட 42 தேக்குமரக் கட்டைகள் முல்லைத்தீவு வனச்சரக அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. சட்டவிரோதமாக மரங்களை வெட்டியது தொடர்பில் தனியொரு வழக்கு பதியப்படவுள்ளது.

# 2/3 பெரும்பான்மை வாக்குகளால் 20 ஆவது திருத்தம இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது

இலங்கைப் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை கொண்டுவரப்பட்ட 20ஆவது திருத்த சட்ட மூலம் மூன்றில் இரண்டு வாக்குள் சாதகமாக அளிக்கப்பட்டதால், சபையில் நிறைவேறியது.

உலகெங்கும் உள்ள மக்களாலும் எதிர்பார்க்கப்பட்ட இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் உட்பட 8 பேர் ஆதரவாக



வாக்களித்துள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பிகளும் தேசிய முஸ்லிம் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களும் இவ்வாறு ஆதரவாக வாக்களித்தார்கள். 2ஆம் மற்றும் 3ஆம் வாசிப்புகளின்போது, ஐக்கிய மக்கள் சக்தி தேசியப் பட்டியல் உறுப்பினர் டயனா கமகே, ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிகளான முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஹாபிஸ் நஸிர் அஹமட், எச்.எம்.எம். ஹரீஸ், எம்.எஸ். தௌபீக், பைசல் காசிம், தமிழ் முற்போக்கு முன்னணி உறுப்பினர் அரவிந்த் குமார், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் இஷாக் ரஹ்மான், தேசிய முஸ்லிம் கூட்டமைப்பு எம்.பி. அலி சப்ரி ரஹீம் ஆகிய 8 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

இதேவேளை 20ஆவது திருத்தத்தின் 17ஆவது சரத்தான இரட்டை பிரஜாவுரிமை தொடர்பான திருத்தத்தின் மீதான வாக்கெடுப்பில் குறித்த 8 பேருடன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எம்.பி. எஸ்.எம்.எம். முஷாரபும் வாக்களித்திருந்தார்.

வாக்கெடுப்பிற்கு முன்னதாக எதிரணியில் உள்ள சில மு.கா எம்.பிகளை



சுற்றி ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிகள் காவல் இருந்ததோடு இதனால் சபையில் சலசலப்பு ஏற்பட்டது. ஹாபிஸ் நஸீர் அஹமட், அரவிந்த குமார் ஆகி-யோரை சுற்றியே எதிரணி எம்.பிகள் இருந்ததோடு வாக்கெடுப்பு முடிந்த நிலையில் சில ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிகள் ,ஆதரித்த மு.கா எம்.பி-களை விமர்சித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மூன்றில் இரண்டு (3/2) பெரும்பான்மை வாக்குகளினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.




20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவாக 156 வாக்குகளும் எதிராக 65 வாக்குகளும் (2ஆம் வாசிப்பிலும், 3ஆம் வாசிப்பிலும்) வழங்கப்பட்டன.

ஆளும்கட்சி பொதுஜன பெரமுனவுடன் அதன் ஆதரவு கட்சிகளான ஈபிடிபி, தே-சிய காங்கிரஸ், சுதந்திரக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

எதிரணியைச் சேர்ந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் உட்பட 8 பேர் ஆதரவாக வாக்களித்தார்கள்.

20ஆவது திருத்தத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் தேசிய கூட்டமைப்பு என்பன வாக்களித்திருந்தன.

வாக்கெடுப்பின் போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே-சன வாக்கெடுப்பின் போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதற்கமைய, கடந்த இருதினங்களாக காலை 10.00 மணி முதல் இரவு 7.30 மணிவரை இடம்பெற்ற 20 ஆவது திருத்த சட்டமூலம் மீதான விவாதம், நீதி அமைச்சர் அலி சப்ரி ஆரம்பித்து வைத்தார்.

எதிரணி சார்பில் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எம்.பி விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றினார்.

இரவு 7.30 மணிக்கு விவாதம் நிறைவடைந்த நிலையில் குழுநிலையில் திருத்தங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன.

இதன்போது ஆளும் தரப்பு சார்பில் சுமார் 50 திருத்தங்களும் எதிரணி சார்பில் சுமார் 57 திருத்தங்களும் முன்வைக்கப்பட்டன.

இதற்கமைய, தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற குழுத்தலைவர் அநுர குமார திஸாநாயக்க இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பை கோரியிருந்தார்.

அதற்கமைய 2/3 பெரும்பான்மை வாக்குகளால் 20ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

# கனடாவின் மத்திய அரசு தொகுதியான TORONTO CENTRE இற்கான இடைத் தேர்தல் இம்மாதம் 26 திகதி நடைபெறுகின்றது

TORONTO CENTRE BY-ELECTION WILL BE ON OCTOBER 26TH, 2020. THIS RIDING BECAME VACANT, DUE TO THE RESIGNATION OF THE FORMER LIBERAL FINANCE MINISTER BILL MORNEAU



கனடாவின் ஆளும் லிபரல் அரசாங்கத்தின் நிதி அமைச்சராக இருந்த Bill Morneau அவர்களின் திடீர் இராஜினாமாவைத் தொடர்ந்து வெற்றிடமாகிய ஒன்ராரியொ மாகாணத்தில் உள்ள மத்திய அரசு தொகுதியான Toronto Centre இற்கான இடைத் தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26ம் திகதி நடைபெறுகின்றது.



மேற்படி இடைத்தேர்தலில் ஆளும் லிபரல் கட்சியின் வேட்பாளராக தொலைக்காட்சி ஒளிபரப்பாளராவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் நன்கு அறியப்பட்ட கறுப்பினப் பெண்மணி Marci Ien போட்டியிடுகின்றார். கொன்சர் வேர்ட்டிவ் கட்சியின் வேட்பாளராக Benjamin Gauri Sharma போட்டியிடுகின்றார். கிறீன் கட்சி எனப்படும் பசுமைக் கட்சியின் வேட்பாளராக அண்மையில் நடைபெற்ற கட்சியின் தலைவருக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ரொரன்ரோ மாநகரில் சட்டத்தரணியாகவுள்ள Annamie Paul போட்டியிடுகின்றார். கனடிய என்டிபி (புதிய ஜனநாயகக் கட்சி)யின் வேட்பாளராக Brian Chang போட்டியிடுகின்றார். கனடா மக்கள் கட்சியின் வேட்பாளராக Bajit Bawa போட்டியிடுகின்றார்.



வேட்பாளர்கள் தங்கள் பிரச்சாரப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

தற்போதைய கோவிட்-19 தொற்று உள்ள சூழ்நிலையில் இந்த தேர்தல் ஆளும் லிபரல் கடசிக்கு மட்டுமல்ல, ஏனைய கட்சிகளுக்கும் ஒரு சவாலாகவே இருக்கும் என அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

-------------------------------------------------

*கனடா உதயன் செய்திப் பிரிவு*

# இந்தியா செல்ல விரும்பும் வெளிநாட்டினர்களுக்கான விசா கட்டுப்பாடுத் தளர்வை இந்தியா அறிவித்தது




கொவிட்-19 தொற்றை முன்னிட்டு, சர்வதேச பயணிகளின் போக்குவரத்தை குறைக்க, கடந்த பிப்ரவரி மாதம் முதல் மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வந்தது. இந்நிலையில் இந்தியா வர விரும்பும் அல்லது இந்தியாவை விட்டு செல்ல விரும்பும் வெளிநாட்டினர் மற்றும் உள்நாட்டினருக்கு விசா மற்றும் பயண கட்டுப்பாடுகளுக்கு தரப்படியான தளர்வு வழங்க மத்திய அரசு தற்போது முடிவு செய்துள்ளது. வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவழியினர் மற்றும் இதர வெளிநாட்டினர் அனைவரையும்(சுற்றுலா விசா தவிர) பிற தேவைகளுக்காக இந்தியா வர அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வந்தே பாரத் திட்டம், சிறப்பு விமான போக்குவரத்து ஏற்பாடு, அல்லது விமான போக்குவரத்து துறை அமைச்சகம் அனுமதிக்கும் வர்த்தக விமானங்கள் மூலம் பயணிகள் வரலாம். ஆனால், அனைத்து பயணிகளும், கொவிட்-19 தொடர்பான வி'யத்தில் தனிமைப்படுத்துதல் உட்பட மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களை கடுமையாக பின்பற்ற வேண்டும். இந்த தரப்படுத்தப்பட்ட தளர்வின் கீழ், தற்போதுள்ள அனைத்து விசாக்களையும்(எலக்ட்ரானிக் விசா, சுற்றுலா விசா தவிர) உடனடியாக வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த விசாக்கள் காலாவதியானாலும், சம்பந்தப்பட்ட பிரிவுகளின் புதிய விசாக்களை இந்திய தூதரகங்களிடம் இருந்து பெற முடியும். மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா வர விரும்பும் வெளிநாட்டினர், தங்கள் மருத்துவ உதவியாளர்களுக்கும் சேர்த்து மருத்தவ விசாவுக்கு விண்ணப்பிக்க முடியும். மத்திய அரசின் இந்த முடிவால் வர்த்தகம், மாநாடு, வேலைவாய்ப்பு, படிப்பு, ஆராய்ச்சி மற்றும் மருத்துவ தேவைகளுக்காக வெளிநாட்டினர் இந்தியா வர முடியும்.

# தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியாக போராட்டங்களை நசுக்குவதற்கான திட்டமும் 20வது திருத்தச் சட்டத்திற்கு பின்னால் இருப்பதை நான் உணர்கின்றேன்

*(3ம் பக்கத் தொடர்ச்சி)*

*– பாராளுமன்றத்தில் நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு*

சட்டத்தின் பின்னால் இருப்பதாக உணர்வதாக அச்சம் வெளியிட்டார்.

யார் யார் எல்லாம் இந்த 20 ஆவது சட்ட திருத்தத்தை கொண்டு வருவதற்கு இன்று பாடுபடுகிறார்களோ, யார் யார் எல்லாம் இதற்கு ஆதரவு அளிக்கிறார்களோ அவர்கள் எல்லோரும் எதிர்காலத்தில் இதே சட்ட திருத்தத்தை நீக்க வேண்டும் என்று வீதிகளில் இறங்கி போராடும் நிலை நிச்சயம் ஏற்படும் என்றும் கட்சி பேதம் இன்றி அனைவரும் ஒன்று சேர்ந்துஇந்த சட்ட திருத்தத்தை தோற்கடிக்க வேண்டும் என்றும் விக்னேஸ்வரன் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

விக்னேஸ்வரன் தனது உரையில் மேலும் கூறியதாவது,

மத்தியில் ஒவ்வொரு கட்சியும் ஆட்சிப்பீடம் ஏறும்போது நாட்டைப் பற்றிச் சிந்திக்காது, நாட்டு நலன்கள் பற்றிச் சிந்திக்காது தமது கட்சிகளின், அங்கத்தவர்களின், ஆதரவாளர்களின் நலன்களை முதன்மைப்படுத்தி சட்டங்களை இயற்றிவருவது இந் நாட்டின் துர்தி'ட வரலாறாகத் தொடர்ந்து வந்துள்ளது. லீ குவான் யூ க்களாக பரிணமிக்க விரும்புபவர்கள் தமது பக்கசார்பான சிந்தனைகளைக் கைவிட்டால்த்ததான் நாட்டிற்கு நன்மை செய்யலாம். லீ குலான் யூ சீன பௌத்த பாதையில் செல்லவில்லை. அவர் சிங்கப்பூர் மக்கள் அனைவரையும் நேசிப்பவர். சிறுபான்மையினரை பயங்கரவாதிகள் என்று சிந்திப்பது பெரும்பான்மையினரிடம் இருந்து வாக்குகளைப் பெற்றுக் கொடுக்கும். ஆனால் நாட்டை முன்னேற்றவிடாது. ஆகவே இந்த 20வது திருத்தச்சட்டம் மூலமாக அதிகாரத்தை தனிமனிதர் ஒருவரிடம் குவிக்கும் எண்ணத்துடன் தான் கொண்டுவரப்பட்டுள்ளது. இது ஜனநாயகத்திற்கும் மனித உரிமைகளுக்கும் சாவு மணி அடிக்கப் போகின்றது.

மனித நாகரிகம் முன்னேற முன்னேற எவ்வாறு ஜனநாயக பண்புகளை மேலும் மேம்படுத்தி மனித உரிமைகள், சமத்துவம் மற்றும் சகவாழ்வுடன் கூடிய வாழ்க்கையினை ஏற்படுத்தலாம் என்று உலக நாடுகள் சிந்தித்து செயற்பட்டுவரும் இந்தவேளையில் ஜனநாயகத்துக்கு சாவு மணி அடித்து நல்லாட்சிக்குரிய பண்புகளை குழிதோண்டி புதைக்கும் விசித்திரம் இந்த நாட்டில் இடம்பெறுகின்றது. ஜனநாயகத்தில் இருந்து சர்வாதிகாரத்தை நோக்கி ஆட்சி பண்புகளின் பரிணாமம் திசை மாறுவதற்கான காரணம் வெறுமனே பதவி மோகம் என்று மட்டும் நான் பார்க்கவில்லை. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சில அரசியல் நிகழ்வுகளுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக நான் இதனை பார்க்கின்றேன். தமிழ் மக்கள் தம் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராகவும் உரிமைகளை வென்றெடுப்பதற்கு மேற்கொண்டு வரும் ஜனநாயக ரீதியாக போராட்டங்களை மேற்கொள்வதற்கு காணப்படும் ஒரு சில ஜனநாயக இடைவெளிகளையும் அடைத்து இம்புக் கரம் கொண்டு எமது போராட்டத்தை நசுக்குவதற்கான ஒரு நிகழ்ச்சி திட்டமும் இதன் பின்னால் இருப்பதாக நான் கருதுகின்றேன்.

ஜனாதிபதி செயலணி (Task force) என்ற அமைப்பின் கீழ் சிறுபான்மையினரின் காணிகள் திணைக்களங்களினால் கையேற்கப்படுகின்றன. பாதுகாப்பு என்ற போர்வையின் கீழ் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட படை-யினர் தமிழ்ப்பேசும் மக்கள் தமது உணர்வுகளையும் அபிலாஷைகளையும் வெளிக்கொண்டுவராது அவர்களை கட்டுப்படுத்த வடக்கு கிழக்கில் குவித்துள்ளார்கள். வனத் திணைக்களம் போன்றவை மக்களின் பாரம்பரிய காணிகளைக் கையேற்றுக் கொண்டிருக்கின்றனர். அரச அரவணைப்பின் பின்னணியில் சட்டத்திற்கு புறம்பாக எமது வளங்கள் சூறையாடப்பட்டுவருகின்றன. மகாவலியின் கீழ் பிற மாகாண மக்கள் எங்கள் மாகாணங்களில் குடியேற்றப்படுகின்றனர். ஆனால் வாக்குறுதி அளித்த மகாவலி நீர் ஒரு சொட்டேனும் வடக்கு நோக்கி வரவில்லை. எமது எந்திரிகளின் கூற்றுப்படி அது என்றுமே வராது. இது தான் வடக்கு கிழக்கின் இன்றைய நிலைமை.

உலகில் அநேகமான நாடுகளில் ஜனாதிபதி முறை ஆட்சி இல்லை. அப்படியாயின் அந்த நாடுகளில் எல்லாம் பாதுகாப்பு பிரச்சனை இருக்கிறதா? அல்லது ஜனாதிபதி முறையுள்ள நாடுகளில் பாதுகாப்பு பிரச்சினை இல்லாமல் இருக்கின்றதா? ஆகவே மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவதை தவிர்த்து இந்நாட்டின் சாபமாக உள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை முற்றாக களைந்து மக்களுக்கு நேரடியாக பொறுப்புக்கூறக் கூடிய சட்டத்தின் ஆட்சியை பலப்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும். நீதித்த துறை, பொலிஸ் துறை போன்ற நிறுவனங்கள் சுயாதீனத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி சிந்திப்பதே நாட்டை பற்றி நேசிக்கும் ஒவ்வோருவரின் கடமையாகும்.

நீதித்துறை, காவல்த்துறை மற்றும் பொது அலுவலர் சேவையை ஒரே நிறைவேற்று ஜனாதிபதியின் மேற்பார்வையின் கீழ்க் கொண்டுவருவது பாரிய எதிர்விளைவுகளை எதிர்காலத்தில் உண்டாக்கும்.

இந்த அரசு இன்னும் 6 மாதகாலத்தில் புதிய அரசியல் அமைப்பை கொண்டுவர உள்ளதாக தெரிவிக்கும் போது இத்தகைய ஒரு சட்ட திருத்தத்தை அவசரகதியில் கொண்டுவர முனைவதானது அவர்களுக்கு பின்னால் இருக்கும் இரகசிய நிகழ்ச்சி நிரல் ஒன்று இருப்பதையே தெட்டத் தெளிவாக காட்டுகின்றது.

ஒரு உதாரணத்தை இனித் தருகின்றேன்.

குழுநிலை நேர திருத்தங்களின் போது நடைபெறப்போகும் 20வது திருத்தச்சட்டத் திருத்தங்கள் கணக்காளர் நாயகத்தின் அதிகாரங்களை கட்டுப்படுத்தவிருக்கின்றன. அரசாங்கம் அல்லாது அரச கூட்டுத்தாபனம் நூற்றிற்கு ஐம்பது சதவீதப் பங்குகளைக் கொண்டிருக்கும் கொம்பனிகள் கணக்காய்வுக்கு கணக்காளர் நாயகத்தால் உட்படுத்தப்பட வேண்டும் என்ற அரசியல் யாப்பில் ஏற்பாடுகள் வெளியேற்றப்படவிருக்கின்றன.

அப்படியானால் ஜனாதிபதியின் செயலகமும், பிரதம மந்திரியின் செயலாளரும் முன்னர் கணக்காளர் நாயகத்தின் ஆய்வில் இருந்து நீக்க நடவடிக்கை எடுத்து பின்னர் இருவரையும் குழுநிலை நேர திருத்தப்படி திரும்பவும் ஆய்வுக்கு உட்படுத்த விளைந்த காரணம் யாது? முக்கியமான கேள்வி என்னவென்றால் அரசாங்கத்தால் உரிமை கொண்டாடப்படும் கம்பனிகள் இதுவரை காலம் நடைபெற்ற கணக்காளர் ஆய்வில் இருந்து இன்று நீக்கப்பட்டுள்ளமையின் காரணம் யாது?

யார் யார் எல்லாம் இந்த 20 ஆவது சட்ட திருத்தத்தை கொண்டு வருவதற்கு இன்று பாடுபடுகிறார்களோ, யார் யார் எல்லாம் இதற்கு ஆதரவு அளிக்கிறார்களோ அவர்கள் எல்லோரும் எதிர்காலத்தில் இதே சட்ட திருத்தத்தை நீக்க வேண்டும் என்று வீதிகளில் இறங்கி போராடும் நிலை நிச்சயம் ஏற்படும் என்பதை நான் பொறுப்புடன் கூறிக்கொள்கிறேன். இதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். இன்று நீங்கள் கொண்டுவரும் இந்த சட்ட திருத்தும், உங்கள் மீதும், உங்கள் பிள்ளைகள் மற்றும் எதிர்கால உங்கள் சந்ததியினர் மீதும் ஒரு பூமராங் போல மாறும். உங்கள் கண்களை உங்கள் விரல்களினாலேயே குத்தாதீர்கள். இரண்டு தரப்பிலும் உள்ள எனதருமை சகாக்களே! இந்த 20 ஆவது சட்ட திருத்தம் நாளை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட அனுமதிக்காதீர்கள்.

மனித உரிமைகள், ஜனநாயகம், நல்லாட்சி மற்றும் சமாதானம் ஆகியவற்றை நேசிக்கும் அனைவரும் எமக்கு இடையேயான கட்சி வேறுபாடுகளை மறந்து இந்த சட்ட திருத்தம் நிறைவேற்றபப்டுவதை தடுக்கவேண்டும்.'' என்றார் அவர்.

# பிரித்தானியாவில் விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்பாக மஹிந்த ராஜபக்சவின் நம்பிக்கை



தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை பிரிட்டன் அரசு தொடர்ந்து நீடிக்கும் எனத் தாம் நம்புவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மீதான பிரிட்டனின் தடை தவறானது என பிரிட்டனின் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் மேன்முறையீட்டு ஆணைக்குழு நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

இந்நிலையில் நேற்று தனது டுவிட்டரில் பிரதமர் மஹிந்த இவ்வாறு பதிவிட்டுள்ளார். "இலங்கை அரசு விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஆனால், விடுதலைப்புலிகளின் செயல்பாடுகள் உலகம் முழுவதும் மிகவும் சுதந்திரமாகச் செயல்பாட்டில் உள்ளன.

அத்துடன் இது எந்தவொரு நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கின்றது. இவ்வாறான நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை பிரிட்டன் அரசு தொடர்ந்து நீடிக்கும் என நம்புகின்றேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நவம்பர் 3 தேர்தலில் சட்டவிரோதமான வெற்றியை ஈட்டுவதே டொனால்ட் ட்ரம்பின் தீவிர நோக்காகும்



அண்மையில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் நடைபெறவுள்ள அமெரிக்கத் தேர்தல் பற்றி கருத்துக்கள் கூறும் போது பின்வருமாறு தெரிவித்தார். "நவம்பர் 3ம் திகதி நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அந்நாட்டில் பாரதூரமான விளைவுகள் உண்டாகும், அது எமது நாட்டின் அரசியலையும் பாதிக்கும். எனவே அதை எதிர்கொள்ள கனடிய அரசாங்கமும் , கனடியர்களான மக்கள் அனைவரும் தயாராக இருக்க வேண்டும்" என்று மறைமுகமாகக் குறிப்பிட்டார்.

இதைப்போன்றே இலங்கையில் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு கொண்டு வரப்படவிருக்கும் 20வது திருத்தச் சட்டம் கூட அந்த நாட்டில் சர்வாதிகார ஆட்சிக்கு வழி சமைப்பதாகவு இருக்கப்பபோகின்றது என்பதையும் இலங்கையில் எதிர்க்கட்சிகள் சொல்லி வருகின்றன. அவற்றை மேலும் விரிவாக மக்களுக்கு எடுத்துச் சொல்ல, இலங்கையில் ஒரு சரியான இடதுசாரி இயக்கம் இல்லாமல் போய்விட்டது என்பதும் கவலைக்குரியதே.

இதைப்போன்றே இந்தியாவில் பிரதமர் மோடி, ககல அரச வளங்களையும் தனியாருக்கு தாரைவார்க்கவே திட்டமிடுவதாகவே தெரிகின்றது, இவ்வாறு முதலாளித்துவ சக்திகளுக்கு நாட்டின் பொருளாதார வளங்கள் செல்லுகின்றபோது, நாட்டின் அதிகாரத்தை கொண்டு நடத்துவதற்கு முதலாளித்துவம் என்றும் ஆதரவாக இருக்கும் என்பதே பிரதமர் மோடியின் நம்பிக்கை.

ரஸ்யாவிலும் இதே நிலை தான். புட்டின் என்னும் ஜனாதிபதி ஆயுள்கால ஜனாதிபதியாக இருப்பதையே நோக்கமாகக் கொண்டு நாட்டின் சட்ட வரைபுகளையே மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் கசிந்து வருகின்றன.

இவ்வாறு பார்க்கும் போது உலகில் உள்ள பல நாடுகளில் பாதிக்கப்பட்ட மக்கள் போராட்டங்களை நடத்த வேண்டிய நிலை தோன்றி உலகெங்கும் அநியாயங்கள் நடந்து அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்ற நிலை தோன்ற வாய்ப்புக்கள் உள்ளன என்று முற்போக்குச் சிந்தனை கொண்டவர்கள் ஆய்ந்து முடிவகளை வெளியிட்டு வருகின்றார்கள்.

இதேவேளைஈ அமெரிக்காவில், டொனால்ட் ட்ரம்புக்கும் ஜோசப் பைடெனுக்கும் இடையே அண்மையில் நடந்த விவாதத்தின் சீர்கெட்ட காட்சி, வரலாற்றில் அமெரிக்காவினது உண்மையின் தருணமாக நினைவுகூரப்படும். என்றென்றைக்கும் பாதிப்பற்ற அமெரிக்க ஜனநாயகம் குறித்த மாயை சிதைந்துள்ளது. அரசியல் யதார்த்தம் பெருநிறுவன-நிதியியல் செல்வந்த தட்டுக்களின் அடுக்கடுக்கான எண்ணற்ற வஞ்சக பிரச்சாரத்தினால் வெடித்து சிதறி, ஒரு ஜனாதிபதி சர்வாதிகாரத்தை ஸ்தாபிக்கவும் அரசியலைப்புரீதியில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளை நசுக்கவும் வெள்ளை மாளிகை மிகவும் முன்னேறிய சூழ்ச்சியின் அரசியல் நரம்பு மண்டலத்தின் மையமாக உள்ளது என்ற மறுக்க முடியாத உண்மை அம்பலப்பட்டுள்ளது.

செவ்வாயன்று இரவு ட்ரம்ப் வெளியிட்ட உறுமலும் குரைப்பும் சந்தேகத்திற்கிடமின்றி அவரின் உத்தேசங்களை வெளிப்படுத்துகின்றன. ஹிட்லர் அவரின் Mein Kampf இல் எழுதிய அளவுக்கு ட்ரம்பும் அந்த விவாதத்தின் போது அவர் வைத்த அச்சுறுத்தல்களில் கடுமையாக உள்ளார். ட்ரம்ப் இந்த நவம்பர் தேர்தலை, கடந்த ஜூனில் வாஷிங்டன் டி.சி. இல் அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிராக இராணுவம் மற்றும் பொலிஸ் படைகளை அவர் கட்டவிழ்த்து விட்ட போது தொடங்கிய அரசியல் ஆட்சிக்கவிழ்ப்பு சதியின் ஒரு தொடர்ச்சியாக பார்க்கிறார்.

ட்ரம்பின் அரசியல் மூலோபாயம் மிகவும் அப்பட்டமாக இருப்பதுடன், "படுகொலை! பின்னர் போர் நாய்கள் கட்டவிழ்த்து விடப்படும்" ("Cry 'Havoc' and let slip the dogs of war") என்ற தரங்குறைந்த வார்த்தையில் அதை தொகுத்தளிக்க முடியும். சதி பின்வருமாறு கட்டவிழ்த்து விடப்படும்:

முதலில், வாக்கு எண்ணிக்கையில் மில்லியன் கணக்கிலான வாக்கு வித்தியாசத்தில் அவர் தேர்தல் தோல்வியைக் காட்டும் என்று அவர் முழுவதுமாக எதிர்பார்ப்பதால், ட்ரம்ப் வாக்கு எண்ணிக்கையைச் சட்டவிரோதமாக்கும் உத்தேசத்துடன் வாக்குப்பதிவு நிகழ்முறையைச் சீர்கெடுக்க, தேர்தல் பிரச்சாரத்தின் எஞ்சியுள்ள மாதங்களில், அவரால் ஆன அனைத்தையும் செய்வார். வாக்காளர்களைப் பீதியூட்டி வாக்குச்சாவடிகளில் வன்முறை நடவடிக்கைகளை நடத்த, பொலிஸ் மற்றும் அடையாளந்தெரியாத மத்திய அரசு முகவர்களைக் கொண்டு அவர்களின் உதவியுடன், பாசிசவாத குண்டர்களைத் தூண்டிவிட, வாக்குப்பதிவு மோசடி குறித்து இட்டுக்கட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களை அவர் பயன்படுத்துவார்.

இரண்டாவதாக, தேர்தல் நாள் இரவு ட்ரம்ப், மின்னஞ்சல் மூலமாக இடப்பட்ட வாக்குகள் அனைத்தும் செல்லாதவை என்று கூறி, அவரே ஜெயித்து விட்டதாக அறிவிக்கக்கூடும். வாக்குகளை அழித்தும் இதர வடிவங்களில் மோசடி செய்தும் தேர்தல் "சீர்குலைக்க" பட்டால் மட்டுமே அவர் தோற்கக்கூடும் என்றவர் அந்த விவாதத்தின் போது மீண்டும் மீண்டும் கூறினார். கருத்துக்கணிப்புகளில் அவர் பலமாக முன்னணியில் இருக்கிறார் என்றாலும், முக்கிய தேர்தல்கள மாநிலங்களில் வெற்றியை அறிவிக்க அவருக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்ளும் விதத்தில் மின்னஞ்சல் மூலமாக இடப்பட்ட வாக்குகளை எண்ணுவதில் தாமதம் ஆவதை எதிர்நோக்குகிறார்.

மூன்றாவதாக, ட்ரம்ப் தேர்தல் நாளான நவம்பர் 3 க்கும் பதவியேற்பு தினமான ஜனவரி 20 க்கும் இடையே உள்ள 10 வாரங்களில் அவரது ஆதரவாளர்களை வீதிகளில் அணிதிரட்டவும், அதேவேளையில் தேர்தலை அவருக்குச் சாதகமாக காட்ட ஏற்கனவே அவரது ஆட்கள் குவிக்கப்பட்டிருக்கும் உச்ச நீதிமன்றத்திடம் செல்லவும் பயன்படுத்தக்கூடும். "வாக்கெடுப்பைக் கவனிக்க" அவர் நீதிமன்றத்தை "எதிர்நோக்குவதாக" செவ்வாய்கிழமை அவர் மீண்டும் தெரிவித்தார். அவருக்கு குடியரசுக் கட்சியின் முழு ஆதரவு உள்ளது, தேர்தல் சம்பந்தமான எந்தவொரு நீதிமன்ற முடிவிலும் தீர்மானிக்கும் வாக்கை வழங்கும் ஒரு இடத்தில் விரைவாக ட்ரம்பின் உச்சநீதிமன்ற நியமனமான Amy Coney Barrett ஐ உறுதிப்படுத்துவதை நோக்கி குடியரசுக் கட்சி அழுத்தமளித்து வருகிறது.

பொலிஸ் மற்றும் இராணுவத்தின் பிரிவுகளுக்குள் இருக்கும் ஆதரவையும், அத்துடன் உள்நாட்டு பாதுகாப்புத்துறை மீதான அவர் கட்டுப்பாட்டையும் ட்ரம்ப் கணக்கில் கொண்டுள்ளார். DHS இன் தற்காலிக செயலர், ட்ரம்பின் நெருங்கிய நண்பரான சாட் வொல்.்.ப் இம்மாதம் டென்வர் மற்றும் பிலடெல்பியா போன்ற "சரணாலய நகரங்களில்" புலம்பெயர்வு மற்றும் சுங்க அமலாக்கத்துறை மூலமாக புலம்பெயர்வு சோதனைகளை நடத்த தயாரிப்பு செய்து வருகிறார். தேர்தலுக்கு முன்னதாக பல பிரதான பெருநகரங்களில் மத்திய அரசின் துணை இராணுவப்படைகள் அணித்திரட்டப்படும்.

இறுதியாக, அவர் சூழ்ச்சியின் வெற்றிக்கு எல்லாவற்றையும் விட மிக முக்கியமாக, ட்ரம்ப் ஜனநாயகக் கட்சியின் முதுகெலும்பற்ற தன்மையைக் காரணியாக கொண்டுள்ளார். ஒரு சில வெற்று அச்சுறுத்தல்களை உதிர்ப்பதற்கு அப்பாற்பட்டு ஜனநாயகக் கட்சியினர் அவரை தடுக்க ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று அவர் முழுமையாக எதிர்பார்க்கிறார்.

ஜனநாயகக் கட்சியின் மானக்கேடான திவால்நிலைமை செவ்வாய்கிழமை இரவே காட்சிக்கு வந்தது. பாசிசவாதத்தை நோக்கி நகர்ந்து வரும் ஆளும் வர்க்கத்தின் வக்கிரத்தனத்திற்கு ட்ரம்ப் ஆளுருவாக உள்ள நிலையிலும், பலவ-ீனமான மற்றும் உதறலெடுத்த பைடென் முதலாளித்துவ ஜனநாயகத்தின் மரண படுக்கையில் அதற்குச் சரியான உதாரணமாக திகழ்கிறார். அவர் எதிர்ப்பாளர் உள்நாட்டு போர் மற்றும் சர்வாதிகாரத்திற்குத் தயாரிப்பு செய்து வருகிறார் என்ற உண்மையைத் தட்டிக்கழித்து, "இது தான் உடன்படிக்கை" என்று முடிவின்றி ஒத்தூதியவாறு, பைடென், அந்த விவாதத்தில் 90 நிமிடங்கள் செலவிட்டார். வாக்குகள் எண்ணப்பட்டதும், அரசியல் நெருக்கடி தீர்ந்துவிடும், அனைத்தும் வழமைக்குத் திரும்பிவிடும் என்றவர் அர்த்தமின்றி அறிவித்தார்.

ட்ரம்புக்கு எதிராக எந்தவொரு மக்கள் அணித்திரள்வையும் தடுப்பதற்காக, யதார்த்தத்தை மூடிமறைக்கவும் மற்றும் குறைத்துக் காட்டவும் அதனால் ஆனமட்டும் அனைத்தையும் செய்வதே ஜனநாயகக் கட்சி வகிக்கும் பாத்திரமாக உள்ளது. உச்சநீதிமன்ற வேட்பாளர் Amy Barrett ஐ அவர் எதிர்க்கவில்லை என்று அறிவிக்கும் அளவுக்கு பைடென் அவர் வழியில் சென்றார். நீதிமன்றத்திற்கு வந்ததும் அவர் பைடெனின் அரசியல் சவப்பெட்டிக்கு ஆணி அடிப்பவராக மாறுபவர்களில் ஒருவராக இருப்பார் என்ற போதும் கூட, அப்பெண்மணியை "ஓர் அருமையான நபர்" என்றவர் புகழ்ந்தார்.

அந்த ஜனநாயகக் கட்சி வேட்பாளர் சாண்டர்ஸின் "அதி இடது அறிக்கையை" ஆதரிப்பதாக ட்ரம்ப் பைடெனைச் சீண்டிய போது, "பெரிதும் ஒட்டுமொத்த வெறுப்புடன்" நான் பேர்ணி சாண்டர்ஸைத் தோற்கடித்தேன்," என்று கூறி பைடென் இடதுசாரி அரசியலுடன் அவருக்கு தொடர்பில்லை என்று விடையிறுத்தார்.

பாசிசவாத Proud Boys அமைப்புக்கு ட்ரம்ப் வார்த்தையளவில் வீரவணக்கம் கூறியதற்கும் கூட பைடென் எந்தவித விடையிறுப்பும் காட்டவில்லை. தேர்தலில் போட்டி நிலவுவதால், அவரின் சொந்த ஆதரவாளர்களை "அமைதியாக இருக்க" கோருவதற்கு அவர் உறுதியளித்தார், அதேவேளையில் ட்ரம்போ அவர்கள் அணித்திரட்டப்பட்டு முடிவுகளைச் சவால்விடுப்பார்கள் என்று வலியுறுத்தினார்.

ஜனநாயகக் கட்சியை ஆதரிப்பதன் மூலமாக சர்வாதிகாரத்தைத் தவிர்த்துவிடலாம் என்று நம்புவது, ஒருவர் யதார்த்தத்தின் முன்னால் கண்களை மூடிக் கொள்வதாக இருக்கும். ஜனநாயகக் கட்சியினரின் செயல்பாடுகள் வார்த்தையளவில் ஜனநாயகத்திற்கு அர்பணிப்பதன் மீதல்ல, மாறாக அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் வர்க்க நலன்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

சர்வாதிகார அச்சுறுத்தலை எதிர்ப்பதற்கான எந்தவொரு மூலோபாயமும், அரசியல் நெருக்கடிக்கு அடியிலிருக்கும் காரணங்களைச் சரியாக புரிந்து கொள்வதன் அடிப்படையில் இருக்க வேண்டும். ட்ரம்ப் வெகுவாக ஆழ்ந்த ஒரு நோயின் வெளிப்பாடாவார், அதன் தோற்றுவாய்களையும் தன்மையையும் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

## மானிப்பாய் இந்துக் கல்லூரி – மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கனடா

சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர் வரும் November 15, 2020 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02:00 மணிக்கு ஒரு இணைய வழி தொலைமுறைக்கூட்டமாக நடைபெறவுள்ளது.

இப்பொதுக் கூட்டத்திற்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவ மாணவிகள் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம். இவ்வாண்டுப் பொதுக்கூட்டத்தை நாம் காணொலி மூலம் நடத்தலாமென்று முடிவு செய்துள்ளோம். அதன் பிரகாரம், பங்குபற்றுவோர், தயவு செய்து முன்கூட்டியே உங்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். பதிவு செய்தவர்க்கு இணையத்தள இணைப்பொன்றை பிற்பாடு அனுப்பிவைப்போம்.

இவ்வாண்டுப் பொதுக்கூட்டம் அதன் ஊடகம் மாறினாலும் வழமைபோல் சங்கத்தின் எதிர்கால நோக்கங்கள், சங்க மேம்பாடுகள் பற்றி கலந்து பேசி அங்கத்தவர்களின் கருத்தை பெற இருப்பதால் அனைத்து பழைய மாணவ மாணவிகளையும் இக்கூட்டத்திற்கு சமூகமளித்து இதை முன்னெடுத்து செல்ல உதவுமாறு சங்க நிர்வாகக்குழு அன்புடன் கேட்டுக் கொள்கிறது. இதைத்தவிர புதிய அங்கத்தவர்களை அழைத்து வந்து சங்க நடவடிக்கைகளில் ஒன்றிணைந்து, சங்கத்தின் செயற்பாடுகளுக்கு உங்களுடைய ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை அளிக்குமாறும் வேண்டுகின்றோம்.

தொடர்புகட்கு: சி. விஜயகுமார்: 647-293-9924 சி. கணேசலிங்கம்: 416-499-6248
ச. வசந்தறாஜன் : 416-289-9008 சி. சுந்தரேஸ்வரன் : 519-465-1181

# இலங்கை 20வது திருத்தம் ஜனாதிபதிக்கு சர்வாதிகாரங்களை வழங்குவதை ஒரே நோக்கமாகக் கொண்டது

இந்த மாத தொடக்கத்தில், இலங்கை அமைச்சரவையானது அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்திற்கு ஒப்புதல் அளித்தது. இது பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு பெரும் சர்வாதிகார அதிகாரங்களை வழங்கும். ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி (ஸ்ரீ.ல.பொ.ஜ.மு.) அரசாங்கம், இந்த மசோதாவை அக்டோபர் மாதம் பாராளுமன்றம் நிறைவேற்றிக்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் சட்டமா அதிபர் இந்தத் திருத்தத்திற்கு சட்டப்பூர்வ ஒப்புதல் அளித்துள்ளதுடன், அரசியலமைப்புப்படி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றால், கருத்துக் கணிப்பு இல்லாமல் அதை அமுல்படுத்த முடியும் என்றும் தீர்ப்பளித்துள்ளார்.



ஆகஸ்ட் 5 நடந்த தேர்தலில், 225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் சுமார் 145 ஆசனங்களை ஸ்ரீ.ல.பொ.ஜ.மு. வென்றதுடன், பின்கதவு வழியான கொடுக்கல் வாங்கல் மூலமேனும், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கு போதுமான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற எதிர்பார்க்கின்றது.

ஜனாதிபதியின் சில அதிகாரங்களை கட்டுப்படுத்துவதால் அரசியலமைப்பின் 19 வது திருத்தத்தை ரத்து செய்வதற்காக ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது ராஜபக்'வும் அவரது ஸ்ரீ.ல.பொ.ஜ.மு.வும் பிரச்சாரம் செய்தனர். நாட்டை "அபிவிருத்தி" செய்வதற்கு "வலுவான மற்றும் நிலை-யான" அரசாங்கத்தை நிறுவுவதற்கு இது அவசியம் என்று அவர்கள் கூறினர்.

இது ஒரு பொய் ஆகும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முந்தைய ஆட்சி மீதான வெகுஜன எதிர்ப்பை பாசாங்குத்தனமாக சுரண்டிக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ராஜபக்ச, தொழிலாள வர்க்கத்தின் மீது பாய்வதற்காக சர்வாதிகார அதிகாரங்களை விரும்புகிறார். கொவிட்-19 தொற்றுநோய் நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நெருக்கடியை அதிகப்படுத்தியுள்ளது. தொழில்கள், ஊதியங்கள் மற்றும் வாழ்க்கை நிலைமைகள் மீதான அரசாங்கத்தினதும் முதலாளிகளினதும் தாக்குதல்களை அதிகரிப்பதற்கு எதிராக, தொழிலாளர்கள் மற்றும் ஏழைகள் மத்தியில் கோபம் அதிகரித்து வருகிறது.

ஜனாதிபதியின் சில நிறைவேற்று அதிகாரங்களை மட்டுப்படுத்திய 19 வது திருத்தம், 2015 ஏப்ரலில் சிறிசேன-விக்ரமசிங்க நிர்வாகத்தால் நிறைவேற்றப்பட்டது. அரசியலமைப்பு பேரவையின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியால் உயர் அரச அதிகாரிகள் மற்றும் நீதிபதிகளை மட்டுமே நியமிக்க முடியும் அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பது மற்றும் அவர்களின் செயல்பாடுகளை ஒதுக்குவதில் ஜனாதிபதியா-னவர் பிரதமரின் ஆலோசனையைப் பெற வேண்டும் ஜனாதிபதிக்கு இரண்டு முறை மட்டுமே பதவி வகிக்க முடியும், மற்றும் அதன் ஐந்தாண்டு காலத்தின் நான்கரை ஆண்டுகளை நிறைவு செய்யும் வரை பாராளுமன்றத்தை கலைக்க முடியாது, ஆகவை இந்த கட்டுப்பாடுகளில் அடங்கும்.

1978 அரசியலமைப்பில் ஸ்தாபிக்கப்பட்ட வெறுக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி பதவியை நீக்குவதாக வாக்குறுதியளித்தே, சிறிசேன அதிகாரத்தை வென்றார். உண்மையில், சிறிசேனாவிற்கு முன்னர் பதவியில் இருந்த இரண்டு ஜனாதிபதிகளான சந்திரிகா குமரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகி-யோரும், ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இதே வாக்குறுதியை கொடுத்தனர். பின்னர் அதை கைவிட்டு நிறைவேற்று அதிகாரங்களை அதிகபட்சமாக பயன்படுத்தினர்.

அவரது முன்னோடிகளைப் போலவே, சிறிசேனவும் தனது வாக்குறுதியைக் கைவிட்டுவிட்டு 19 வது திருத்தத்தை அறிமுகப்படுத்தினார். தமிழ் தேசிய கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மற்றும் பல்வேறு போலி-இடது குழுக்களும் சிறிசேனவின் திருத்தத்தை "ஜனநாயகத்திற்கான வெற்றி" என்று பொய்யாக அறிவித்தன.

ஸ்ரீ.ல.பொ.ஜ.மு. இன் 20 வது அரசியலமைப்புத் திருத்தம், ஜனாதிப-தியின் இரண்டு முறை பதிவிக்கால வரம்பை மட்டும் வைத்துக்கொண்டு, தற்போதைய அனைத்து அரசியலமைப்பு கட்டுப்பாடுகளையும் நீக்கி, பின்வரும் அதிகாரங்களை ஜனாதிபதியிடம் ஒப்படைக்க திட்டமிட்டுள்ளது:

- ஜனாதிபதியால் பிரதமரை நியமிக்கவும் முடியும் நீக்கவும் முடியும், மற்றும் அமைச்சர்களை நியமிப்பதில் பிரதமருடன் கலந்தாலோசிக்க தேவையில்லை. தற்போது, ராஜபக்ஷ அரசியலமைப்புக்கு முரணாக பாதுகாப்பு அமைச்சராக இருப்பதுடன், 23 பிரதான அரச நிறுவனங்களை மேற்பார்வையிடுகிறார்.
- பாராளுமன்றம் அதன் ஐந்தாண்டு காலத்தின் ஒரு வருடத்தை நிறைவு செய்த பின்னர் ஜனாதிபதியால் அதை கலைக்க நீக்க முடியும்.
- குற்றவியல் வழக்கு உட்பட எந்தவொரு வழக்குகளிலிருந்தும் ஜனாதிபதி விலக்கலிப்பு உள்ளவர், மேலும் அவர் மீது அடிப்படை உரிமை வழக்குகள் எதுவும் பதிவு செய்ய முடியாது.
- தேர்தல்கள், பொலிஸ், பொது சேவை, மனித உரிமைகள், லஞ்சம், ஊழல் மற்றும் நிதி தொடர்பான ஆணைக்குழுக்களின் தலைவர்களையும், அதே போல் உயர்நீதிமன்ற நீதிபதிகள், சட்டமா அதிபர் மற்றும் பிற உயர் அதிகாரிகளையும் ஜனாதிபதி நியமிக்க முடியும். இந்த நியமனங்களை பற்றி, பிரதமர், பாராளுமன்ற சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் அங்கத்தவர்களாக கொண்ட ஒரு உத்தேச பாராளுமன்ற பேரவையில் கலந்துரையாட முடியும். பாராளுமன்ற பேர-வையில் ஜனாதிபதி பங்குபற்றுவது கட்டாயமாக இருக்காது.

24 மணி நேரத்திற்குள் பாராளுமன்றத்தில் "அவசர மசோதாக்களை" நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கும், இதன் மூலம் நாட்டின் உயர் நீதிமன்றத்தில் இருந்து எந்தவொரு சட்ட சவாலையும் தவிர்த்துக்கொள்ள முடியும். பாராளுமன்றத்தில் எந்தவொரு மசோதாவிற்குமான திருத்தமும், அதன் "மதிப்பு மற்றும் அடிப்படைகளிலிருந்து" விலகிச் செல்ல முடியாது, அதாவது பாராளுமன்றத்தால் பெரிய மாற்றங்களைச் செய்ய முடியாது. இந்த விதி 1978 அரசியலமைப்பில் கிடையாது.

எவ்வாறாயினும், இந்த ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு அப்பால் செல்ல ஜனாதிபதி ராஜபக்ஷ விரும்புகிறார். உண்மையில், தற்போதைய அரசியலமைப்பு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



*(7ம் பக்கத் தொடர்ச்சி)*

அதன் “பொருத்தமற்ற தன்மை” காரணமாக 19 முறை திருத்தப்பட்டதாக அவர் கூறு-கிறார். மேலும் “ஒரு நாடு, அனைத்து மக்களுக்கும் ஒரு சட்டம்” என்ற அடிப்படையில் ஒரு புதிய அரசியலமைப்பிற்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். இத்தகைய நடவடிக்கை தமிழ் மற்றும் முஸ்லீம் சிறுபான்மையினர் தொடர்பான தற்போதைய சட்டங்களுக்கு குழிபறிப்பதுடன் இனவாத பாரபட்சங்களை தீவிரமாக்கும். ராஜபக்ஷ ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக, ஒன்பது அமைச்சரவை உறுப்பினர்களைக் கொண்ட, பிரதானமாக அவரது விசுவாசிகளை உள்ளடக்கிய, “நிபுணர் குழுவை” நியமித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு 1978 ஆம் ஆண்டில் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) அரசாங்கத்தால் நிறுவப்பட்டது. அதன் மூலம் நாட்டின் முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜே. ஆர். ஜயவர்தன பதவிக்கு வந்து, பாராளுமன்றத்தை ஒரு இரப்பர் முத்திரையாகவும் நீதித்துறையை ஒரு வெற்று நிறுவனமாகவும் மாற்றினார். தொழிலாளர்கள் மற்றும் ஏழைகளின் சமூக உரிமைகளை அபகரிப்பதன் மூலமும், மலிவான தொழிலாளர் நிலைமை-களை உருவாக்குவதன் மூலமும், அனைத்து சமூக எதிர்ப்புகளையும் நசுக்குவதன் மூலமும் இலங்கை பொருளாதாரத்தை முழுமையாக மாற்றுவதற்கும் நாட்டை பூகோள உற்பத்தியுடன் இணைப்பதற்குமே 1978 அரசியலமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது.

1948 இல் உத்தியோகபூர்வமாக சுதந்திமடைந்ததில் இருந்தே, தொழிலாள வர்க்கத்தை பிளவுபடுத்துவதற்கும், அதை பலவீனப்படுத்துவதற்கும் அடுத்தடுத்த ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பயன்படுத்தி வருகின்ற ஒரு நச்சு ஆயுதமான, திட்டமிட்ட தமிழர்-விரேத இனவாத ஆத்திரமூட்டல்களை அடுத்து, ஜெயவர்த்தன ஆட்சி அதை பிரிவினைவாத தமிழீழ விடுதலைக்கு எதிரான மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போராக மாற்றத் தொடங்கியது. 1980 ஜூலையில், வாழ்க்கை மற்றும் சமூக நிலைமைகள் மீதான அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிராக ஒரு பொது வேலைநிறுத்தத்தைத் தொடங்கிய 100,000 அரசாங்க ஊழியர்களை பணிநீக்கம் செய்யவும் இந்த நிறைவேற்று அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டன.

எவ்வாறாயினும், தற்போதைய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், வெறுமனே 1978 அரசியலமைப்பிற்கு திரும்பவில்லை. உலகளாவிய கொவிட்-19 தொற்றுநோயின் வளர்ந்து வரும் தாக்கத்தின் விளைவாக ஏற்றுமதி, சுற்றுலா மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் அனுப்பும் வருமானமும் வீழ்ச்சியடைந்ததன் காரண-மாக, இலங்கை முதலாளித்துவ வர்க்கம் ஆழ்ந்த நெருக்கடியில் சிக்கியுள்ளது. இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி மூன்று சதவிகிதம் எதிர்மறையாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதுடன், பணப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் அரசாங்கம் 2024 வரை ஆண்டுதோறும் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு கடனாகத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

உற்பத்தித் துறையில் 400,000 க்கும் மேற்பட்ட தொழில்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன், தனியார் துறையில் தொழிலாளர்களின் ஊதியம் குறைந்தது 30 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சக கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் தொழிலாளர்களின் வளர்ந்து வரும் எதிர்ப்பின் ஒரு பகுதியாக நாடு முழுவதும் சமூக பதட்டங்கள் அதிகரித்து வருகின்றன.

எதேச்சதிகார ஆட்சிக்கான ராஜபக்சவின் தயாரிப்புகள், பாசிச மற்றும் சர்வாதிகார ஆட்சி வடிவங்களை நோக்கிய அவரது சர்வதேச சகாக்களின் நகர்வுகளுக்கு ஏற்ப உள்ளன. அமெரிக்காவில், ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பாசிச சக்திகளை அணிதிரட்ட முயல்கிறார், அதே நேரத்தில் தொழிலாளர்கள் மற்றும் பொலிஸ் வன்முறைக்கு எதிராக போராடுபவர்களுக்கு எதிராக அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுகிறார். இந்தியாவில், பிரதமர் நரேந்திர மோடியின் பாரதிய ஜனதா கட்சி அரசாங்கம், அதன் முஸ்லீம்-விரோத தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருவதோடு, தொழிலாளர்கள் மற்றும் ஏழைகளுக்கு எதிராக அதிதீவிர வலதுசாரி சக்திகளை ஏவிவிடுவதற்கு செயற்படுகின்றது.

ராஜபக்ஷ ஏற்கனவே தனது நிர்வாகத்தில் சேவையில் உள்ள மற்றும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளைச் சேர்த்துள்ளதோடு இராணுவத்தை அடிப்படையாகக் கொண்ட ஜனாதிபதி சர்வாதிகாரத்திற்கான கட்டமைப்பை உருவாக்கி வருகிறார்.

இலங்கையின் எதிர்க்கட்சிகள் என்று கூறிக்கொள்பவற்றுக்கு, சர்வாதிகாரத்தை நோக்கிய அரசாங்கத்தின் நகர்வுகளுடன் அடிப்படை வேறுபாடுகள் எதுவும் கிடையாது, அவை முதலாளித்துவத்திற்கும் இலங்கையின் ஆளும் உயரடுக்கிற்கும் எதிராக அதிகரித்து வரும் தொழிலாளர்கள் மற்றும் ஏழைகளின் எதிர்ப்பைப் பற்றி பீதியடைந்துள்ளன.

மார்ச் 24 மற்றும் ஏப்ரல் 2 ஆகிய தினங்களில், இரண்டு அனைத்து கட்சி கூட்டங்களில் கலந்து கொண்டு, கோவிட்-19 க்கு ஜனாதிபதியின் பிரதிபலிப்பை பாராட்டி, ஐ.தே.க., ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் கூட்டமைப்பு, ஜே.வி.பி. மற்றும் முஸ்லீம் கட்சிகளும் தங்களது ஒத்துழைப்பை வழங்கி, ராஜபக்‘வையும் அவரது அரசாங்கத்தையும் பலப்படுத்தியுள்ளன. ஆகஸ்ட் 20 அன்று, அனைத்து எதிர்க் கட்சிகளும் ஜனாதிபதியின் பாராளுமன்ற கொள்கை அறிக்கைக்கு வாக்களிக்காமல் ஒப்புதல் அளித்தன.

இந்த வாரம் ஐக்கிய மக்கள் சக்தியானது கொழும்பு புறநகரில் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தி, “மக்களை அணிதிரட்டுவதன்” மூலம் 20 வது திருத்தத்தை தோற்கடிப்பதாக “உறுதியளித்தது”. இந்த வாய்ச்சவடால் வெகுஜனங்களைத் திசைதிருப்பி விடவும், அந்த எதிர்ப்பை பாராளுமன்றத்திற்கு வேண்டுகோள் விடுக்கும் முட்டுச் சந்துக்குள் திசை திருப்பிவிடவும் நோக்கமாக கொண்டது.

இதேபோல், ராஜபக்ஷ அரசாங்கத்தின் சர்வாதிகார திட்டங்களால் ஏற்படும் உண்மையான ஆபத்துக்களை மூடிமறைப்பதன் மூலம் தொழிலாள வர்க்கத்தை அரச-ியல் ரீதியாக திசைதிருப்ப ஜே.வி.பி. முயல்கிறது. செப்டம்பர் 4 அன்று பத்திரிகையாளர் சந்திப்பில் உரையாற்றிய ஜே.வி.பி. தலைவர் அனுர குமார திசாநாயக்க, புதிய அரசியலமைப்பு திருத்தம் “நாட்டின் நலன்களுக்காக அல்ல”, மாறாக “ஒரு பிரிவினருக்கு அரசியல் ரீதியாக பயனளிப்பதாக” அதாவது ராஜபக்ஷ குடும்பத்திற்கு பயணளிப்பதாக உள்ளது என அறிவித்தார்.

அதேபோல், முன்நிலை சோசலிசக் கட்சி (மு.சோ.க.) போன்ற போலி-இடது அமைப்புகளும், தொழிலாள வர்க்கத்தின் எந்தவொரு சுயாதீன அணிதிரள்வையும் தடுக்க இந்த வலதுசாரிக் கட்சிகளுடனும், தொழிற்சங்கங்களுடனும் அணிசேர்ந்து நிற்கின்றன.

செப்டம்பர் 4 அன்று பத்திரிகையாளர் சந்திப்பில் உரையாற்றிய மு.சோ.க. கல்விப் பிரிவு செயலாளர் புபுது ஜாகொட, “ஒரு தனிநபரின் எதேச்சதிகார ஆட்சி நாட்டிற்கு பயங்கர பேரழிவைத் தரும்” என்று அறிவித்து, 20வது திருத்தத்தை எதிர்க்குமாறு அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பரிதாபகரமாக வேண்டுகோள் விடுத்தார். விடுத்தது. ஆகஸ்ட் 5 நடந்த பொதுத் தேர்தல்களைத் தொடர்ந்து, “இடதுசாரி, குட்டி முதலாளித்துவ மற்றும் வலதுசாரிக் கட்சிகளின் முற்போக்கான பிரிவுகளுடன்” பொது பிரச்சினைகளில் இணைந்து பணியாற்ற மு.சோ.க. தயாராக உள்ளது என ஜாகொட அறிவித்தார்.

இலங்கையில் சர்வாதிகார ஆட்சியின் வளர்ந்து வரும் ஆபத்து குறித்து தொழிலாள வர்க்கத்தை தொடர்ந்து எச்சரித்த ஒரே அமைப்பு சோசலிச சமத்துவக் கட்சி (சோ.ச.க.) மட்டுமே ஆகும். அரசாங்கத்துக்கோ அல்லது எதிர்க்கட்சிகளுக்கோ விடுக்கும் எந்தவொரு வேண்டுகோளும், இலங்கை ஆளும் உயரடுக்கு மேம்படுத்தும் வலதுசாரி ஜனநாயக-விரோத நிகழ்ச்சி நிரலை மாற்றி அமைக்காது.

தொழிலாள வர்க்கம் தனது ஜனநாயக மற்றும் சமூக உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமெனில், முதலாளித்துவ வர்க்கத்தின் ஒவ்வொரு பிரிவினரிடமிருந்தும் முறித்துக் கொண்டு அதன் சொந்த சுயாதீன நலன்களைச் சுற்றி-அதாவது ஒரு புரட்சிகர சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில்- அணிதிரள்வதன் மூலம் மட்டுமே முன்னோக்கிச் செல்ல முடியும். இன பாகுபாடுகளுக்கு அப்பால் தொழிலாளர்களின் ஐக்கியத்திற்காகப் போராடுவதையும் மற்றும் ஒரு சர்வதேச சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் அரசாங்கத்திற்கான போராட்டத்தில் கிராமப்புற ஏழைகளையும் அணிதிரட்டுவதே இதன் அர்த்தமாகும்.

*நன்றி. - உலக சோசலிச வலைத்தளம்*

S7 Food Court Veg-Non Veg

# வாடகைக்கு தேவை

**இந்தியன் தமிழ் ஸ்டைல் ரெஸ்டாரன்ட் நடத்த இடம் வாடகைக்கு தேவை. இந்தியா தமிழ்நாடு, சென்னையில் இயங்கி வரும் S7 Food Court-ன் கிளையை திறக்க 1000 sqft Building மற்றும் car parking வாடகைக்கு தேவை.**

Contact:

**S7 SIVAN KUTTY**
**[Owner & Founder of S7 Groups]**

#24,25 AVM CINE LAB CAMPUS, NSK salai vadapalani, Chennai, Tamilnadu, India

Land Line ; +91 44 48685857

Whatsapp & call ; +91 9445859988

Email ; sivankuttythankamony@gmail.com

S7 PRODUCTIONS

# தமிழ் சினிமா தயாரிப்பிற்கு பாட்னர்கள் தேவை.

**2 கோடி ரூபாய் பட்ஜெட்டில் தமிழ் திரைப்படம் தயாரிப்பிற்கு பாட்னர்கள் தேவை. ரூபாய் 10 லட்சத்திலிருந்து ஒப்பந்த அடிப்படியில் முதலீடு செய்யலாம்.**

**Duration: 6 months**
**Profit: 50%**

Contact;

Producer: **S7 Sivan Kutty**
**S7 PRODUCTIONS**

Address;

#42 AVM CINE LAB CAMPUS, NSK salai vadapalani, Chennai, Tamilnadu, India.

Land Line ; +91 44 48685857

Whatsapp & call ; +91 9445859988

Email ; sivankuttythankamony@gmail.com

**குறிப்பு;**

**ரூபாய் 2 கோடி வீதம் 2 படங்கள் தயாரிக்கப்படுகிறது.**

# நிலவில் 4 ஜி வலையமைப்பு

**- சிவா பரமேஸ்வரன் & டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை**

ஹலோ...ஹலோ...நல்லபடி வந்து சேர்ந்தாச்சு ஆமா...ஆமா...தெளிவா கேக்குது...பிறகு பேசுறேன்...வெளிச்சம் வந்தவுடனே படமெடுத்து அனுப்புறேன்...சரி வச்சிடட்டா...

மொழிகளுக்கு அப்பாற்பட்டு இன்று உலகெங்கும் பயணிப்பவர்களின் அன்றாட பேச்சு இது. ஊர் போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுதவும், தந்தி அடிக்கவும் என்கிற காலமெல்லாம் மலையேறி பின்னர் தொலைபேசி இணைப்பைப் பெற வரிசையில் நின்று தகவல் தெரிவித்த நிலைமையும் மாறி, மொபைல் இல்லாதோருக்கு இவ்வுலகம் இல்லை எனும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வுலகம் சரி, மனிதன் அண்டவெளிகளை ஆராய்ந்து அங்கும் ஆளுமை செலுத்த நினைக்கிறான். அதன் முதல் படியாக அரை நூற்றாண்டுக்கு முன்னர் நிலவில் கால்பதித்து அறிவியல் உலகில் புதிய திருப்புமுனையை அமெரிக்க விண்வெளி அமைப்பான நாசா படைத்தது. அந்தப் போட்டியில் முன்னணியில் இருந்தாலும் கடைசியில் கைக்கு எட்டும் நிலையில் ரஷ்யா அதைக் கோட்டைவிட்டது.

நிலவில் காலடி வைத்த முதல் மனிதர் எனும் பெருமையைப் பெற்ற நீல் ஆம்ஸ்ட்ராங் பேசிய பேச்சு ஒலிக் களஞ்சியத்தில் இருந்தாலும் அது தெளிவாக இல்லை. அவரால் ஓரிரு வரிகளே பேச முடிந்தது. அவரால் அங்கு இறங்கியவுடன், ஹலோ நல்லபடி வந்து சேர்ந்தாச்சு...ஆமாம்...கூட ஆல்ட்ரின் இருக்காரு...உடனே படங்களை எடுத்து வாட்ஸப்பில் அனுப்புறேன், ஜனாதிபதிக்கும் போன் செய்து விடுகிறேன். நாங்க இங்கே வேலையில் பிசியாக இருப்போம்...அதனால் ஏதாவது தகவல் இருந்தா ஒரு டெக்ஸ்ட் மெஸேஜோ அல்லது வாட்ஸப்பில் ஒரு மெஸேஜோ வையுங்க... திருப்பி கூப்பிடுகிறேன்...ஆமா...ஆமா...அதேபோல் இங்கே ஏதாவது பிரச்சனை வீடியோ காலில் பேசி சரி செய்திடலாம்...ஓகே பை... என்று அவர் பேசியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.




நோக்கியா-நாசா ஒப்பந்தம்:

போனது போகட்டும் இனியாவது மேம்பட்ட தொடர்பாடல் இருக்கட்டும் என்றும் இப்போது நாசாவும்-நோக்கியாவும் இணைந்து ஒரு திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

அடுத்து வரும் ஆண்டுகளில் பல நாடுகள் நிலவுக்கு மனிதனை மீண்டும் அனுப்ப ஆயத்தங்களைச் செய்து வருகின்றன. அப்போது நிலவுக்குச் செல்பவர்கள் மொபைல் போன்களை எடுத்துச் செல்ல நாசா திட்டமிட்டுள்ளது. அந்த திட்டத்துகான ஆய்வுகளை முன்னெடுக்கும் ஒப்பந்தம் நோக்கியாவின் அமெரிக்கக் கிளைக்கு வழங்கப்பட்டுள்ளது.

பின்லாந்து நிறுவனமாமன நோக்கியா 150 ஆண்டுகளாக களத்தில் உள்ளது. இப்போது மண்ணில் செய்துகொண்டிருந்த ஆய்வை விண்ணிலும் செய்ய அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இதற்கான 14.1 மில்லியன் டாலர்கள் நிதியை நோக்கியா நிறுவனத்துக்கு நாசா அளித்துள்ளது. இதன் மூலம் நிலவுக்குச் செல்பவர்கள் அங்கு 4ஜி சேவையைப் பெறும் வகையில் தொழில்நுட்பத்தை பயன்படுத்த ஆய்வுகளை மேற்கொள்ள இந்த நிதி அவர்களுக்குக் கிடைத்துள்ளது.

திட்ட நோக்கம்:

நிலப்பரப்பில் 4ஜி மொபைல் சேவையை அளிப்பது தொடர்பில் கடந்த நில ஆண்டுகளாகவே நோக்கியா ஆய்வில் ஈடுபட்டுள்ளது. கடந்த 2018ஆம் ஆண்டில் நோக்கியா பிரிட்டனின் வோட.:.போன் நிறுவனத்துடன் இணைந்து, நிலவின் பரப்பில் தரையிறங்கும் ஆடி ரோவர் வாகனங்களை வழிநடத்த பூமியிலிருந்து சமிஞ்கைகளை அனுப்பும் ஆய்வில் ஈடுபட்டது. ஆனால் அந்த ஆய்வுக்கு என்னவாயிற்று என்று தமக்குத் தெரியவில்லை என்று நோக்கியா கூறுகிறது. இருந்தாலும் அமைதிப் பெருங்கடலில் ஆடி ரோவர் வாகனம் ஊர்ந்து செல்வதை ஒரு நாள் அவசியம் காண்போம் என்கிறார் நோக்கியாவின் தலைவர்.

இதன் நோக்கம் நிலவில் தகவல் தொடர்புக்கென்று நிரந்தரமாக ஒரு தளம் அமைப்பதாகும். அதற்கு 4ஜி தொழில்நுட்பம் மிகவும் முக்கியமானதாகும். ஆனால் இதற்கு 5ஜி உதவாது என்கிறார் நோக்கியாவின் தலைவர். ஏனென்றால் அதற்கான சமிஞ்கைகள் குறுகிய தூரமே பயணிக்கும் என்பதால் அங்கு கூடுதலான ரேடியோக்கள் (ஒலிபரப்பிகள்) தேவைப்படும். அது எடையைக் கூட்டும். எனவே வான்வெளியில் தொடர்பாடல்களை நிலவில் சூழலுக்கு எப்படி மாற்றியமைக்கலாம் என்பதே நோக்கியாவின் பணி.




கடந்து வந்த பாதை

இதற்கு நாம் சற்று பின்னோக்கிச் செல்ல வேண்டும். அறிவியல் தொழில் நுட்பத்தால் தொலைதூரத்திலுள்ளவர்களுடன் தொடர்புகொள்ள முதலில் வந்த தந்தி முறையும் அடுத்து வந்த தொலைபேசியும் கம்பிகளால் இணைக்கப்பட்டு ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திலிருந்த வீடுகளையும் தந்திகளையும் இணைத்தன. ஆனால் இந்த இணைப்புகள் அனைத்து இடங்களிலும் இருக்கவில்லை.

அடுத்த கட்டமாக சுமார் இருபது வருடங்களுக்கு முன்வந்த கைபேசிகள் ரேடியோ அலைகளால் இணைக்கப்பட்ட உயர்ந்த செல் கோபுரங்களின் உதவியுடன் அழைப்பவர் மற்றும் அழைக்கப்பட்டவர்களிடமுள்ள கைபேசியை இணைத்தது.

அடுத்தடுத்து 1G, 2G, 3G,4G என்று வளர்ந்து இப்போது 5G எனப்படும் ஐந்தாம் தலைமுறை செல்போன்கள் பலநூறு கோடி மக்களின் அன்றாட வாழ்வின் ஒரு அங்கமாகவுள்ளது.

நிலவில் எப்படித் தொடர்பு?

நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் இறங்கிய காலம் கம்பிகளால் இணைக்கப்பட்ட தொலைபேசிக் காலம். அப்போது நிலவில் இறங்கிய மனிதன் பல கோடி டாலர்கள் மதிப்புள்ள பெரிய ஆண்டெனாக்கள் வழியே ரேடியா அலைக்கற்றைகள் மூலம் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துடன் மட்டுமே தொடர்பு கொள்ள முடிந்தது.

1960 மற்றும் 70களில் இந்த முறை விஞ்ஞானிகளுக்கு ஒத்துப்போனது. அதையும் தாண்டி அன்று நிலவில் இறங்கியவர்கள் சில மணி நேரங்கள் மட்டுமே நிலவின் தரையில் இருந்தனர். தேவையெனில் அவர்களுடைய உறவினர்கள் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துக்கு வந்து சில நிமிடங்கள் உரையாடித் திருப்தியடைந்தனர்.

தொடர்ச்சியாக நிலவின் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகிய இரண்டும் இணைந்து பல்வேறு சாதனைகளைப் படைத்தன.

ஆனால் சந்திராயன்-1 திட்டத்தின் வெற்றி நிலவு குறித்த புதிய பரிமாணத்தையும் அதன் ஆய்வு குறித்த போக்கில் புதியதோர் அணுகுமுறையை ஏற்படுத்தியது. அந்த வெற்றித் திட்டத்தின் மூலம் நிலவில் நீர் இருப்பதை கண்டறிந்த பின்னர் நாசா உட்பட பல சர்வதேச ஆய்வகங்கள் மனிதனை நிலவுக்கு மீண்டும் அனுப்பவும், அங்கு மனிதக் குடியிருப்புகளை உருவாக்கவும், மனிதர்களைப் பல நாட்கள், மாதங்கள் தங்கவைக்கவும் திட்டமிட்டுள்ளன.

அப்படியான குடியிருப்பு ஒன்று 2026-28ஆம் அண்டு வாக்கில் உருவாகும் முன்னர் அங்கு போய் இறங்கும் மனிதர்களின் தொலைத் தொடர்பு வசதிக்கும், தூரத்திலிருந்து நிலவில் உலாவரக் கூடிய ரோவர்கள், ரோபோக்கள் உட்பட அறிவியல் தொழில்நுட்பக் கருவிகள் போன்றவற்றை இயக்கவும், அவற்றிடமிருந்து சமிஞ்கைகளைப் பறிமாறிக் கொள்ளவும் குறைந்தது 4G வசதிகள் உள்ள தொலைத்தொடர்புத் தொழில்நுட்பங்களும் கைபேசிச் சாதனங்களும் நிலவில் நிறுவப்பட வேண்டிய அவசியம் உள்ளது.



பூமியில் இப்போது 4G தொழில்நுட்பத்திற்கு தேவையான தரை நிலையத்தையும் செல் கோபுரங்களையும் உருவாக்கி இன்று லண்டன், டொரண்டோ, சிட்னி என எங்கிருந்தும் இந்தியா மற்றும் இலங்கையிலுள்ளோர்களுடன் உரையாடி மகிழ முடியும்.

இதே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிலவில் இறங்கிய மனிதர்களும் தங்களுக்குள் தொலைத் தொடர்புகளை வைத்து கொள்ளவும் அவர்களுக்கு உதவியாக இருக்கும் ரோபோக்கள் மற்றும் ரோவர்களை இயக்கவும் இயலும்.

கடும் சவால்கள்:

ஆனால் இதில் ஒரு சவால் உள்ளது. நிலவில் இப்போது பெரிய கட்டடங்கள் இல்லை. மேலும் தொலைக்காட்சி அலைவரிசைகளால் ஏற்படும் தொல்லை 4G அலைக்கற்றைகளுக்கு இருக்காது. இப்படி பல சாதகங்கள் இருந்தாலும், இங்கிருக்கும் 4G தொழில்நுட்பத்தை நிலவில் நிறுவுவது அவ்வளவு சுலபமல்ல.

நிலவில் தட்பவெப்ப மாற்றங்கள் மிக அதிகமானது. நிலவின் இரவு நேர வெப்பநிலை மைனஸ் 130 பாகை செல்சியஸ் என்ற அளவுக்கு குறையும். பகலிலோ அது 120 பாகை செல்சியஸ் அளவுக்கு உயரும். அதுமட்டுமல்ல நிலவில் கதிர்வீச்சும் அதிகமாக இருக்கும். பூமியில் இருப்பது போல் நிலவில் அமையப் போகும் செல் டவர்களுக்குப் பெரிய கனமான பேட்டரி, ஜெனரேட்டர் என்று வைக்க முடியாது.

மொத்தத்தில் இங்கிருக்கும் செல்போனிலிருந்து செல் கோபுரங்கள் வரை ஏறக்குறைய எதுவும் நிலவின் சூழ்நிலையில் இயங்காது. எனவே நிலவுக்கு எடுத்துச் சென்று அங்கு ஒரு 4G வலையமைப்பை உருவாக்கிச் செயல்படுத்த சீரிய ஆராய்ச்சிகளும், நிலவையொத்த சூழ்நிலையில் பரிசோதிப்பது மிகவும் அவசியமாகிறது.

சுருங்கச் சொன்னால் நாசா நோக்கியாவுக்கு கொடுத்திருக்கும் பணி இதுதான். எல்லாம் திட்டமிட்டபடி சரியாகப் போகும் பட்சத்தில் சமுத்திரங்களால் பிரிக்கப்பட்டிருக்கும் கண்டங்களை இணைக்கும் இன்றைய 4G தொழில்நுட்பம் சில வருடங்களில் நிலவையும் இணைத்துவிடும்.



அமெரிக்க விண்வெளி அமைப்பான நாசாவும் உலகின் முன்னணி மொபைல் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான பின்லாந்தைச் சேர்ந்த நோக்கியாவும் இந்தத் திட்டத்தில் ஈடுபட்டிருந்தாலும், நிலவின் ஆய்வில் அண்மைக் காலங்களில் இந்தியா முன்னெடுத்து வெற்றி கண்டுள்ள ஆய்வுகளும் சந்திராயன் 1 திட்டமும் இதன் பின்புலத்திலுள்ளது என்பதை மறுக்க முடியாது. இனி எங்கிருந்தும் நினைக்கும் போது ஹலோ...ஹலோ...சாத்தியமே.

கட்டுரையாளர்கள் பற்றி:

கலாநிதி மயில்சாமி அண்ணாதுரை இந்தியாவின் முன்னோடி விண்வெளி விஞ்ஞானிகளில் ஒருவர். இந்தியாவின் முதல் நிலவுப் பயணத் திட்டமான சந்திராயன்-1 திட்ட இயக்குநரும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பக் கவுன்சிலின் துணைத் தலைவருமாவார்.

சிவா பரமேஸ்வரன் விருதுபெற்ற மூத்த பன்னாட்டு ஊடகவியலாளர். லண்டன் பிபிசி உட்பட பல முன்னணி ஊடக நிறுவனங்களில் மூத்த பொறுப்பில் பணியாற்றியவர். தற்போது பன்னாட்டு ஊடகங்களுக்கு எழுதி வருகிறார்.


## முக்கிய அறிவித்தல்

## பிரம்டன் தமிழ் முதியோர் கழக அங்கத்தவர்களுக்கு

COVID-19 தொற்று நோய் பரவல் காரணமாக மேற்படி கழகத்தினால் நடாத்தப்படும் அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டங்கள், வைத்திய கருத்தரங்குகள், ஆலோசனைகள், யோகாப் பயிற்சிகள், ஆங்கில வகுப்புகள், KEY BOARD வகுப்புகள் என்பன ZOOM மூலம் நடாத்த கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது. அங்கத்தினர் அனைவரும் பங்குபற்றி பயனடையுமாறு வேண்டப்படுகின்றனர். ZOOM LINK I.D, PASSWORD என்பன அங்கத்தவர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. கிடைகாதவர்கள், தவறவிட்டவர்கள் நிர்வாகத்தினரைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

**நிகழ்ச்சி விபரங்கள்:**

1) யோகாப் பயிற்சி: பிரதி திங்கள்/வியாழன் தோறும் காலை 10:00 மணி முதல் 11:00 மணி வரை.
2) பொதுக் கூட்டம்: பிரதி திங்கள் தோறும் இரவு 8:00 மணி முதல் 10:00 மணி வரை.
3) ஆங்கில வகுப்புகள்: பிரதி திங்கள்/வெள்ளி தோறும் மாலை 4 மணி முதல் 5 மணி வரை.
4) KEY BOARD வகுப்புகள்: பிரதி செவ்வாய் தோறும் காலை 10 மணி முதல் மாலை 1:30 வரை, நான்கு குழுக்களாக நடைபெறும்.
5) கருத்தரங்குகள். பிரதி வியாழன் மாலை 8:00-10:00 வரை.

- ஐப்பசி 22, Dr. Luxmy Prabha வின் "ஆரோக்கிய வாழ்க்கையும் போஷாக்கும்" என்ற கருத்தரங்கு மாலை 8 மணி முதல் 10 மணிவரை நடைபெறும்.
- ஐப்பசி 29, Dr. Akil Subramaniyath த்தின் "மன நோயும் COVID-19"ம் என்ற கருத்தரங்கு மாலை 8 மணி முதல் 10 மணிவரை நடைபெறும்.

அனைவரும் பங்குபற்றி பயனடைவீர்,

நன்றி!

தலைவர்: திரு. டேவிட் ராஜரட்ணம்
(416) 458-3270

# தமிழக வளர்ச்சித் திட்டங்களுக்கு சிங்கப்பூரின் முதலீடு, பங்களிப்பு அவசியம்: தூதரக அதிகாரிகளிடம் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வேண்டுகோள்



தமிழக வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களுக்கு சிங்கப்பூரின் முதலீடு, பங்களிப்பு அவசியம் என்று சிங்கப்பூர் தூதரக அதிகாரிகளிடம் துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார். சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் பழனிசாமியை இந்தியாவுக்கான சிங்கப்பூர் தூதரக உயர்ஆணையர் சைமன் வோங், தூதரகதலைவர் பாங் கோக் தியான், செயலாளர்கள் ஓங் சோங் ஹூய், அமண்டா க்வேக், தூதர் இவான் டான் ஆகியோர் சந்தித்தனர்.

அப்போது, சிங்கப்பூர் நாட்டின் கேப்பிடாலேண்ட் நிறுவன வளாகத்தில் நடுவதற்கான மரக்கன்றை, அந்த நிறுவனத்தின் அதிகாரி சி.வேலனிடம் முதல்வர் வழங்கினார்.பின்னர், துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை சிங்கப்பூர் தூதரக குழுவினர் சந்தித்தனர். அப்போது நிதித் துறை செயலர் ச.கிருஷ்ணன் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.அப்போது துணை முதல்வர் பேசியதாவது:தமிழகம் சிங்கப்பூர் இடையே வரலாற்று சிறப்புமிக்க, ஆழமானதொடர்புகள் உள்ளன. இருந்தபோதிலும், நம்மிடையே பொருளாதார உறவுநிலை இன்னும் அதன் முழு அளவை அடையவில்லை.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சாதகமான இடமாக தமிழகம் திகழ்கிறது. கொரியா, ஜப்பான்உள்ளிட்ட நாடுகள் தமிழகத்தை விரும்பத்தக்க முதலீட்டுக்கு ஏற்ற பகுதியாக தேர்வு செய்துள்ளன. இனிவரும் ஆண்டுகளில் சிங்கப்பூரில் இருந்து பெரும் அளவில் முதலீட்டை பெற விரும்புகிறோம்.முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் அறிமுகம் செய்யப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்கு திட்ட ஆவணத்தின் பல்வேறு திட்டப் பணிகள், பொது தனியார் பங்கேற்பு முறையிலும், சில திட்டப் பணிகள் அரசின் உதவியுடன் முற்றிலும் தனியார் துறையாலும் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழகம் போன்ற மாநிலத்தின் தேவைகளை நிறைவேற்றுவதில் சிங்கப்பூரின் அனுபவத்தையும், நிபுணத்துவத்தையும் ஒன்றிணைத்து பயன்படுத்தலாம்.குறிப்பாக, சென்னையில் 'ஃபின் டெக்' மாநகரத்தை உருவாக்குதல், மதுரை தூத்துக்குடி தொழிலக பெருவழிச் சாலை திட்டப் பணியின் ஒரு பகுதியாக தொழிற்பூங்கா, முனையங்கள், தொகுப்புகளை உருவாக்குதல், துறைமுகங்கள் ஏற்படுத்துதல், நுண்ணறிவு சார்ந்தபோக்குவரத்து தீர்வுகள், கழிவுநீர்மேலாண்மை, கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் சேவை பணிகள், வாடகை வீடுகள் உட்பட குறைந்த விலையில் வீடுகள், புராதனம் மற்றும் ஓய்வு விடுதிகளின் மேம்பாட்டுடன் இணைந்த சுற்றுலாதொடர்பான திட்டப் பணிகள், இளைஞர்களுக்கு அதிக ஊதியத்துடன் பணி கிடைப்பது மற்றும் தொழிற்சாலைகளுக்கு திறன்மிகு மனிதவளம் கிடைப்பதை உறுதிசெய்வதற்கான திறன் மேம்பாட்டு முயற்சிகள், தொழில்முனைவோர் மேம்பாட்டுக்கான முயற்சிகள் ஆகிய துறைகளில் பங்களிப்பு தேவைப்படுகிறது.

இத்துறைகளில் முயற்சிகள், முதலீடுகள் தொடர்பாக சிலவற்றுக்கு சிங்கப்பூரும், தமிழகமும் ஒன்றுக்கொன்று பங்களிக்க இயலும் என்று நம்புகிறேன். இது சிங்கப்பூர் தமிழகம் இடையே ஆழமானபாரம்பரிய பிணைப்பை ஏற்படுத்தும். தமிழக வளர்ச்சி, செழிப்புக்கு சிங்கப்பூரின் பங்களிப்பு மதிப்பு மிக்கதாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# கொரோனாவுக்கு முன்னரே உலகம் முழுவதும் 35.6 கோடி குழந்தைகள் வறுமையில் தள்ளப்பட்டுள்ளன யுனிசெப் நிறுவனம் தகவல்

கொரோனாவுக்கு முன்னரே உலகம் முழுவதும் 35.6 கோடி குழந்தைகள் வறுமையில் தள்ளப்பட்டுள்ளன என்று யுனிசெப் நிறுவனம் அதிர்ச்சி தகவலை தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் கொரோனா தொற்று பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சியை கொண்டு வந்துள்ளது. இதனால் உலகம் முழுவதும் பட்டினி சாவு அதிகரிக்கும் சூழல் ஏற்பட்டு உள்ளது.

இந்த கண்ணுக்குத்தெரியா அரக்கன் பரவுவதற்கு முன்னே உலகம் முழுவதும் 35.6 கோடி குழந்தைகள் வறுமையில் வாடி வந்ததாகவும், அதாவது 6 குழந்தைகளில் ஒருவர் இந்த அவலத்தில் இருந்ததாகவும், தற்போதைய பொருளாதார சிக்கலால் இந்த எண்ணிக்கை மிக அதிகமாக உயர்ந்திருப்பதாகவும் ஐ.நா. குழந்தைகள் நல அமைப்பான யுனிசெப்பும், உலக வங்கியும் அதிர்ச்சித்தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த வறுமையை ஒழிக்க சர்வதேச அளவில் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் நிலைமை இன்னும் மோசமாகும் எனவும் அவை எச்சரிக்கை விடுத்துள்ளனன. உலக அளவில் 6ல் ஒரு குழந்தை கொடிய வறுமையில் இருக்கிறது என்றால், அது வாழ்வதற்கே போராட்டம் நடத்த வேண்டியிருப்பதாக யுனிசெப் திட்ட இயக்குனர் சஞ்சய் விஜேசேகரா கூறியுள்ளார். இந்த எண்ணிக்கை மட்டுமே யாரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் எனக்கூறியுள்ள அவர், இந்த எண்ணிக்கை கடந்த பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இன்னும் மோசமாகுவதற்கு முன்பே நாடுகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என எச்சரிக்கை விடுத்தார்.

இதைப்போல உலக அளவில் கொடிய வறுமையில் தள்ளப்பட்டு உள்ளவர்களில் 50 சதவீதம் பேர் குழந்தைகள் எனக் கூறியுள்ள உலக வங்கி நிர்வாகி கரோலினா சாஞ்சஸ், கொரோனாவுக்கு முன்னரே இந்த எண்ணிக்கை அனைவருக்கும் கவலையை ஏற்படுத்தி இருந்தது எனவும் குறிப்பிட்டு உள்ளார்.

# மாட்டு வண்டியில் பயணம் செய்த முதலமைச்சர் விவசாயிகள் ஆரவாரம்

மாட்டு வண்டியில் ஏறி நின்றபடி, மாட்டு வண்டியை ஓட்டி, விவசாயிகள் அளித்த வரவேற்பை முதலமைச்சர் பழனிசாமி ஏற்றுக் கொண்டார்.பதிவு: அக்டோபர் 22, 2020 14:16 நிவிபுதுக்கோட்டை,

தமிழகத்தில் கொரோனா தடுப்பு பணிகளை முதல்அமைச்சர் எடப்பாடி பழனிசாமி மாவட்டம் வாரியாக சென்று ஆய்வு மேற்கொண்டு வருகிறார். அந்தவகையில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வருகை தந்தார். விராலிமலையில் ஜல்லிக்கட்டில் கின்னஸ் சாதனை நிகழ்த்தப்பட்டது. இதன்நினைவாக விராலிமலையில் சீறிச்செல்லும் ஜல்லிக்கட்டு காளையை ஒரு வீரர் அடக்குவது போன்று நிறுவப்பட்டுள்ள வெண்கல சிலையை அவர் திறந்து வைத்தார்.

பின்னர், தமிழக மக்களின் 100 ஆண்டு கால கனவு திட்டமான காவிரிவைகைகுண்டாறு இணைப்பு திட்டத்தில் மிக முக்கிய அங்கமான 1,088 ஏக்கர்



பரப்பளவு கொண்ட மிகப்பெரிய குளமான கவிநாடு கண்மாயை அவர் பார்வையிட்டார்.

அதனைதொடர்ந்து. கவிநாடு கண்மாயில் விவசாயிகளின் வரவேற்பை ஏற்றுக் கொண்ட முதலமைச்சர் பழனிசாமி அவர்களது விருப்பத்தை ஏற்று மாட்டு வண்டி ஓட்டினார்.

மாட்டு வண்டியில் ஏறி நின்றபடி, மாட்டு வண்டியை ஓட்டி, விவசாயிகள் அளித்த வரவேற்பை முதலமைச்சர் பழனிசாமி ஏற்றுக் கொண்டார். இதைப் பார்த்த பொதுமக்கள் உற்சாகக் குரல் எழுப்பினர். முன்னதாக, காவிரி குண்டாறு இணைப்புத் திட்டத்துக்கு நன்றி தெரிவித்து விவசாயிகள் 200 மாட்டு வண்டிகளுடன் முதலமைச்சர் பழனிசாமிக்கு வரவேற்பு அளித்தனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தின் 100 ஆண்டுகள் கனவுத் திட்டமான காவிரி குண்டாறு இணைப்புத் திட்டத்துக்கு அனுமதி அளித்து ரூ.700 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் புதுக்கோட்டை வந்துள்ள முதலமைச்சர் பழனிசாமிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கவிநாடு கண்மாயில் 200 விவசாயிகள் மாட்டு வண்டிகளுடன் வந்து பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர். மேலும் நூற்றுக்கணக்கான பெண்கள் முளைப்பாரி எடுத்து வந்தனர்.

# இளம் வீரர்களுக்கு ஸ்பார்க் இல்லை எனக் கூறி விமர்சனத்துக்கு உள்ளாகும் தோனி

அணியில் இருக்கும் இளம் வீரர்களுக்கு போதிய உத்வேகம் இல்லை. அதனால்தான் அவர்களை களமிறக்கவில்லை என தோனி கூறியது விமர்சனத்துக்கு உள்ளாகி உள்ளது. ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் ராஜஸ்தானுக்கு எதிரான போட்டியில் படுதோல்வியை சந்தித்த சென்னை அணி பிளே ஆஃப்க்கான வாய்ப்பைஏறக்குறைய இழந்துவிட்டது. தோல்வி குறித்து தோனி கூறும் போது அணியில் இருக்கும் இளம் வீரர்களுக்கு போதிய உத்வேகம் இல்லை. அதனால்தான் அவர்களை களமிறக்கவில்லை. ஆனால் இனி வரும் ஆட்டங்களில் இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும். அவர்கள் களமிறக்கப்படுவார்கள். இனி வரும் போட்டிகளில் அவர்கள் அழுத்தம் இல்லாமல் விளையாடலாம் என கூறினார்.

அவரது இந்த பேட்டிக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. சமூக வலைத்தளங்களில் சென்னை அணி ரசிகர்களே மீம்ஸ் போட்டு தங்கள் அபிமான அணியை, குறிப்பாக கேப்டன் தோனியை கேலி செய்து வருகின்றனர். அனுபவ வீரர்கள் சரியாக ஆடாவிட்டாலும் அவர்களை தொடர்ந்து ஆட வைத்துள்ளார். அதே சமயம் முரளி விஜய்க்கு போதிய வாய்ப்பு அளிக்கப்படவில்லை. மற்றொரு அனுபவ வீரரான இம்ரான் தாஹிர் ஒரு போட்டியில் கூட களமிறக்கப்படவில்லை.

இளம் வீரர்களுக்கும் தோனி சரியாக வாய்ப்பு தரவில்லை. ருதுராஜ் கெய்க்வாட்டுக்கு 2 போட்டிகளில் மட்டுமே வாய்ப்பு கிடைத்தது. தமிழக வீரர் நாராயணன் ஜெகதீசன் கிடைத்த ஒரு போட்டியில் சிறப்பாக விளையாடியும் அடுத்த போட்டியில் நீக்கப்பட்டார்.

'7.30 மணிக்கு மேல் அவரால் பேட்டிங் செய்வது கடினம்' என்று புது காரணம் ஒன்றையும் தோனி சொன்னார். இந்த ஆண்டு சையத் முஷ்டாக் அலி டி20 போட்டியில் கலக்கிய தமிழக வீரர் சாய் கிஷோருக்கு இன்னும் ஒரு வாய்ப்பை கூட தரவில்லை. இப்படி வாய்ப்பே கிடைக்காமல் பலர் இருக்கின்றனர்.

டோனியின் கருத்துக்கு இந்திய அணியின் முன்னாள் கேப்டன் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த், தோனி பிராசஸ்... பிராசஸ் என்று சொல்வதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். அவர் சொல்லும் பொடலங்கா கதையையெல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாது. செயல்முறை பற்றி பேசும் நீங்கள் செய்யும் வீரர்கள் தேர்வு மகா சொதப்பலாக இருக்கிறது.

இளைஞர்களுக்கு ஏன் வாய்ப்பு கொடுக்கவில்லை என்று கேட்டால் ஸ்பார்க் இல்லை என்கிறீர்கள். ஜெகதீசனிடம் தீப்பொறி இல்லையா. அவரிடம் இல்லாத ஸ்பார்க் ஜாதவிடம் இருக்கிறதா? இல்லை சாவ்லாவிடம் இருக்கிறதா? தோனியின் கருத்து தவறானது. இனிமேல் இளைஞர்களுக்கு ஸ்பார்க் இருக்கிறதா பார்ப்போம் என்கிறார். ஜெகதீசன் வாய்ப்பு கிடைத்த ஒரு போட்டியிலும் நன்றாகதானே விளையாடினார். அப்போது ஸ்பார்க் தெரியவில்லையா' என்று கடுமையாக தாக்கி உள்ளார்.

தோனியின் அணுகுமுறையில் இனியாவது மாற்றம் இருக்குமா என்பதே சென்னை ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்


Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com




நிதியுதவி:

Canada United Way Greater Toronto

# ரொறொன்ரோ பெரும்பாகத் தெற்காசியர்களுக்கான கோவிட் - 19 (COVID-19) தொலைபேசி உதவித் தொடர்பு

## 647-846-2233



ரொறொன்ரோ பெரும்பாகத்துக்கு வெளியிலிருந்து அழைப்பவர்களுக்கான கட்டணமற்ற தொலைபேசி எண்: 1-866-300-3454

கோவிட் - 19 பற்றிய தகவல்கள்: சுகாதாரமும் பாதுகாப்பும், அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகள், ஆதரவுச் சேவைகள், மீளத் திறப்புக்கான நடைமுறைகள், உணவுப் பாதுகாப்பு

பதிவு செய்யப்பட்ட தகவல்களையும் மற்றும் நிபுணர்களிடமிருந்து தகவல்களை நேரடியாகவும் ஆங்கிலம், உருது, இந்தி, தமிழ், பஞ்சாபி, வங்காளம் ஆகிய மொழிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

CASSA SALCO BCS TAMIL CIVIC ACTION pchs Serving Diverse Communities South Asian Women's Rights Organization


Amma
Brand
இப்பொழுது கனடாவிலும்
கிடைக்கின்றது!


Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE
WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
NOW IN CANADA
100% Natural
Amma
Apple Cider
with Mother
Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471


Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml


Amma
Herbal
Juices
NOW
IN
CANADA
Jamun
with
Karela
Juice
Aloe
Vera
Juice
Karela
Juice
Amla
Juice
Super Energizer
Neem
Leaf
with Aloe Vera
Juice
Body
Pain
Relax Juice
with Aloe Vera
Aloe
Noni
with
Aloevera
Juice
100% HERBAL
100%
NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471




**நீங்கள் கனடாவுக்கு வந்த நாள் முதல் 5 ஆண்டுகள் வரை புதிய குடிவரவாளர்களுக்கான எமது சலுகைகளில் இருந்து பயன் பெறலாம்**

முதல் 3 ஆண்டுகளுக்கு உங்கள் வங்கிக் கணக்குக்கு நிரந்தர வங்கி கட்டணம் இல்லை

புதிய வாடிக்கையார்களுக்கான எங்களின் சலுகையின் மூலம் **$650** வரை சேமியுங்கள்*

தெரிவு செய்யப்பட்ட வங்கிகளில் உள்ள எங்கள் மொழி ஆலோசர்கள் உரையாடுவார்கள் அல்லது புதிய வாடிக்கையாளர்களுக்கான எங்கள் சலுகைகளை இணையத்தில் தேடுங்கள்

உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க நாங்கள் இருக்கின்றோம்

**nbc.ca**/tamil

*Our banking offer for newcomers is available to immigrants who have been living in Canada for less than 5 years. Savings of $650 over three years based on: no flat monthly fee for our banking package for three years ($14.95/month), first order of cheques free ($56.98/order) and small safety deposit box rent-free for the first year ($55.00/year).To enjoy the full savings, you must sign up for specific additional products and services, keep them and carry out all required transactions for a minimum of 36 months. Some conditions apply.

MEDCENTRE HEALTH
SYNCHRONIZING HEALTH SECTORS

# Markham McNicoll Specialist Clinic (MMSC)

**சிறப்பு மருத்துவ நிபுணர் (Specialist) சேவை எமது கிளினிக்கில் ஆரம்பமாகியுள்ளது.**

**தோல் நிபுணர் (Dermatologist)**

சிறப்பு மருத்துவ நிபுணர் தனாஜன் இராஜகுலேந்திரன்

MD (University of Toronto), PhD (University of Toronto)

ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தோல் சிகிச்சை நிபுணராக சிறப்புப் பயிற்சி பெற்றவர்.

**வாதநோய் நிபுணர் (Rheumatologist)**

சிறப்பு மருத்துவ நிபுணர் தனு ரூபன்

MD (McMaster University), FRCPC (Internal Medicine)
FRCPC (Rheumatology)

ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் வாதநோய் சிகிச்சை நிபுணராக சிறப்புப் பயிற்சி பெற்றவர்.

இருவரும் தமிழில் உரையாடும் மருத்துவ நிபுணர்கள்.
விரைவில் மேலும் பலதுறை நிபுணர்கள் சேவை ஆரம்பமாகவுள்ளது.

**416 331 8888**

2901 Markham Road, Unit - 7, Scarborough, ON. M1X 0B6
www.medcentrehealth.com



SKN
# SKN FINANCIAL
www.sknfinancial.com



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# ஆதியில் தமிழர் - நாகர் சமயத்தால் ஒன்றாக இருந்தும் மொழியால் வேறுபட்டிருந்தனர்!

- நக்கீரன்

*(கடந்தவாரத் தொடர்ச்சி)*

மகாவம்ச ஆசிரியர் மகாநாப தேரர் ஆதிக்குடிகளின் (நாகர், இயக்கர், இராட்சதர், தேவர், புலிந்தர் (வேடர்) பட்டியலில் தமிழர்களை சேர்க்காது விட்டாலும் மகாவலி கங்கைக்கு வடக்கே தமிழர்கள் செறிந்து வாழ்ந்தார்கள், அந்த நிலப்பகுதியை ஆண்டார்கள் என்பதை காகவண்ண தீசன் (கிமு 210 - 205) வாயிலாகக் கூறுகிறார். அதாவது தமிழர்கள் இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னர் மகாவலி கங்கைக்கு வடக்கே உள்ள பகுதியை ஆண்டார்கள் என மகாவம்சம் கூறுகிறது.

அதற்கு முதல் சோணாட்டில் இருந்து சேனன், கூத்தியன் (கிபி 237 -215) ஆகியவர்கள் அனுராதபுரத்தின் மீது படையெடுத்து வந்து ஆட்சியைப் பிடித்துக் கொண்டார்கள். இந்த இருவரையும் ஆட்சியில் இருந்து அகற்றிவிட்டு அசேலன் (கிபி 215 - 205) அரியணை ஏறினான். இவன் மூத்தசிவனின் மகன் ஆவான். இவனை சோழநாட்டில் இருந்து படையெடுத்து வந்த எல்லாளன் (கிபி 205 - 161) ஆட்சியில் இருந்து கவிழ்த்து விட்டு 44 ஆண்டுகள் நீதி தவறாத ஆட்சி செய்தான்.

துட்ட கைமுனு (கிமு 161-137) நாக வம்சத்தை சேர்ந்தவன். அவனது தந்தை பெயர் காகவண்ண தீசன். அவனது பாட்டன் பெயர் கோத்தபாய. அவனது பூட்டன் பெயர் யத்தல தீசன் அவனது ஒட்டன் பெயர் மகாநாகன், மகாநாகனது தந்தை பெயர் மூத்தசிவன்! துட்ட கைமுனு ஒரு சிங்கள மன்னன் என்று மகாவம்சம் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. துட்டகைமுனு வாழ்ந்த காலத்தில், சிங்களவர்கள் என்று அடையாளத்தோடு காணக் கூடிய ஒரு இனக் குழு தோன்றியிருக்கவில்லை. மகாவம்ச கதைப்படியே துட்ட கைமுனு தந்தை வழியிலும் தாய் வழியிலும் நாக வம்சத்தைச் சேர்ந்தவன். அவனது தாய் விகாரமாதேவி கல்யாணியை (கெலனியா) ஆண்ட மணியக்கியா அல்லது களனி தீசன் என்ற அரசனின் மகள் ஆவாள்.

தமிழர்கள் மகாவலி கங்கைக்கு வடக்கே பெரும்பான்மையாக வாழ்ந்தார்கள் என்பதற்கு சாட்சியாக துட்டகைமுனு அனுராதபரத்தைக் கைப்பற்றப் படை எடுத்துச் சென்ற போது வழியில் 32 தமிழ்ச் சிற்றரசர்களை வென்றான் என மகாவம்சம் கூறு-கிறது. அதற்கு அவன் எடுத்த காலம் 6 மாதங்களாகும் மகாவம்சம் தமிழ் அரசர்களைத் தமிழர்கள் என்றும் நாக வம்ச அரசர்களை நாகர்கள் என்றும் பிரித்துக் கூறுகி-றது. மதம் மாறிய தேவநம்பிய தீசனையோ அல்லது அவனது முன்னோர்களையோ அல்லது அவனது சந்ததியினரையோ தமிழ் அரசர்கள் எனக் கூறவில்லை.

கி.மு 3 ஆம் நூற்றாண்டிற்கும் (கி.மு 247) கி.மு 1 ஆம் நூற்றாண்டிற்கும் (கி.மு 29) இடைப்பட்ட 220 ஆண்டுகால அனுராதபுர அரசின் வரலாற்றில் ஆட்சி புரிந்த 19 மன்னர்களுள் 8 தமிழ் மன்னர்கள் 81 வருடங்களுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளனர். இதில் 44 வருடங்கள் எல்லாளனுக்கு (கிமு 205 - கிமு 161) உரியவை.

ஆயினும், இக்கால வரலாற்றைப் பல அத்தியாயங்களில் கூறும் மகாவம்சம் தமிழ் மன்னர்களின் ஆட்சியைச் சில செய்யுட்களில் மட்டுமே கூறி முடிக்கின்றது.

மகாவம்சம் பல கற்பனைக் கதைகளையும் சில வரலாற்றுக் குறிப்புகளையும் கொண்ட நூல் என்பது நினைவு கொள்ளத்தக்கது. அதன் ஆசிரியர் மகாநாப தேரர் மகாவம்சத்தை எழுதியதன் நோக்கத்தை ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவில் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக ஆறாம் அத்தியாயத்தின் முடிவில் "(பவுத்த) பக்தர்களின் அமைதியான ஆனந்தத்துக்கும் மனவெழுச்சிக்கும் தொகுக்கப்பட்ட மகாவம்சம் விஜயனின் முடிசூடல் என்ற 6 ஆம் அத்தியாயம் இத்துடன் முடிவுற்றது" எனக் கூறுவார்.

மகாவம்சம் மூலமே தமிழர்கள் கிமு 3 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இலங்கையில் செறிந்து வாழ்ந்தார்கள் என்பது தெரிய வருகிறது. மகாவம்சம் நாகர், இயக்கர், இராட்சதர், தேவர், புலிந்தர் (வேடுவர்) ஆகியவர்களையே ஆதிக் குடிகள் என்கிறது. தமிழர்கள் விடுபட்டுள்ளார்கள்.

நாகர்கள் வடக்கு (நாகதீபம்), தென்மேற்குப் (கல்யாணி) பகுதிகளில் வாழ்ந்திருக்கிறார்கள். இயக்கர், இராட்சதர் பெரும்பாலும் மகியங்கன பகுதியில் வாழ்ந்தவர்கள் ஆவர். நாளடைவில் அவர்கள் நாகர்களோடு கலந்து விட்டார்கள்.

பூர்வீக குடிகளில் கிபி எட்டாம் நூற்றாண்டுவரை நாக வம்சத்தினரே அனுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்டு வந்திருக்கிறார்கள். எட்டாம் நூற்றாண்டுவரை நாக என்ற விகுதிப் பெயரோடு நாகர்கள் இலங்கையை ஆண்டு வந்துள்ளார்கள். தீசன் என்ற விகுதிப் பெயர் உடையவர்களும் நாகர்களே. மேலும் நாகர், இயக்கர் போன்றோர் தமிழர்களைப் போல் திராவிட இனத்தவர் ஆவர்.

நாக வம்ச அரசர்கள் தங்கள் அடையாளத்தை தொடர்ந்து பேணி வந்திருக்கிறார்கள். பல அரசர்களது பெயர்களில் நாகன் அல்லது தீசன் என்ற பின்னொட்டு காணப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பாண்டுகாபயன் | கிமு 377 - 307 | வசபன் | கிபி 124 -168 |
| மூத்தசிவன் | கிமு 307 - 247 | வங்கநாப தீசன் | கிபி 168 -171 |
| தேவநம்பிய தீசள் | கிமு 247 - 207 | முதலாம் கஜபாகு | கிபி 171 -193 |
| துட்ட கைமுனு | கிமு 101 - 77 | மகா இளநாகன் | கிபி 193 -199 |
| சாத்தா தீசன் | கிமு 77 - 59 | பாதிக்க தீசன் | கிபி 199 -223 |
| துலாத்தன | கிமு 59 | கனி'ட தீசன் | கிபி 223 -241 |
| இலங்க தீசன் | கிமு 59 - 50 | | |
| கல்லாட நாகன் | கிமு 50 - 44 | குஞ்சநாகன் | கிபி 241 -243 |
| வட்டகாமினி | கிமு 44 | குடநாகன் | கிபி 243 -244 |
| வட்ட காமினி | கிமு 29-17 | சிறிநாகன் | கிபி 244 -263 |
| மகா தீசன் | கிமு 17 -03 | வோகர தீசன் | கிபி 263 -285 |
| | | அபயநாகன் | கிபி 285 -293 |
| கோரநாகன் | கிபி 03-09 | சிறிநாகன் 2 | கிபி 293 -295 |
| குடக்கண்ண தீசன் | கிபி 16 -38 | விஜயகுமாரன் | கிபி 295 -296 |
| பாதிக அபயன் | கிபி 38 -66 | சங்க தீசன் | கிபி 296 -300 |
| மகாநாகன் | கிபி 66 - 78 | சங்க போதி | கிபி 300 -302 |
| காமினி அபயன் | கிபி 78 - 88 | மேகவண்ண தீசன் | கிபி 302 -315 |
| கனிராஜ தீசன் | கிபி 88 - 91 | யெத்த தீசன் | கிபி 315 -325 |
| குலபாயன் | கிபி 91-92 | மகாசேனன் | கிபி 325-352 |
| சீவலி | கிபி 92 | | (சான்று மகாவம்சம்) |
| இளநாகன் | கிபி 95-101 | | |
| சந்தமுக சிவா | கிபி 101 - 110 | | |
| யசலாக தீசன் | கிபி 110 - 118 | | |
| சுபராஜா | கிபி 118 - 124 | | |

இளநாகன், சோரநாகன், குஞ்சநாகன், மகாநாகன் போன்ற நாகர்கள் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்கிறார்கள். தேவநம்பிய தீசன் தொட்டு நாகர்களில் பெரும்பான்மையினர் பவுத்த மதத்துக்கு மாறினார்கள்.

ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டளவில் பவுத்த நாகர்கள் சிங்கள இன அடையாளத்தையும், சிங்களமொழி அடையாளத்தையும் பவுத்த தேரவாத தேரர்கள் செயற்கையாக உருவாக்கினார்கள். சிங்கள மொழியின் எழுத்து வடிவம் தெலுங்கு, கன்னட மொழியை ஒத்திருப்பது கவனிக்கத்தக்கது.

சிங்கள மொழி பாளி, சமற்கிருதம், ஹெல (எலு) தமிழ் ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டுள்ளது.

நாகர் தமிழ் பேசவில்லை. தமிழையொத்த மொழியைப் பேசியிருக்கலாம். மணிமேகலை என்ற பவுத்த காப்பியத்தில் சாதுவன் என்ற ஒரு பாத்திரம் வருகிறது. அவனது மனைவி ஆதிரை. அவன் அவளைப் பிரிந்து ஒரு கணிகையோடு வாழ்கிறான். அப்போது வட்டாடல், சூதாடல் இவைகளில் பொருள் எல்லாவற்றையும் இழக்கிறான். கணிகையும் அவனை விரட்டிவிடுகிறாள்.

சாதுவன் தன் மனைவி மேல் ஆசையும், அன்பும் கொண்டவன். இழந்தவற்றை மீண்டும் அடைந்து ஆதிரையை சுகமாக வாழவைக்க வேண்டும் என்று விரும்பினான். எனவே வங்கத்துக்கு வாணிகம் செய்யப் புறப்பட்ட வணிகர்களோடு சாதுவனும் சேர்ந்து கொள்கிறான்.



கடல் காற்றின் வீச்சால் அவன் போன கலம் சிதைகிறது. ஒடிந்த மரம் ஒன்றைப் பற்றிக்கொண்டு சாதுவன் அலைகளில் மிதக்கிறான். நக்க சாரணர்களாகிய நாகர்கள் வாழுகின்ற மலைப் பக்கம் போய்ச் சேர்கிறான். நாகர் வாழும் மலையில் அலைகளால் சேர்க்கப்பட்ட சாதுவன் கடலில் பட்ட துன்பத்தால் வருந்தித் துயிலில் ஆழ்ந்துவிடுகிறான். அவனைக் கண்ட நக்க சாரணர்கள் (நாகர்கள்) அவன் ஊனைத் தின்னலாம் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டு அவனை எழுப்புகிறார்கள்.

சாதுவன் அவர்களுடைய மொழியை செவ்வனே கற்றுத் தேறியவன் ஆதலின் அவர்கள் பேசியது அவனுக்கு விளங்குகிறது. அவர்கள் அவனைத் தங்கள் தலைவனிம் கூட்டிச் செல்கிறார்கள்.

அங்கே ... கள் நிறைந்த பானை, புலால் நாற்றம், காய்ந்துகொண்டிருக்கும் வெள்ளை எலும்புகள் இவை பரவிய ஓர் இருக்கையில் ... நாகர்களின் தலைவன் தன் பெண்டுடன் இருக்கும் காட்சி ஓர் ஆண் கரடி தன் பெண் கரடியோடு இருப்பதைப் போலத் தோன்றுகிறது.

அவனையும் தன் பேச்சினால் சாதுவன் பிணித்துவிடுகிறான்! பிறகு மரநிழலில் இளப்பாறியதும் அவனுக்கு ஓர் இளைய நங்கையையும் வெங்கள்ளையும் ஊனையும் கொடுக்குமாறு நாகர் தலவன் தன் ஏவலாளர்களிடம் சொல்கிறான். அவை வேண்டாம் என்று சாதுவன் மறுக்கிறான்.

மயக்கத்தை உண்டாக்கும் கள், உயிர்க்கொலை இந்த இரண்டையும் குற்றமற்ற மக்கள் தவிர்த்தார்கள். பிறந்தவர்கள் இறப்பதும் இறந்தவர்கள் மீண்டும் பிறப்பதும் ... உறங்குவதும் உறக்கத்திற்குப் பின் விழிப்பதும் போலவே. இந்த உண்மையினால் ... நல்லறத்தைச் செய்பவர்கள் நல்லுலகை அடைவார்கள் நல்லது அல்லாதவற்றைச் செய்பவர்கள் கொடிய நரகத்தை அடைவார்கள். அதனால் அறிவுடையோர் இவைகளைத் தவிர்த்தார்கள். சாதுவன் பவுத்தன் என்பதால் அவன் பவுத்த கோட்பாடுகளை நாகருடைய தலைவனுக்கு எடுத்துக் கூறினான்.

நெடுங்காலமாகக் கலம் கவிழ்ந்து வந்து கரையொதுங்கிய மக்களை நாங்கள் உண்டிருக்கிறோம். அவர்களிடமிருந்து நாங்கள் எடுத்த பொருள்கள் இவை. மணம் நிறைந்த மரம், மெல்லிய துகில், நிறையப் பணம் இவைகளை எடுத்துக்கொள் என்கிறான்.

அந்தப் பொருள்களைச் சாதுவன் எடுத்துக்கொண்டு சந்திரதத்தன் என்னும் வாணிகனின் வங்கம் வந்தபோது அதில் ஏறித் தன் ஊர் வந்து சேருகிறான்.

இந்தக் கதையில் இருந்து நாகர்கள் பேசிய மொழி தமிழ் அன்று. அது அவர்களுக்கு உரித்தான மொழி அல்ல என்பது புலப்படுகிறது. எனவே தேவநம்பிய தீசன் தமிழ் அரசன் என்பதும் அவன் மகிந்த தேரரோடு தமிழில் பேசினான் என்பது தவறான அல்லது பிழையான அனுமானமாகும்.

அப்படியென்றால் தேவநம்பிய தீசன் மகிந்த தேரருடன் பேசிய மொழி எது? மகாவம்சம் விடையளிக்கிறது. இருவரும் நாட்டில் (மக்கள்) பேசிய மொழியில் (in the language of the land - Chapter IV) உரையாடினார்கள் என்கிறது மகாவம்சம். பெரும்பாலும் அந்த மொழி பிராக்கிரத மொழியாக இருந்திருக்க வேண்டும்.

சரி, இந்த நாகர்கள் என்ன ஆனார்கள்? அவர்களில் பெரும்பான்மையோர் பவுத்தர்கள் என்பதால் காலப் போக்கில் அவர்கள் சிங்கள மொழி பேசி சிங்களவர்கள் என்ற அடையாளத்தை ஏற்றுக் கொண்டார்கள். சிறுபான்மை வேதமத நாகர்கள் தமிழர்களோடு சங்கமமாகிவிட்டனர்.

அதற்குச் சான்றாக தமிழர்களிடம் காணப்படும் பெயர்கள், இடப்பெயர்கள், வழிபாட்டுத் தலங்கள் சாட்சி பகருகின்றன. தமிழர்கள் நாக என்ற முன்னொட்டை தங்கள் பெயரில் வைத்திருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக நாகநாதன், நாகம்மா, நாகேஸ்வரன், நாகமணி நாகலிங்கம், நாகரத்தினம், நாகையா, நாகராசா, நாகமணி, நாகேஸ்வரன், நாகேஸ்வரி, நாகபூசணி நாகப்பன், நாகலட்சுமி, நாகராணி போன்ற பெயர்களை குறிப்பிடலாம். இதே போல் நாகபட்டினம், நாகதீவு (நயினாதீவு), நாகதீபம் நாகபடுவான், நாகர்கோயில் போன்ற இடப்பெயர்கள் இந்து நாகர்கள் வட பகுதியில் வாழ்ந்ததைக் காட்டுகின்றது. நாகபூசணி அம்மன் கோயில், நாகதம்பிரான் கோயில் நாகர்களை நினைவுபடுத்தும் இலங்கையின் புகழ்பெற்ற வழிபாட்டுத் தலங்களாகும்.

தேவநம்பிய தீசனுக்கு முந்திய அரசர்கள் வேத நெறியைப் பின்பற்றிய நாக அரசர்களே. தேவநம்பிய தீசனின் தந்தை பெயர் மூத்த சிவன் (கிமு 367-307) ஆவான். அவனது மகனின் பெயர் மகா சிவன். சங்க இலக்கியங்களில் சிவன் என்ற சொல் பயன்பாட்டில் இருக்கவில்லை. எனவே கிமு 4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாகவம்ச அரசர்களுக்கு சிவன் என்ற பெயர் இருந்தது வியப்பாக இருக்கிறது.

முடிவாக சமயத்தால் தமிழர்களும் நாகர்களும் ஒன்றாக இருந்தும் மொழியால் வேறுபட்டு இருந்தார்கள். வேதநெறியைப் பின்பற்றிய நாகர்கள் வேத நெறியைப் பின்பற்றிய தமிழர்களோடு சங்கமாகிய பின்னரே அவர்கள் தமிழர்களோடு கரைந்து தமிழ் பேசியிருக்க வேண்டும்.

*- மொன்றியல் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# #18 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

சினிமா நாடகங்களில் விருப்போ ஈடுபாடோ கொள்ளாத பெரியார் ராஜாஜி அவர்களாகும். சுதந்திர இந்தியாவின் முதலாவது கவர்னர் ஜெனரல் தமிழக இராஜதாணியின் மூத்த முதல் அமைச்சர். அரசியல் ஞானியெனப் போற்றுதலுகுரியவரான பெரியவர் ராஜாஜி அவர்களைக் கட்டபொம்மன் நாடகத்தைப் பார்க்க அழைக்கப்பட்டிருந்தார். அச்சமயம் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த வேளை மயங்கிக் கீழே விழுந்துவிட்டார். எல்லோரும் அவரைத் தூக்குங்கள் என கூச்சலிட்டார்கள். அவர் கையைக் காட்டி "வேண்டாம்" என்று கூறிவிட்டார். மேலும் சிவாஜி அவர்கள் தனது சுயசரிதையில் கூறுவதாவது, "நான் உடனே மேக்கப்புடனே அவர் அருகே ஓடிச்சென்று என்னவென்று கேட்டேன். அதற்கு அவர் "ஒன்றுமில்லை, கவலைப்படாதே!" என்றார். மேலும் "ஸ்ட்ராங்கா ஒரு கப் காபி கொண்டு வா", என்றார். நான் கொண்டு வந்தேன். அதை குடித்தார். சில நிமிடங்கள் கழித்து "நாடகத்தை நடத்துங்கோ", என்றார். நான் மேடைக்கு ஓடிச் சென்று மீண்டும் என் பாத்திரத்திற்குள் புகுந்து கொண்டேன். ராஜாஜி அவர்கள் நாடகத்தை முழுவதுமாக பார்த்து விட்டு மேடையில் வந்து எனக்கு ஒரு சால்வையை அணிவித்து மிகவும் புகழ்ந்து பேசினார். அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் ஒரு கோடி பெறும். மூதறிஞர் ராஜாஜி அவர்கள் பேசி முடித்ததும், மேடையிலிருந்து கீழே இறங்குவதற்காக சென்றார். சிறிது தூரம் சென்று மீண்டும் திரும்பி வந்து மக்களைப் பார்த்து, "சிவாஜி கட்டபொம்மனாக நன்றாக நடித்திருக்கிறான்". நாட்டுக்கு தேவையான நல்ல கருத்துக்களை இந்த நாடகம் மூலம் எடுத்துக் கூறுகின்றான்.



இதையெல்லாம் ஜீரணிப்பதற்கு உங்களுக்கு திராணி இருக்கிறதா"? என்று கூறிவிட்டு சென்றார். அதை என்னால் மறக்கவே முடியாது . நான் ஏழு வயதில் கண்ட "கட்டபொம்மன்" கனவு என்னுடைய 30 வயதில் பூர்த்தியானது". மூதறிஞர் இராஜாஜி அவர்களுடனான இன்னுமொரு நிகழ்வையும் இங்கு பதிவு செய்வது மிகவும் பொருத்தமானதாகும். அதற்கு முன் சிவாஜி ஐயா அவர்களின் குடும்ப நண்பரும் - எனது சுயசரிதை நூலின் தொகுப்பாளருமான டாக்டர் டி எஸ் நாராயண சுவாமி அவர்களின் நேர்காணலின் போது கேட்ட கேள்வி ஒன்றின் போது... "சம்பூர்ண ராமாயணம்" எனும் புராணப் படத்தில் நீங்கள் ஏன் சிறிய பாத்திரம் ஏற்றீர்கள் எனும் வினாவை முன்வைத்தார். அதற்கு பதிலளித்த சிவாஜி அவர்கள், "முதலில் நடிப்பில் சிறிய பாத்திரம், பெரிய பாத்திரம் என்ற பாகுபாடு கூடாது. அதை தெரிந்து கொள்ளுங்கள், ஒரு காட்சியில் வந்தாலும் மக்கள் மனதில் நிற்கும்படி நடிக்க வேண்டும். எனது நண்பர் ஏபி நாகராஜன் கதை வசனம் எழுதிய சம்பூர்ண ராமாயணம் 1958 படத்தில் ராமராக என்.டி ராமராவ் நடித்தார. அதில் நான் பரதனாக நடித்தேன். இப்படத்தை மூதறிஞர் ராஜாஜி அவர்கள் பார்க்க நேர்ந்தது, பொதுவாக அவர் சினிமாவெல்லாம் பார்க்க மாட்டார் ராமாயணம் என்றதும் பார்த்தார். படம் பார்த்துவிட்டு வெளியே வந்தவரிடம் படம் எப்படி இருக்கிறது? என்று கேட்டதற்கு, அவர் வேறு ஒன்றும் சொல்லாமல் "பரதனை கண்டேன்" என்றார். அது போதாதா எனக்கு! எவ்வளவு பணம் புகழ் சம்பாதித்தாலும் மாமேதை இராஜாஜிஅவர்கள் சொன்ன இந்த பாராட்டு வார்த்தைகளுக்கு ஈடாகுமா"? என சிவாஜி சிலிர்ப்புடன் கூறினார். இத் தொடரை வாசித்து வரும் பிரியமுள்ள வாசகர்களே நீங்களும் அந்த பரதனை மனத்திரையில் கொண்டு வாருங்கள். இதோ காட்சி... பரதன் பாட்டன் கேகயன் நாட்டிற்குச் சென்று விட்டு ஊர் திரும்புகிறான். தாய் கைகேயியின் அந்தப்புரம் சென்று தாயாரைச் சந்திக்கிறான்.



பரதன்: தாயே!
கைகேயி: பரதா! என் செல்வமே! கேகய நாட்டிலிருந்து இப்போது தான் வருகிறாயா?
பரதன்: ஆமாம் தாயே!...
கைகேயி: பரதா! வருத்தப்படாதே! சொன்னால் நம்பமுடியாத அளவிற்கு பல சம்பவங்கள் நடந்தேறி விட்டன!
பரதன்: என்னம்மா நடந்தது சொல்லுங்கள்!
கைகேயி: நம் எல்லோரையும் சங்கடத்தில் ஆழ்த்தி விட்டு உன் பிதா சாந்தியைத் தேடிக்கொண்டு விட்டாரப்பா!
பரதன்: அப்பா! அப்பா! உண்மைக்கு உயிர் கொடுத்து நன்மையைக் கடைபிடிக்கும் உத்தமரிலும் உத்தமர் என்று பெயர் படைத்த தந்தையே மக்களிலே எங்கள் மூவரையும் மணமுடித்த மனைவிமார்கள் மூவரையும் துறந்து அயோத்தி மக்கள் அனைவரையுமே பிரிந்து போனாலும் அருமை புதல்வர் ராமனைப் பிரிந்து போகும் அளவிற்கு உங்கள் ஆவிக்கு முடிவு வந்து விட்டதா? எந்தையே நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், 64கலைகள், மனுவியாக்கியானம் எல்லாம் கற்றுணர்ந்த நீங்கள் இறந்து போகாமல் இருப்பதற்கு எதையுமே கற்றுக் கொள்ளவில்லையா அப்பா? இறந்து கிடக்கும் உங்கள் சடலத்திற்கு கூட எவரேனும் உயிர் கொடுத்தால் "ராமா" என்ற இனிய சொல்லோடு தானே மீண்டும் உங்களுக்கு உயிர் வரும். அத்தனை அன்பு வைத்திருந்த அண்ணனைப் பிரிந்து மண்ணிலே புதைந்து போக எப்படியப்பா மனம் வந்தது!
கைகேயி: "பரதா! பிறப்பவர்கள் எல்லாம் முடிவில் இறப்பவர்களே. உன் தந்தை மட்டும் விதி விலக்கா மகனே! நடந்ததை மறந்துவிடு வருந்தாதே!
பரதன்: தாயே! தந்தையார் இறந்து மனம் புண்பட்டதை விட, மகனே வருந்தாதேயென்று தாங்கள் சொல்வதுதான், வணங்கி ஆசி பெறும் புதுமணத் தம்பதிகளைப் பார்த்து பெரியவர்கள் வாழாதீர்கள் செத்து விடுங்கள் என்று ஆசி கூறுவது போல் இருக்கிறது! சக்கரவர்த்தி இறந்து விட்டார் என்றதும் தரையிலேயே முளைக்கும் புல் பூண்டுகள் கூட வாய் விட்டு அழ முடியவில்லையே என்று வாடி கிடக்கிறது தாயே! சொல்லாதீர்கள் இனி அப்படி ஒருமுறை சொல்லாதீர்கள்.

இப்படியாக பரதனுக்கும் தாய்க்கும் இடையே நடந்த உரையாடல் மகன் தாயிடத்து கோபம்கொண்டு வெறுப்படையுமளவிற்கு வளர்ந்தது. கம்பர் பெருமான் எழுதிய ராமாயணத்தில் மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் வரும் காட்சி போன்று கலைஞர் ஏபி நாகராஜன் மிகவும் சிறப்பாக பரதனுக்கும் (சிவாஜிக்கும்) கைகேயிக்கும் (ஜீ வரலட்சுமி) இடையே நடைபெறும் உரையாடல்களை ஆழமாகவும் உணர்ச்சிமயமாக எழுதியிருந்தார். காந்தியவாதியும் - தமிழறிஞருமான தமிழருவி மணியன் அவர்கள் எழுதிய "ராமாயண ரகசியம்" 2018 நூல் வெளியீட்டின் போது மதிமுக தலைவரும், தமிழறிஞருமான மரியாதைக்குரிய வைகோ அவர்கள் ஆற்றிய வெளியிட்டு உரையின் போது "சம்பூர்ண ராமாயணம்" திரைப்படத்தில் பரதனாக நடித்த சிவாஜி அவர்கள் பேசிய கோபக்கனல் தெறிக்கும் வசனத்தையும் பேசிக் காட்டி மணியன் அவர்களின் நூலை சிறப்பித்தார். வைகோ அவர்களும் சிவாஜியிடத்து மிகவும் அன்பும் ஈடுபாடும் கொண்டவரானபடியால் சிவாஜி பேசிய வசனத்தை அப்படியே படத்தில் இடம் பெற்றது போல் தங்குதடையின்றி பேசி காட்டினார். இதோ திரு வைகோ அவர்கள் பேசி காட்டிய சிவாஜியின் வசனவீச்சு!




கைகேயி: "கண்ணே! போனது போகட்டும். பூமி பாரத்தையேற்று மணிமுடி தரித்து நீ மன்னனாவதைப் பார்த்து மகிழ என் கண்கள் துடிக்கின்றன!
பரதன்: சீ! கொலைகாரி! தொடாதே! கொற்றவன் உயிருக்கு உலை வைத்த கொடும்பாவி நீதானா? மன்னனின் ஆவிக்கு மனைவியாக வந்த மாபாவி நீதானா? அன்புத் தாய் கைகேயி என்று உன்னை வாயார வானளாவப் புகழ்ந்த அண்ணன் ராமனை ஆரண்யத்திற்கு அனுப்பிய அக்கிரமக்காரி! கணவனை கொன்ற காதகி! புதல்வனை காட்டுக்கு அனுப்பிய மோசக்காரி! பாபம் அறியாத என்னை பலிக்காளாக்கிய பழிகாரி! சூரியவம்சத்தையே சூனியமாக்கிவிட்ட சூழ்ச்சிக்காரி! அரசனின் ஆவியை பறிப்பதற்கென்றே அவணியில் அழகான உருவெடுத்து வந்தாயா? மனைவியர் மூவரும் மனதினில் அளவுக்கதிகமான பாசம் வைத்திருந்த மன்னரை மரணிக்க வைப்பதற்கு உனக்கு எப்படியடி மனம் வந்தது? எடி இரக்கமற்றவளே...!
கைகேயி: "பரதா என் கண்மணி! என்ன பேசுகிறாய்? "
பரதன்: "பேசாதே! உன்னை அங்கமங்கமாக வெட்டி அணு அணுவாக புதைத்து காட்டு விலங்குகளுக்கு உணவாக போட்டாலும் என் ஆத்திரம் அடங்காது. ஆனால் அன்னையை கொன்ற அக்கிரமக்காரா! என் முகத்தில் விழிக்காதே! நீ என் தம்பியல்ல! என என் அண்ணன் ராமன் கோபப்படுவான் என்பதற்காக உன்னை உயிரோடு விட்டு விடுகிறேன். அவன் முகத்திற்காக உன் முகத்தைப் பாழ் படுத்தாமல் விடுகிறேன். சொல் சொல்லடி சொல்! யார் செய்த சதி இது! அடிப்பாவி அயோத்தியின் சரித்திரத்தையே மாசுபடுத்தி விட்டாயே! அப்பப்பா ஓவியனின் எழுத்துக்கும் கவிஞனின் கற்பனைக்கும் எட்டாத பயங்கர உருவம் நீ! இனி உன் முகத்திலே விழித்தாலும்... உன்னை பார்த்தாலும்... உன் முன்னே நின்றாலும் பரதனின் பண்புக்கு மாசு ஏற்பட்டுவிடும்! இனி நான் உனக்கு மகனுமில்லை... நீ எனக்கு தாயுமில்லை.

திரையில் சிவாஜியின் மனக்குமுறலையும் - கோபத்துடன் கூடிய கர்ஜனையையும் பார்த்து பிரமித்து விட்டுதான் ராம நாமத்தை உச்சரிக்கும் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் "சிவாஜியை பார்த்து, பரதனை கண்டேன்" என வாய் மலர்ந்தருளினார்!

இது சிவாஜிக்கு கிடைத்த வசிஷ்டர் வாய் பாராட்டாகும்.

## மேப்பிள் இலைகளும் டெயிலியாப் பூக்களும்...

------------------------




கோடையில் தொடங்கி
கொடிகட்டிப் பறக்கிறது கொரோனா.
இன்னும் அது உயரத்தில் தான்

இப்போது குளிரின் முற்றுகைக்குள்
மனித உடல்கள் மட்டுமல்ல
மரங்கள் தாவரங்கள் எல்லாமே

இந்த இரண்டுக்குள்ளும்
அழகையும் புன்னகையையும் இழக்காமல்
பூக்களின் இருப்பு தொடர்வது எப்படி?

மேப்பிள் மர இலைகள் நிலத்தில் கொட்டிப் பரவி
இந்த டெய்லியாக்களின் பரவசத்தை
பறித்து விடுகின்றனவோ..

தேசத்தின் தேசிய மரத்தின் இலைகள் கூட
தேசிய கீதத்தைப் போலவே
மதிக்கப்படுகின்றன இங்கு



தரையில் உதிர்ந்த மறுநிமிடம்
கடதாசிப் பைகளுக்குள்ளே
பக்குவமாய் சேகரித்து
வீதியோரத்தில் வரிசையாய் அணிவகுப்பு.

ஆமாம், எம் வீட்டு முற்றத்தில்
அழகிய டெயிலியாப் பூக்களும்
மரங்களிலிருந்து உதிர்ந்த மேப்பிள் இலைகளும்
குளிரோடு கூடிக் களித்தபடி...

# கனடிய மக்களை கொரோனாவிலிருந்து காப்பாற்றவே இடை தேர்தலை ஒத்திவைக்க கட்சி வலியுறுத்தியது என்கிறார் கனடிய பசுமைக் கட்சியின் தலைவி அனிமே



கனடியர்கள் அனைவரையும் கொரோனாவிலிருந்து காப்பாற்றவே இடை தேர்தலை ஒத்திவைக்க தமது கட்சி வலியுறுத்தியது. குறிப்பாக எதிர்வரும் 26ம் தி-கதி நடைபெறவுள்ள ரொரன்ரோ மத்திய தொகுதிக்கான தேர்தலில் நான் போட்டியிடுகின்றேன். ஆனால் அதையும் ஒத்திவைக்கும் படியும், முதலில் நாட்டு மக்களைப் பற்றி யோசிப்போம். பின்னர் தேர்தலைப் பற்றி யோசிப்போம் என்று சொன்னேன். இவ்வாறு தெரிவித்தார் கனடிய பசுமைக் கட்சியின் (Green Party of Canada) தலைவர் திருமதி அனிமே.

கனடா உதயன் பத்திரிகைக்காகவும் நண்பன் இணையத்தளத்திற்காவும் நேற்று முன்தினம் இந்த இணையவழி நேர்காணல் நடைபெற்றது. நேர்காணலில் பல கேள்விகளை விக்னேஸ், திருமதி அனிமேயிடம் கேட்டார். அவைகளுக்கு மிகவும் நேர்த்தியான பதில்களை அளித்தார் அவர்.

நேர்காணலில் விபரம் பின்வருமாறு அமைந்தது:

கனடாவை 2030 ஆம் ஆண்டிற்குள் 100 சதவிகிதம் சுத்தமான சக்தி பயன்படுத்தும் மாற்றுவதாக தனது 2019 ஆம் ஆண்டின் பொது தேர்தல் வாக்குறுதியாக, கடந்த Green Party தலைவி Elizebeth May அவர்கள் கூறினார். புதிய தலைமையின் கீழ் இந்த இந்த நிலைப்பாட்டை எவ்வாறு ஆதரிக்கிறது கிறீன் பார்ட்டி தற்பொழுதைய நிலையில் ஒரு புதியதோர் வழி பிறந்திருக்கிறது இந்த இலக்கை அடைய. நாம் சுமார் 60% கிரீன்ஹவுஸ் வாயுக்களை 2030 ஆம் ஆண்டிற்குள் கட்டுப்படுத்த திட்டம் இருப்பதாகவும், 2050 ஆம் ஆண்டிற்குள் 100% கிரீன்ஹவுஸ் வாயுக்களை தவிர்க்க செயல்பாட்டு திட்டம் கனடாவில் இருபாதககவம், கனடா மட்டுமல்ல பிற நாடுகளும் 2050 ஆம் ஆண்டு இலக்கை அடையும் என்று நம்பிக்கை தெரிவித்தார். கனடா உலக-ில் தூய்மை சக்தி தொழில்நுட்பத்தில் முன்னணி வகுத்து வருகிறது, அது மற்றும் இன்றி கனடா சுற்றுசூழல் பிரச்னைக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளை கொண்ட நாடாக இருக்கிறது. வருங்காலத்தில் நமது நாட்டின் முதலீடுகளை தூய சக்தி பயன்பாட்டை ஆதரிக்க வழி வகுக்க வேண்டும் என்றார்.

கொரோனா வைரஸ் அதிக அளவில் பரவி வரும் நிலையில், வரும் 26 ஆம் தேதி நடக்க இருக்கும் இடை தேர்தலை ஒத்திவைக்க குரல் கொடுத்தீர்கள். இப்பொழுது நிலவும் சூழ்நிலையை தவிர்க்க பசநநெ கட்சியின் திட்டம் என்ன? என்று விக்னேஸ் கேட்ட போது அனிமே அவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்.

“கொரோனா வைரஸ் பரவி வரும் இந்த நிலையில் அணைத்து கட்சியும் கலந்து நடுமுழுத்திற்க்கும் நற்பணிகள் செய்ய ஒன்று கூடி, மத்திய அரசூடான் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும், பொது நல திட்டங்கள் மற்றும் கொரோ-னாவை தடுக்கும் நடவடிக்கைகளை இணைந்து ஈடுபட்டு வருவதாகவும். வரும் ஓர் இருஆண்டுகளுக்கோ அல்ல இதற்கான தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் வரை இது தொடரும் என்றும் கூறினார். இடை தேர்தலை ஒத்திவைக்க வலியுறுத்தியது அனை-வரையும் இந்த நோயில் இருந்து காப்பாற்ற தான் என்றார். கடந்த சில நாட்களாக உயர்ந்து வரும் தொற்று நிலையை கிருட்டில் வைத்து கொண்டு அதுவும் டொரோண்டோ பகுதியில் குறிப்பாக அதிக அளவு பாதிப்பு காணப்படுவதும், அதே சமயம் கொரோனா சோதனைகள் அதிக அளவில் நமது பயன்பாட்டிற்க்கு இல்லாத இந்த நிலையில், புதிதாக வரையறுக்க பட்டுவரும் Election கனடாவின் திட்டம் வெளி வரும் வரை ஒத்திவைக்க தான் வலியுறுத்தியதாக கூறினார். அது மட்டுமின்றி வரும் காலத்தில் இது போன்ற ஒரு நோய் தொற்று உருவாகுமே ஆனால் அதை எதிர் கொள்ள கனடாவிற்கு ஓர் திட்டம் வேண்டும், அதாவது Canada Emergency Response Benefit போன்ற பொது நல திட்டங்களை வழிவகுக்க ஓர் சீரான திட்டம் வேண்டும் என்றார்.

RCMP பிரிவினர் இந்த நாட்டு மூத்த குடியினர் மீது நடத்திய இனவெறி தாக்குதல் குறித்து Elizebeth அயல கடும் கண்டனம் தெரிவித்தார். அதை தொடர்ந்து இப்பொழுது தற்போதைய தலைவர் என்றவகையில் என்ன கூற விரும்புகின்றீ:ர்கள் உங்களின் கருது என்ன?

Green Party தலைமைப் பதவிக்கான போட்டியின்பொழுது தனது பெரும்பாலான நேரத்தை இந்த பிரச்னையை குறித்து தான் எழுதி வந்ததாகவும். அதிலும் முக்கியமாக காவல் துறையினர் நடத்தி கொண்டு இருக்கும் இனவெறி தாக்குதல் முறையை ஒழிக்க நான் பெருமளவு கவனம் செலுத்தியுள்ளதாக கூறின-ார். மேலும் காவல்துறையினருக்கான பெருமளவில் பொருளாதாரத்தை நாம் முதலீடு இட்டுள்ளதாகவும், அதை மற்ற பொது நல துறைகளுடன் ஒப்பிட்டால் இதன் அளவுகள் விகிதத்தில் இல்லை. இந்த பிரச்சனைக்கான தீர்வு நமது காவல் துறையில் ஓரினத்தை குறிவைத்து நடக்கும் குற்றங்களை நாம் காண வேண்டும். வருந்தத்தக்க விசயம் எதுவென்றால், நாம் நாட்டில் பல அரசியல் தலைவர்கள் இனவாதம் இல்லை என்ற ஓர் மண நிலையில் உள்ளனர். RCMP தலைவர் தொடரும் பழங்குடி மக்கள் மீதான தாக்குதலை பற்றி ஒப்புக்கொள்ள மறுத்ததை சுட்டிக்காட்டினார். இதற்கான பதில் RCMPயின் நிதியில் இருந்து ஒரு பகுதியை பழங்குடி மக்களுக்காண நலன் திட்டத்தில் நாம் ஓதுகிடட வேண்டும். இனவெறி தாக்குதல் விவகாரத்தில் போலீசாரை போலீசாரே விசாரிப்பது சரியானது அல்ல, போலீசாரை சமூக மேற்பார்வையுடன் சமூகமே விசாரிக்க வேண்டும். மேலும் RCMP மனிதாபிமான மீறல்களை கண்காணிக்க ஒரு விதமான தகவலோ, கண்காணிப்பு முறையோ இல்லை, அதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். கிறீன் பார்ட்டியின் தேர்தல் அறிக்கையில் இதற்க்கான ஓர் விவரமான திட்டத்தை நாம் உள்ளடக்கவுள்ளோம்.



“அரசியல்வாதிகள் மக்கள் நலத்தை மற்றும் தான் மனதில் வைத்தது கொள்ள வேண்டும் என்றும். கடந்த சில நாட்களாக ஒரு அரசியல் கட்சிக்கு ஆதரவாக மி-கவும் சார்புபடுத்தி பேசப்படுவதும், இதனால் கொரோனா வைரஸ் பரவி இருக்கு இந்த நிலைமையில் தேர்தலை ஒத்திவைக்க முடியவில்லை எனறார். மேலும் Conservetive மற்றும் Libaral கட்சியினர் தமது சூடான விவாதங்களை தவிர்த்து மக்களுக்காக செயல்பட வேண்டும்”.

இணைய வழி மூலமாக நடைபெற்ற இந்த பேட்டியில் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேநதிரலிங்கம், “நண்பன்” இணையத்தளத்தின் சார்பில் விக்னேஸ் மற்றும் விமல் நவரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கனடாவின் Green Party தலைவராக அண்மையில் திருமதி அன்னிமே பால் தேர்ந்தெடுக்கப்பட்டார், கனடாவில் ஒரு தேசிய அரசியல் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் கறுப்பின கனடிய மற்றும் முதல் யூத பெண் என்ற பெருமையைப் பெற்றார் அன்னிமே. அதை தொடர்ந்து கனடா உதயன் மற்றும் நண்பன் இணையத்தளம் ஆகியன அவரது வெற்றி தொடர்பான செய்திகளை பிரசுரித்து அவருக்கு பாராட்டுக்களைத் தெரிவித்திருந்தது. கனடா வாழ் தமிழ் மக்களின் சார்பாக வாழ்த்துக்களையும் தெரிவித்தார் உதயன் ஆசிரியர் லோகேந்திரலிங்கம்.

பேட்டியின் பொழுது உதயன் பத்திரிகையின் சார்பில் விமல் நவரட்ணம் அவர்கள் எழுப்பிய கேள்வியானது, மனித உரிமை மீறல் மாற்றும் மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்த தலைப்புகளில், கிறீன் பார்ட்டியின் (புசநநெ ீயசவல) யின் நிலைப்பாட்டை குறித்து அமைந்தது

. அதற்கு அனிமே கூறியாதாவது அதற்க்கு ஒருபொழுதும் தமது கட்சி ஆதரவு தெரிவிப்பதில்லை என்றார், மற்றும் தனது இளம் பருவத்தில் ஐரோப்பிய இணையத்தில் தான் வைெநசயெவழையெட உழகெடைஉவிசநளநவெழை துறையில் பணியாற்றியது மற்றும் தனது கணவர் சர்வதேச மனித உரிமை வழக்கறிஞராக பணியாற்றுவதையும் சுட்டிக்காட்டினார். அதை தொடர்ந்து எழுப்பப்பட்ட கேள்வியில் டொரோண்டோ மாந-கரில் நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கை தமிழர்கள் வாழ்ந்து வருவதை சுட்டிக்காட்டி, கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் நடந்த இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோருவதற்க்கு கி-றீன் பார்ட்டியின் நிலைப்பாடு என்ன என்று கேட்டகப்பட்டது. அதற்க்கு, இலங்கையில் நடந்த இனப்படுகொலை பற்றி தாம் அறிவதாகவும், மேலும் தந்து கணவர் ஆயசம குசநநஅயெ போருக்கு பின் இலங்கையின் அரசியலமைப்பை சீர்படுத்த சில உயர் மட்ட கூட்டங்கள் பங்கேற்றதாக கூறினார்.

கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ருடோவிற்க்கு எதிராக Conservative Par-ty தலைவர் பல நடவடிக்கை எடுத்து வருவதும், Conservative கட்சி பதவிக்கு வருவதற்கு வழிவகுப்பதும், தற்பொழுது நிலவி வரும் அரசியல் நிலவரத்தை பற்றி ஆசிரியர் லோகேந்திர லிங்கம் அவர்கள் அனிமேவிடம் கேட்டார். அப்பொழுது, தான் முன்பே கூறியவாறு, அரசியல்வாதிகள் மக்கள் நலத்தை மற்றும் தான் மனதில் வைத்தது கொள்ள வேண்டும் என்றும். கடந்த சில நாட்களாக ஒரு அரசியல் கட்சிக்கு ஆதரவாக மிகவும் சார்புபடுத்தி பேசப்படுவதும், இதனால் கொரோனா வைரஸ் பரவி இருக்கு இந்த நிலைமையில் தேர்தலை ஒத்திவைக்க முடியவில்லை எனறார். மேலும் Conservetive மற்றும் Libaral கட்சியினர் தமது சூடான விவாதங்களை தவிர்த்து மக்களுக்காக செயல்பட வேண்டும் என்றார்.

கொரோனா வைரஸ் பரவுதலால் இழந்த வேலைகள் மற்றும், கனடா அரசு மக்கள் நல திட்டங்களுக்கு செலவு செய்த இழப்புகளை ஈடுக்கட்ட (Green Par-ty) கிறீன் பார்ட்டியின் திட்டம் என்ன? என்று திரு விக்னேஸ் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் கட்சியின் தலைவி பின்வருமாறு கூறினார்.

“நமது பொருளாதாரத்தை சீராக்க சரியான நேரம் இதுவே! தற்பொழுதைய நிலையில் நமது பொருளாதாரத்திற்கு ஒரு வலுவான பொருளாதார தூண்டுதல் தொகுப்பு வேண்டும், அதுவும் குறிப்பாக தூயானா ஷக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்நுட்பங்கள் மீது நமது முதலீடுகள் இருக்க வேண்டும் என்கிறார். முன்பு போல் எரிபொருள் மற்றும் இயற்கை எரிவாயு மீது நமது முதலீடுகள் இருக்க கூடாது என்றும், அவை சரிந்து வரும் ஒரு பொருளாதாரத்தின் ஒரு பகுதி என்கிறார். இது போன்றவையை தவிர்த்து புதியதோர் ஆரம்பம் தொடங்க தொழில் புரட்சிக்கு பின் கனடாவிற்கு ஓர் வாய்ப்பு கிடைத்ததாகவும் கூறினார்.

கறுப்பின மற்றும் யூத மதத்தை சார்ந்த பெண் கனடாவின் முக்கியமான ஓர் அரசியல் கட்சியின் தலைவராக பொறுப்பேற்றதை பற்றியும். உதயன் பத்திரிகை வாசகர்களுக்கு கட்சியின் தலைவியாகிய நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள் என்று திரு விக்னேஸ் கேட்டபோ அனிமோயின் பதில் பின்வருமாறு அமைந்தது.

இது போன்ற முக்கிய பதவிகளில் பல்வேறு தரப்பான மக்கள் பங்கேற்க வேண்டும் என்று விரும்புகிறர். பல வேறு நாடுகளில் வாழ்ந்த அனுபவத்தில் கன-டாவை போல கலாச்சார பன்முகத்தன்மை கண்டதில்லை என்றும் பல் வேறு நாடுகளில் இருந்து சிறந்த திறமை வாய்ந்த மக்கள் இங்கு வருவது வரவேற்க்கதக்கது என்றார். பல கற்ற திறமைவாய்ந்த மக்கள் வெவேறு இடங்களில் இருந்து அரசியலுக்குள் நுழைய முன் வர வேண்டும் அரசியல் மற்றும் இன்றி பல துறைகளில் அனுபவம் பெற வேண்டும். இலங்கை தமிழ் மக்களுக்கு தமது கிறீன் பார்ட்டியில், தமது தலைமையின் கீழ் பல வாய்ப்புக்கள் அரசியல் மற்றும் நிர்வாக ஊழியர்கள் வர வேண்டும் என்று விரும்புகின்றேன் என்றார்.




## மலேசிய மடல்:

# மலேசியத் தமிழ்க் கல்வி 204 ஆண்டு வரலாறு படைக்கிறது




கோலாலம்பூர், அக்.21

மலேசியத் தமிழர்களின் வாழ்வில் அக்டோபர் திங்கள் 21-ஆம் நாள் ஒரு பொன்னான நாள். 204 ஆண்டுகளுக்கு முன்னம் இதே நாளில்தான் முதன் முதலில் மலாயாத் திருநாட்டில் தமிழ் வகுப்பு தொடங்கப்பட்டது. அந்த வகையில், இன்றைய நாள், மலேசியத் தமிழ்க் கல்வி நாள்!.

தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் அல்லது தமிழகத்திற்கு அப்பால், ஈழத்தை அடுத்து இந்த மலையகத்தில்தான் தமிழர்கள் தம் தாய் மொழியான தமிழுடன், பண்பாடு, கலாச்சாரம், தமிழ்வழிக் கல்வி, கலை மேம்பாடு உள்ளிட்ட தமிழியக் கூறுகளுடன் இன்றளவும் வாழ்கின்றனர். இதற்கெல்லாம் அடிப்படையாகவும் ஆதாரமாகவும் விளங்குபவை தமிழ்ப் பள்ளிகள்தான்.



1816-ஆம் ஆண்டு அக்டோபர் 21-இல் "பினாங்கு ஃப்ரீ ஸ்கூல்" என்னும் பள்ளியில் தமிழ்க் கல்வி முதன்முதலாக தொடங்கப்பட்டது. அதனையொற்றி 204 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்டுள்ள தமிழ்க் கல்விக்காக மலேசிய இந்திய சமுதாயம் ஆற்றியுள்ள பணி மகத்தானது.

பிரிட்டிஷ் ஆட்சியின்கிழ் இருந்த மலாயா, 1957 ஆம் ஆண்டில் விடுதலை அடைந்தது. அதற்கு முன் 1950களில் 888 தமிழ்ப்பள்ளிகள் இருந்ததாக பதிவுகள் தெரிவிக்கின்றன. இத்தகையப் பள்ளிகளின் துணையோடுதான் கடந்த 204 ஆண்டுகளாக தமிழ் மொழி, இலக்கியம், இன அடையாளம், சமய மறுமலர்ச்சி, பண்பாட்டுக் கூறு, காலத்திற்கேற்ற கலை வளர்ச்சி ஆகிய அனைத்தும் வழிவழியாக மலேசியத் தமிழர்களை பற்றிக் கொண்டுள்ளன.



இவ்வாறு மலேசியாவில் நிலைபெற்றுள்ள தமிழ்க்கல்விக்கு சிறப்பான வரலற்றுப் பின்னணி உண்டு. மலேசியத் தமிழர்களின் வளர்ச்சியிலும் சமூக மேம்பாட்டிலும் பொருளாதார மறுமலர்ச்சியிலும் தமிழ்ப்பள்ளிகள் ஆற்றியுள்ள பங்கு எழுதி மாளாது. இந்த மண்ணில் தமிழைப் பயின்று அதன்வழி வாழ்வில் சிறந்தவர்கள் ஏராளம்... ஏராளம்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு முதன் முதலாக மலேசியத் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெறுவதற்கும் நாட்டின் மூத்த பல்கலைக்கழகமான மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளதற்கும் இந்தத் தமிழ்ப் பள்ளிகள்தான் மூலமும் முதலும் ஆகும்.

அன்றைய மலாயாவை ஆட்சி புரிந்த ஆங்கிலேய நிருவாகத்தினர், அப்போது, "பிரின்ஸ் ஆ.ஃப் வேல்ஸ்" என்று அழைக்கப்பட்ட பினாங்கில் ஃப்ரீ ஸ்கூல் என்ற பெயரில் ஒரு கல்விச் சாலையைத் தொடங்கினர்.



உண்மையில் ஆங்கிலம் கற்றுக் கொடுக்கத்தான் இந்தப் பள்ளி உருவாக்கப் பட்டது. அப்படி உருவான ஆங்கில பாடசாலையில் இணைக் கல்வியாக தமிழைக் கற்றுக் கொடுக்கும் எண்ணத்தில் முதன்முதலாக தமிழ் வகுப்பு தொடங்கப்பட்டது. அந்தப் பள்ளியின் தலைவராக இருந்த சர் ரெவரண்ட் அட்சிங்ஸ் என்பவர்தான் இந்தத் தமிழ் வகுப்பை, 21 அக்டோபர், 1816-இல் தொடங்கினார்.

ஏசு பிரான் பிறப்பதற்கும் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன், சங்க காலத்து மறத் தமிழர்கள் இந்த மலாயா நாட்டின் வட புலத்தில் உள்ள யான் மண்டலத்தில் வந்திறங்ககிய வரலாரும் உண்டு. வில்லோடும் வாளோடும் கலமேறி கடல் கடந்து இந்த மண்ணில் வெற்றிக் கொடிய நாட்டிய வரலாற்றுப் பின்னணிக்கு கடாரமே தங்க சான்று.

ஆனாலும், அந்த வரலாற்றில் இடையில் தொய்வு ஏற்பட்டு விட்ட நிலையில், அதைப் புதுப்பித்துத் தந்த ஆங்கிலேயர்களுக்கு ஒருவகையில் தமிழர்கள் நன்றி சொல்லத்தான் வேண்டும் இரப்பர்த் தோட்டங்களிலும் செம்பனைத் தோட்டங்களிலும் குறைந்த ஊதியத்தில் நிறைவான உழைப்பை சுரண்டுவதற்கென்று குத்தகைத் தொழிலாளர்களாஅக தமிழர்கள் அழைத்து வரப்பட்டாலும் அதிலும் ஓர் நன்மை விளைந்தது.




தமிழர்கள் வாழ்ந்த தோட்டங்கள்தோறும் தமிழ்ப்பள்ளிகள் உருவாகின. இப்படி உருவான பள்ளிகளின் எண்ணிக்கையில் மெல்ல சரிவு ஏற்பட்டு, 2011 ஆம் ஆண்டளவில் 523 தமிழ்ப்பள்ளிகள் மட்டும் நிலைபெற்றன. தோட்டங்கள் துண்டாடப்பட்டு தொழிலாளர்கள் இடம் பெயர்ந்ததாலும் பல தோட்டங்கள் அழிக்கப்பட்டு மேம்பாட்டுத் திடங்கள் நிறைவேற்றப்பட்டதாலும் தோட்டப் புறங்களைவிட்டு நகர்ப்பகுதிகளுக்கு தமிழ்த் தொழிலாளர்கள் இடம் பெயர்ந்தனர். இதனால், மாணவர்கள் பற்றாக்குறையாலும் போக்குவரத்து சிக்கலாலும் அதிகமான பள்ளிகள் மூடப்பட்டன.

ஆரம்ப பாடசாலைகளாக இருக்கும் தமிழ்ப் பள்ளிகள்தான், உயர்நிலைப் பள்ளிகளிலும் உயர்க்கல்வி நிலையங்களிலும் தமிழ்ப் படிக்க அடித்தளமாக விளங்குகின்றன. ஆசிரியர் கல்விக் கழகத்தில் தமிழ் இடம்பெற்றுள்ளதற்கும் தமிழ் ஆரம்பப்பள்ளிகள்தான் ஆதாரம்.

மொத்தத்தில் பாலர் பள்ளி முதல் முனைவர் பட்டம் பெறும் பல்கலைக்கழகம் வரை மலேசியத் தமிழர்கள் தமிழைக் கற்கவும் தமிழிய மரபோடு வாழவும் இந்தத் தமிழ்ப் பள்ளிகளே பேரளவில் துணை புரிகின்றன..

இத்தகைய சூழ்நிலையில், இந்திய மாணவர் சமுதாயத்தின் நலம் கருதி, முன்னாள் பிரதமர் டத்தோஸ்ரீ நஜிப், ஏழு தமிழ்ப் பள்ளிகளைக் கட்டினார். சுதந்திர மலேசியாவில் புதிய பள்ளிகளைக் கட்டித்தந்த ஒரேப் பிரதமர் இவர்தான். இதன் தொடர்பில் அப்போதைய மஇகா தலைவரும் சுகாதார அமைச்சருமான டத்தோஸ்ரீ டாக்டர் ச.சுப்பிரமணியம், அப்போதைய கல்வித் துறை துணை அமைச்சர் டத்தோ ப.கமலநாதன் ஆகிய இருவரும் ஒருங்கிணைந்து ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. இத்தகைய தமிழ்ப் பள்ளி வரலாற்றை ஆண்டுதோறும் புதுப்பிக்கும் வண்ணம் அக்டோபர் 21-ஆம் நாள், மலேசிய தமிழ்க் கல்வி தினமாக அண்மைய ஆண்டுகளாகக் கொண்டாடப்படுகிறது.



இதன் தொடர்பில், "மலேசியாவில் நிலைபெற்றுள்ள தமிழ்க் கல்வியின் எதிர்காலம் சவால் நிறைந்தது. ஆனாலும், நாம் அனைவரும் ஒருங்கிணைந்து இந்த சவால்களை எதிர்கொண்டால் மலேசியத் தமிழ்க் கல்வி தன் பயணத்தை செவ்வனேத் தொடரும்" என்று "மலேசியத் தமிழ்க்கல்வி - 204 ஆண்டுகள்" விழாக் குழுவின் தலைவருமான கமலநாதன் தெரிவித்துள்ளார்.

அரசியல் தலைவர்கள், சமூக இயக்கங்களின் பொறுப்பாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் என அனைத்துத் தரப்பினரின் கடப்பாடும் நினைவுகூர வேண்டிய தருணம் இது. இதில், தமிழ்ப் பள்ளிகளில் பணி புரிந்த-புரியம் ஆசிரியர்களின் பங்களிப்பும் அயராத உழைப்பும் சமுதாயத்தில் என்றென்றும் மதிக்கப்படும். எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ்ப் பள்ளிகளுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பும் பெற்றோரின் தமிழ்ப் பற்றும் சமூக உணர்வும் பாராட்டிற்குரியது.



மலேசியாவில் தமிழ்க் கல்வி நிலைபெற வேண்டுமென்றால், இதில் இந்தியப் பெற்றோரின் பங்களிப்பும் கடப்பாடும்தான் முதன்மையானது என்று மலேசியத் தமிழ்க் கல்வி நாள் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டத்தோ ப.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்ப் பள்ளிகள்.

*நக்கீரன் - 013-244 36 24*




Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

**உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு**

**நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய**

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

**தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...**

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

**416 269 7198**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 918



## அளவெட்டி, ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்

*"கொண்டல் வண்ணனை கோவலனாய் வெண்ணெய்*
*உண்ட வாயன் என் உள்ளம்கவர்ந்தானை*
*அண்டர் கோனணி அரங்கள்என் அமுதினைக்*
*கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே."*

அருட்கவி. சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்கள் வாங்கிய வீடமைந்த காணியை பேய்வீடு என்று அழைத்து எவருமே அந்தப் பக்கம் செல்வதில்லை. வீட்டைச் சுற்றிவரப் பற்றைக்காடு. பாம்புகளின் நடமாட்டம் எந்நேரமும் காணப்படும். பகலிலேயே அந்த வீட்டிலிருந்து பயங்கரமான சத்தங்கள் கேட்கும். வீட்டிற்குப் பக்கத்தில் பாழடைந்த கிணறு. முன்னர் ஆடுமாடுகள் தண்ணீர் பருகும் கேணியாகவிருந்து பின்னர் கிணறாக மாற்றப்பட்டு கைவிடப்பட்டுக் காணப்பட்டது. அந்தக் கிணற்றடியில் நிலத்திலே பதித்தநிலையிலே ஒரு சூலம் காணப்பட்டது. அதன் அருகில் செம்பினால் செய்த பாம்பின் உருவமும், ஒரு முக்கோண வடிவான கல்லும் இருந்தது. அந்தக் கோயிலை நாகதம்பிரான் என்றும், வைரவர் என்றும் வழிபட்டுள்ளனர். பின்னாளில் பேணுவாரற்றுக் காணப்பட்டு அங்கு அமைந்திருந்த வீடும் காணியும் பேய்வீடாக மாறிவிட்டது.

பேய்வீடாக மாறிய காணியை வாங்கப் பயந்த நிலையில் முற்பணம் கொடுத்த அருட்கவி. சீ. விநாசித்தப்பிப் புலவரை உற்றார், ஊரவர், பெற்றோர் அனைவரும் தடுத்தனர். செய்வதறியாது தவித்த புலவர் அவர்கள் என்ன செய்வதென்ற சிந்தனையோடு அப்படியே தூங்கிவிட்டார். அன்றிரவு அவரது கனவிலே ஒரு புற்றிலிருந்து ஒரு சிறு பெண்ணும், ஒரு சிறுவனும் தோன்றினர். "நீர் எம்மை ஆதரித்தால் உம்மை ஆதரிப்போம்" என்று கூறினார்கள். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் மனந்தேறி, இறைவன்மேல் பாரத்தைப்போட்டு பேய்விடு என்று அழைக்கப்பட்ட வீட்டை வாங்கினார்.

அதன்பின்னர் வீட்டோடு காணப்பட்ட சூலம் மற்றும் நாகதம்பிரான் உருவம் இருந்த இடத்திலே சிறு கொட்டில் கட்டிப் பூசித்து வந்தார். இக்கோவில் படிப்படியாக வளாந்து தற்காலத்தில் பெரிய கோவிலாகக் காணப்படுகின்றது. ஆரம்பகாலத்தில் ஆவணிமாதத்தில் ரோகிணி நட்சத்திரத்தில் பொங்கலிட்டு வந்துள்ளார்கள். தற்பொழுது இதனை ஆதாரமாகக்கொண்டு ஆவணிமாதம் ரோகிணி நட்சத்திரத்திலே தேர்திருவிழா நடைபெறுகின்றது.

ஆதியில் இரண்டு பாம்புகள் காட்சி கொடுத்தமையால் நாகத்பிரான், நாகவரத நாராயணர் எனப் பெயர் பெற்றார். இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக நாகவரத நாராயணரும், பரிவார மூர்த்தியாக ஸ்ரீ மனோன்மணி அம்மையும் எழுந்தருளியுள்ளார்கள். " எல்லாத் தெய்வமும் யானேதான் எவன் எத்தெய்வத்தை கும்பிட்டாலும் அந்த வழிபாடெல்லாம் என்னையே சாரும்" என்ற கீதை வாக்கியப்படி இவ்வாலயத்தில் அவரவர் இ'ட மூர்த்திகளைக் கும்பிடக்கூடியதாக நாராயணர், ஸ்ரீ ரங்கநாதர், தில்லை நடராசர், சந்தான கிரு'ணர், மனோன்மணி, சிவலிங்கம், முருகன், வைரவர், ஆஞ்சநேயர் யாவருக்கும் சந்நிதானங்கள் அமைக்கப்பட்டுள்ளமை இக்கோயிலின் சிறப்பாகக் காணப்படுகின்றது.

இவ்வாலயத்திலே திருநீறும், தீர்த்தமும் வழங்கப்படும். இவற்றினால் பலர் நோய்நீங்கப்பெற்று சுகமடைந்துள்ளமையால் இவ்வாலய தீர்த்தமும், திருநீறும் விசேட தன்மை கொண்டதாகக் கருதப்படுகின்றது. இவற்றோடு இவ்வாலயத்திலே சிவன், நாராயணர் வேறுபாடின்றி ஏகாதசி, திருப்பாவை, திருவெம்பாவை, நவராத்திரி, கந்தச'டி, விநாயகர் ச'டி என்னும் விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படும். இவ்வாறான சைவ, வைணவ சமத்துவத்தை பல்வேறு வழிகளிலும் எடுத்தியம்பும் கோவிலாக ஸ்ரீ நாகவரத நாராயணர் கோயில் அன்று தொட்டு இன்றுவரை காணப்படுகின்றது. இவ்வாறான சமத்துவத்திற்கு வித்திட்டவர் அருட்கவி. சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்கள், தீர்த்தத்தின் மூலமும், விபூதிப் பிரசாதத்தின் மூலமும் தீராத நோய்களைத் தீர்த்த மருத்துவராகவும் விளங்கியுள்ளார்.

இவ்வாறான சிறப்புப்பெற்ற இவ்வாயம் நாளடைவில் பல்வேறு நிலையிலும் வளர்ச்சி பெற்றுக் காணப்பட்டது. இதன் முதற்படியாக 01-01-1969 இல் சிறிய கோயிலாகக் கட்டி அனைவரும் பூசிக்க, புலவர் அருட்கவி. சீ. விநாசித்தம்பி அவர்கள் வழி சமைத்தார்கள். இதனைத் தொடர்ந்து இவ்வாலயத்தின் முதலாவது கும்பாபி'கம் 03-09-1979 ஆம் ஆண்டு மிகச் சிறப்பாக இடம்பெற்றது. இக்காலந்தொட்டு ஸ்ரீ நாகவரத நாராயணர் என்ற பெயருடன் அளப்பரிய அற்புதங்கள் நிகழ்ந்துள்ளது. கொடிய நோய்கள், வி'ங்கள், பேய்பிணிகள் யாவற்றிற்கும் இறைவன்மேல் நேர்த்தி வைத்து மக்கள் விமோசனம் பெறும் புண்ணியபதியாக இத்தலம் மகிமைபெற்றது. சிறிய ஆண்குழந்தையாகவும், வயோதிபராகவும், அழகிய பெண்ணாகவும், மேலெழுந்து எரிகின்ற பெரு நெருப்பாகவும், கருமைநிறங்கொண்ட கட்டையான வாலிபனாகவும் பலருக்கு அவரவர் பக்திநிலைக்கு ஏற்றவகையிலே காட்சி கொடுத்து விந்தைகள் பல புரியும் ஸ்ரீ நாகவரத நாராயணரை அளவெட்டிமக்கள்மட்டுமன்றி சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்களும் நேர்த்திவைத்து வணங்கி வரம்பெற்றுச் செல்வது வழக்கம்.

- வளரும்..

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS C R PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.





வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# இவ்வார ராசிபலன்

## 23-10-2020 வெள்ளி தொடக்கம் 29-10-2020 வியாழன் வரையும்




**மேஷம்:** தகுதிகள் மிகுதியாகக் கிடைக்கக்கூடிய வாரம். முகப் பொலிவு கூடும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். தொலைபேசி-த் தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவில் கவனம் தேவை. பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். கல-வரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். மத வழிபாடு மாற்றம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நர்த்தன கணபதி
அதிர்ஷ்ட எண்: 7,4,5,2 அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,N




**ரிஷபம்:** அதிகாரமான வகையில் ஆதாயம் உண்டாகக்கூடிய வாரம். ஆதாயம் பெருகும். சகோதரியினால் நன்மை உண்டு. உடல் நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். தொழில் அபிவிருத்தி அடையும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பிள்ளைகளால் மனக் கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். பருப்பு தானம் பாவம் போக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அலங்காரப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,Y




**மிதுனம்:** உற்சாகத்தோடு செயல்பட்டு உயர்வுகள் காண வேண்டிய வாரம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். கணி-னி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். திறமைகள் வெளிப்படும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகள் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். பைரவ வழிபாட்டால் பாவம் தீரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அங்காளம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,2,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**கடகம்:** தனவரவும், பணவரவும் தாராளமாக கிடைக்கக்கூடிய வாரம். செயல் திறமை வெளிப்படும். சிந்தனைகள் மேலோங்கும். சேமிப்பு அதிகமாகும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத் தொழிலில் பணம் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத் தொழில் லாபம் தரும். உணவுத் தொழில் உயர்வு தரும். தொலைபேசி தகவல் தொல்லைத் தரும். செயல் விவேகம் கூடும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: கொண்டத்துக் காளியம்மன்
அதிர்ஷ்ட எண்: 0,1,7,2, அதிர்ஷ்ட நிறம்: வைலட்
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A




**சிம்மம்:** சஞ்சலமும், சந்தோ'மும் கலந்த வாரம். தனவரவு பெருகும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். பழைய கடன் தீரும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உடல் நிலையில் கவனம் தேவை. உறவினர் வருகை உண்டு. வணிகத் தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மருத காளியம்மன்
அதிர்ஷ்ட எண்: 9,2,1,6, அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D, S




**கன்னி:** வறுமைகள் விலகி பெருமைகள் உண்டாகக்கூடிய வாரம். உற்சாகம் அலை மோதும். பணக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றம் தெளிவு கூடும். ஏற்றங்கள் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கைலாசநாதப் பெருமாள்
அதிர்ஷ்ட எண்: 3,0,7,1, அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,L




**துலாம்:** மனம் எதிர்பார்த்த பணம் கிடைக்கக்கூடிய வாரம். வயிற்று உபாதைகளும் உண்டு. வாழ்வில் வசந்தம் உணடு. வாகனத்தால் செலவு உண்டு. வாழ்க்கையில் மேன்மை உணடு. சிறப்புகள் சேரும் நாள். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் தீரும். கல்வியில் கவனம் தேவை. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். மற்றவர்களால் மேன்மை உண்டு. வரவுகளால் திருப்தி உணடு.
வழிபட வேண்டிய தெய்வம்: பொன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,X




**விருச்சிகம்:** பொருளும், அருளும் சேரக்கூடிய பொன்னான வாரம். கனிவான காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,6,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P




**தனுசு:** ஆறுதலும், ஆதாயமும் கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். அமைதியான வாரம். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடிவரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திரு'டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல் சோர்வு ஏற்படும். வழிபட வேண்டிய தெய்வம்: யானைப்பாத விநாயகர்
அதிர்ஷ்ட எண்: 8,0,1,1, அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள்
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**மகரம்:** ஓசை இல்லாமல் ஆசைகள் நிறைவேறக்கூடிய அற்புதமான வாரம். சகோதரியால் அனுகூலம் உண்டு. அபரணச் சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. கடன் சுமை அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனம் தேவை. அரசு வகையில் ஆதாயம் உண்டு. குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மறைமுக எதிர்ப்புகள் விலகும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அங்காள பரமேஸ்வரர்
அதிர்ஷ்ட எண்: 4,7,3,2, அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,V




**கும்பம்:** மதியைப் பயன்படுத்தி நிதியையும் நிம்மதியையும் பெறக்கூடிய வாரம். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத் தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். உதவிகள் கிடைக்கும் நாள். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கனக துர்க்கை அம்மன்
அதிர்ஷ்ட எண்: 6,9,2,3, அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம்
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U




**மீனம்:** இக்கட்டான சூழ்நிலைகள் அப்பட்டமாக விலகக்கூடிய வாரம். மனோ தைரியம் அதிகரிக்கும். நீண்டநாள் ஆசை நிறைவேறும். கமிஷன் தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. கௌரவம் உயரும். கலைத்துறை ஈடுபாடு அதிகரிக்கும்.. மெத்தன போக்கு விலகும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. திருப்தி ஏற்படும் நாள்.
ஆபரணச் சேர்க்கை ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி
அதிர்ஷ்ட எண்: 8,2,5,6, அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,R




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்



PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point



துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.
Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000

# தேவ சபையில் எஸ். பி. பி



சொர்க்க லோகத்தில் உள்ள ஓர் அரங்கில் கலைவிழா ஒன்று நடைபெற்றது. மங்கள விளக்கு ஏற்றப்பட்டு எம்.எஸ். அம்மாவின் இறை வணக்கத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. ஈழத்து கா. சிவதம்பி வரவேற்புரை நிகழ்த்தினார். முதலாவதாக டி கே பட்டம்மாள், மகாராஜபுரம் சந்தானம் சரஸ்வதி பாக்கிய ராஜா முத்துக்குமார சுவாமி சர்மா ஆகியோர் கர்நாடக இசை விருந்தளித்தனர். அடுத்து கமலா லக்‘மணன், பால சரஸ்வதி ஏரம்பு சுப்பையா, வீரமணி ஐயர் போன்றோரின் பரத நாட்டியம் பார்வையாளர்களை மெய் மறக்கச் செய்தது. இதையடுத்து எம். ஆர் ராதாவின் நாடகக்குழுவினரின் நாடகம் அரங்கேறியது. நடிகர் திலகம் சிவாஜி கனேசன் ஆச்சி மனோரமா போன்ற கலைஞர்கள் பங்குபற்றினர்.

அடுத்து தென்னிந்திய சொல்விற்பன்னர்களும் ஈழத்து பேச்சாளர்களும் ஒருங்கிணைந்து பட்டிமன்றம் நடத்தினர். கி வா ஜெகந்நாதன் தலைமை தாங்கினார். பட்டிமன்ற தலைப்பு ‘பூவுலகில் கொரானா தொற்று. நன்மையளிக்கிறதா? தீமையளிக்கிறதா? ஆச்சரி யித்தடன் செவி மடுத்தாலும் நன்கு ரசித்தனர். பாயாசம் இல்லாமல் கல்யாண சாப்பாடா? என்பது போல மெல்லிசை இல்லாமல் கலைவிழாவா? என்பதற்கிணங்க இசை நிகழ்ச்சி ஆரம்பமாகியது. கவிஞர் கண்ணதாசன், மருதகாசி, வாலி, முத்துக்குமார் ஆகியாரின் பாடல் வரிகளுக்கு ஜி ராமநாதன், கே வி மகாதேவன் எம் எஸ் விஸ்வநாதன், போன்றோர் இசையமைக்க டி. எம் சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், எம் எல் வசந்தகுமாரி, பிபி சிரீநிவாஸ், ஸ்வர்ணலதா ஆகியோர் எல்லோரையும் இசைவெள்ளத்தில் மூழ்கடித்தனர். இதற்கிடையில் பிரதம் விருந்தினராக எம்.ஜி ராமச்சந்திரன் வருகை தந்து விழாவை ரசித்துக் கொண்டிருந்தார்.

நிகழ்ச்சி முடிந்து வெளியே வந்த எம் ஜி ஆர் தன் காரியதரிசியிடம் “எல்லாரும் நல்லா பாடுறா ஆனாலும் பாடகர்கள் போதாது வேறு யாரும் இல்லையா” என்று கூறினார் காரியதரிசி “ சார் பூவுலகில் எஸ் பி பி என செல்லமாக அழைக்கப்படும் பாலசுப்பிரமணியன் என்பவர் இருக்கிறார். ஆனால் அவரை எவ்வாறு அழைக்கலாம்? என்று கூறினார். மக்கள் தலைவர் “ அவர் தான் எனக்காக ஆயிரம் நிலவே பாடினார். அவர் மிக நன்றாக பாடுவார். கவலைப்படாதே எம தர்மராஜன் எனக்கு நெருங்கிய நண்பன் அவரிடம் விசாரிக்கிறேன் என்று பகர்ந்துவிட்டு உடனேயே தர்மராஜனை அணுகி விசயத்தை விளக்கினார். அவரும் சித்திரகுப்தனை அழைத்து பூவுலகில் உள்ள எஸ்பிபி யின் ஆயுளைப் பற்றி விசாரித்தார். சித்ரகுப்தன் ஏடுகளைப் புரட்டிப் பார்த்துவிட்டு செப்டம்பர் 25 ஆம் திகதி எஸ்பிபியின் ஆயுள் முடிகிறது என்று கூறினார். அப்படியா என்று கூறிய யமதர்மராஜன் எம் ஜி ஆர் அவர்களைப் பார்த்து “நண்பா நானே நேரில் சென்று அவரை அழைத்து வருகிறேன்” என்று கூறினார்.

உடனேயே பூவுலகம் புறப்பட்டார். சென்னை எம்.ஜி.ஆர் மருத்துவமனையில் கொரானாவால் பாதிக்கப்பட்டு எஸ்.பி.பி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். செப். 25ஆம் திகதி மதியம் 1.04 மணியளவில் தன் கூட அழைத்துப்போக ஆயத்தமானார். ஆனால் பூவுலக வாசிகள் அவரை விடுவதாக இல்லை. அவர்களிடம் மக்கள் திலகம் தான் அவரை அழைத்து வரக்கூறினார் என்று கூற மக்கள் மிக்க மரியாதையுடன் கண்களில் நீர் மல்க பாடும் நிலா பாலுவுக்கு விடை கொடுத்தனர். அவகளிருவரும் விண்ணுலகை அடைந்தவுடன் பூமழை பொழிந்தது. அங்குள்ள கலைஞர்கள் யாவரும் இளைய நிலா பாலுவை வரவேற்றனர். இனி தேவ சபையில் அவரது இசை தொடரட்டும். அவரது புகழ் பெருகட்டும். நாம் அனைவரும் பாடி விட்டுச்சென்ற பாடல்களை இங்கே உள்ள பாடகர்கள் பாடக்கேட்டு பாலா என்னும் இசை மேதையுடன் ஐக்கியமாகி வாழ்வோமாக. உலகம் உள்ளவரை அவருடைய பாடல்களை மக்கள் கேட்பர்.

*- திருமதி. ஜானகி இராமகிருஸ்ணன்- மொன்றியால்*

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# அன்பின் தொனி - 583

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார்**

*ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கேளுங்கள். பூமியின் குடிகளே, சிறியோரும் பெரியோரும் ஐசுவரியவான்களும் எளியவர்களுமாகிய நீங்கள் எல்லாரும் ஏகமாய்ச் செவிகொடுங்கள். என் வாய் ஞானத்தைப் பேசும், என் இருதயம் உணர்வைத் தியானிக்கும். என் செவியை உவமைமொழிக்குச் சாய்த்து, என் மறைபொருளைச் சுரமண்டலத்தின்மேல் வெளிப்படுத்துவேன். என்னைத் தொடருகிறவர்களுடைய அக்கிரமம் என்னைச் சூழ்ந்துகொள்ளுந் தீங்குநாட்களில், நான் பயப்படவேண்டியதென்ன? தங்கள் செல்வத்தை நம்பி தங்கள் திரளான ஐசுவரியத்தினால் பெருமைபாராட்டுகிற, ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி, எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும்பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங்கூடாதே. அவர்கள் ஆத்துமமீட்பு மிகவும் அருமையாயிருக்கிறது, அது ஒரு போதும் முடியாது. ஞானிகளும் மரித்து, அஞ்ஞானிகளும் நிர்மூடரும் ஏகமாய் அழிந்து, தங்கள் ஆஸ்தியை மற்றவர்களுக்கு வைத்துப்போகிறதைக் காண்கிறான். தங்கள் வீடுகள் நித்தியகாலமாகவும், தங்கள் வாசஸ்தலங்கள் தலைமுறை தலைமுறையாகவும் இருக்குமென்பது அவர்கள் உள்ளத்தின் அபிப்பிராயம், அவர்கள் தங்கள் நாமங்களைத் தங்கள் நிலங்களுக்குத் தரிக்கிறார்கள். ஆகிலும் கனம்பொருந்தியவனாயிருக்கிற மனுஷன் நிலைத்தி ருக்கிறதில்லை, அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான். இதுதான் அவர்கள் வழி, இதுதான் அவர்கள் பைத்தியம், ஆகிலும் அவர்கள் சந்ததியார் அவர்கள் சொல்லை மெச்சிக்கொள்ளுகிறார்கள். ஆட்டுமந்தையைப்போலப் பாதாளத்திலே கிடத்தப்படுகிறார்கள், மரணம் அவர்களை மேய்ந்துபோடும், செம்மையானவர்கள் அதிகாலையில் அவர்களை ஆண்டுகொள்வார்கள், அவர்கள் தங்கள் வாசஸ்தலத்தில் நிலைத்திருக்கக்கூடாதபடி அவர்களுடைய ரூபத்தைப் பாதாளம் அழிக்கும். ஆனாலும் தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார், அவர் என்னை ஏற்றுக்கொள்வார். ஒருவன் ஐசுவரியவானாகி, அவன் வீட்டின் மகிமை பெருகும்போது, நீ பயப்படாதே. அவன் மரிக்கும்போது ஒன்றும் கொண்டுபோவதில்லை, அவன் மகிமை அவனைப் பின்பற்றிச் செல்வதுமில்லை. அவன் உயிரோடி ருக்கையில் தன் ஆத்துமாவை வாழ்த்தினாலும்: நீ உனக்கு நன்மையை நாடினாய் என்று மனுஷர் அவனைப் புகழ்ந்தாலும், அவன் என்றென்றைக்கும் வெளிச்சத்தை காணாத தன் பிதாக்களின் சந்ததியைச் சேருவான். கனம் பொருநதின வனாயிருந்தும் அறிவில்லாத மனுஷன் அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்.*

**- சங்கீதம்** 49: 1-2

**நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்**

*வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் வசனித்து, சூரியன் உதிக்குந் திசைதொடங்கி அது அஸ்தமிக்குந் திசைவரைக்கு முள்ள பூமியைக் கூப்பிடுகிறார். பூரணவடிவுள்ள சீயோனிலிருந்து தேவன் பிரகாசிக்கிறார். நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார், அவருக்குமுன் அக்கினி பட்சிக்கும், அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும். அவர் தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க உயர இருக்கும் வானங்களையும் பூமியையும் கூப்பிடுவார். பலியினாலே என்னோடே உட ன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார். வானங்கள் அவருடைய நீதியை அறிவிக்கும், தேவனே நியாயாதிபதி. என் ஜனமே, கேள், நான் பேசுவேன், இஸ்ரவேலே, உனக்கு விரோதமாய்ச் சாட் சியிடுவேன், நானே தேவன், உன் தேவனாயிருக்கிறேன். உன் பலிகளினிமித்தம் உன்னைக் கடிந்துகொள்ளேன், உன் தகனபலிகள் எப்போதும் எனக்கு முன்பாக இருக்கிறது. உன் வீட்டிலிருந்து காளைகளையும், உன் தொழுவங்களிலிந்து ஆட்டுக்கடாக்களையும் நான் வாங்கிக்கொள்வதில்லை. சகல காட்டுஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள். மலைகளிலுள்ள பறவைகளையெல்லாம் அறிவேன், வெளியில் நடமாடுகிறவைகளெல் லாம் என்னுடையவைகள். நான் பசியாயிருந்தால் உனக்கு சொல்லேன், பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே. நான் எருதுகளின் மாம்சம்புசித்து, ஆட்டுக்கடாக்களின் இரத்தம் குடிப்பேனோ? நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி, ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய். தேவன் துன்மார்க்கனை நோக்கி: நீ என் பிரமாணங்களை எடுத் துரைக்கவும், என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்லவும், உனக்கு என்ன நியாயமுண்டு. சிட்சையை நீ பகைத்து, என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்துபோடுகிறாய். நீ திருடனைக் காணும்போது அவனோடு ஒருமித்துப் போகிறாய், விபசாரரோடும் உனக்குப் பங்குண்டு. உன் வாயைப் பொல்லாப்புக்குத் திறக்கிறாய், உன் நாவு சற்பனையைப் பிணைக்கிறது. நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்கு கிறாய். இவைகளை நீ செய்யும்போது நான் மவுனமாயிருந்தேன், உன்னைப்போல் நானும் இருப்பேன் என்று நினைவு கொண்டாய், ஆனாலும் நான் உன்னைக் கடிந்துகொண்டு, அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறு த்துவேன். தேவனை மறக்கிறவர்களே, இதைச் சிந்தித்துக்கொள்ளுங்கள், இல்லாவிட்டால் நான் உங்களைப் பீறிப்போடு வேன், ஒருவரும் உங்களை விடுவிப்பதில்லை. ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான், தன் வழியைச் செவ்வைப்படுத்துகிறவனுக்கு தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன் என்று சொல்லுகிறார்.* **- சங்கீதம்** 50: 1-23

**தேவனுடைய கிருபை எந்நாளுமுள்ளது.**

*பலவானே, பொல்லாப்பில் ஏன் பெருமைபாராட்டுகிறாய்? தேவனுடைய கிருபை எந்நாளுமுள்ளது. நீ கேடுகளைச் செய்ய எத்தனம் பண்ணுகிறாய், கபடுசெய்யும் உன் நாவு தீட்டப்பட்ட சவரகன் கத்தியைப்போல் இருக்கிறது. நன்மையைப்பார்க்கிலும் தீமையையும், யதார்த்தம் பேசுகிறதைப் பார்க்கிலும் பொய்யையும் விரும்புகிறாய். கபடமுள்ள நாவே, சங்கரிக்கும் சகல வார்த்தைகளையும் நீ விரும்புகிறாய் தேவன் உன்னை என்றென்றைக்கும் இராதபடி அழித்துப்போடுவார், அவர் உன்னைப் பிடித்து, உன் வாசஸ்தலத்திலிருந்து பிடுங்கி, நீ ஜீவனுள்ளோர் தேசத்தில் இராதபடிக்கு உன்னை நிர்மூல மாக்குவார். நீதிமான்கள் அதைக் கண்டு பயந்து, அவனைப்பார்த்து நகைத்து: இதோ, தேவனைத் தன் பெலனாக எண் ணாமல், தன் செல்வப்பெருக்கத்தை நம்பி, தன் தீவினையில் பலத்துக்கொண்ட மனுஷன் இவன்தான் என்பார்கள். நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப்போலிருக்கிறேன், தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன். நீரே இதைச் செய்தீர் என்று உம்மை என்றென்றைக்கும் துதித்து, உமது நாமத்திற்குக் காத்திருப்பேன், உம்முடைய பரிசுத்தவான்களுக்கு முன்பாக அது நலமாயிருக்கிறது.*

**- சங்கீதம்** 52: 1-9

*தொடரும்...*

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர். இராமலிங்கம் சண்முகரட்ணம்**
(இளைப்பாறிய Executive Engineer R.D.A Sri Lanka,
Registrar of Marriages – Ontario)

**தாயின் மடியில்: 05-02-1944**
**சிவனின் அடியில்: 26-09-2020**

"எம் இதயங்களில் ஒளிவீசிய பூரண நிலவே – எம்
கண்களில் நீர் வரவழைத்தே மறைந்ததேனோ!
எம் அருமைத் தெய்வமே,
வாழ்வே மாயமென்று எமக்கு உணர்த்தி விட்டுச் சென்றனையோ...
பூரண வாழ்வை வாழ்ந்து முடித்து விட்டேன் என்று –
பூரண நிம்மதியுடன் எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றனையோ!
தலைமகனாக, நற்கணவராக, பாசத்தந்தையாய்,
ஆசை மாமனாய், பிரியமுள்ள அப்பப்பாவாய்,
உற்ற சகோதரனாய், நேசமுள்ள மைத்துனராய்
ஊர் போற்ற வாழ்ந்த உத்தமரே!
எங்கள் வாழ்வின் எல்லைவரை தெய்வமாய் இருந்து
எம்மை என்றும் காத்திடுங்கள்..."

தாவடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாவும் கொண்ட அமரர். இராமலிங்கம் சண்முகரட்ணம் அவர்கள் மறைவு அறிந்து எமக்கு நேரிலும், தொலைபேசியிலும், மற்றும் பல வழிகளிலும் அனுதாபங்கள் தெரிவித்ததோடு உதவிகள் புரிந்தவர்களுக்கும் எம் இதயங்கனிந்த நன்றிகள்.

இங்ஙனம்: குடும்பத்தினர்
தகவல்: மனைவி
சகுந்தலாதேவி (தேவி): (416) 335-9450


# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFe Financial Services Inc.
RESP Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074
TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com
வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing
UTHAYAN
உதயன்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree 416.438.3350
Seyon Financial Services
ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services
மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலசரக்கு மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1281 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 23, 2020

# 1987 ல் இந்திய இராணுவத்தின் யாழ்ப்பாண வைத்தியசாலை படுகொலைகளின் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது

(எமது யாழ்ப்பாண செய்தியாளர் டிசாந்தன்)

ஜே ஆர்- ராஜிவ் காந்தி ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைக்கு அமைதிப்படையாக சென்ற இந்திய இராணுவத்தினரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட யாழ் போதனா வைத்தியசாலை பணியாளர்களின் 33ம் ஆண்டு நினைவேந்தல் கடந்த 21ம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.





குறித்த நிகழ்வில் யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் அன்றை படுகொலைகளின் போது, சுட்டுப்படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். 1987ம் ஆண்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய இராணுவம் வைத்தியசாலையில் கடமையாற்றிய பணியாளர்கள் 21 பேரை மிகக் கொடூரமாக சுட்டுப்படுகொலை செய்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த புதன்கிழமையன்று முழுநாளும் யாழ்ப்பாண வைத்தியசாலை ஊழியர்கள் மத்தியில் சோகம் தலைதூக்கியிருந்ததை காணக்கூடியதாக இருந்ததாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

# ஒன்றாரியோவில் தொழில்சார் பயிற்சியாளர்களின் பயிற்சி மேம்பாட்டிற்காக 37 மில்லியன் டாலர்கள் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளதாக மாகாண அமைச்சர் McNaughton அறிவித்தார்

ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பல்வேறு தொழில் சார் பயிற்சியாளர்களின் பயிற்சி நெறிகளை மேம்படுத்துவதற்காவும், அவர்களின் நலன்களைப் பேணுவதற்காகவும் மாகாண அரசானது 37 மில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளதாகவும், இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் McNaughton இணைய வழி கருத்தாடல் ஒன்றில் இன்று தெரிவித்தார்.

மேற்படி கருத்தாடலில் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பல்லின பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டிருந்தனர் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மற்றும் 'நண்பன்' இணையத்தளத்தின் கனடா செய்தியாளர் விக்னேஸ் ஆகியோர் அங்கு அழைக்கப்பட்டிருந்தனர். அங்கு முதலில் உரையாற்றிய அமைச்சர் McNaughton அவர்கள் தனது கருத்துக்களை மிகவும் தெளிவாக விளக்கினார்.

" எமது மாகாணத்தில் தொழில்சார் திறன் கொண்டவர்களின் தேவை-யானது அதிகளவில் உள்ளது. இதற்கு காரணம் பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் கொம்பியூட்டர் துறையிலும், சட்டத்துறையிலும் வைத்தியத்துறையிலும் பொறியியல் துறையிலும் கல்வி கற்று உயர் பதவிகளில் அமர வேண்டும் என்றே விரும்புகின்றார்கள். எனவே அவர்கள் தங்கள் முழுநேரத்தையும் தங்கள் பொருள் வளத்தையும் தங்கள் பிள்ளைகளின் உயர்விற்காகவே செலவு செய்கின்றார்கள், அவர்களில் தவறு இல்லை. ஆனால் பொதுவாக மனித குலத்தின் பல்வேறு தேவை-களை கவனிக்கவும்சேவையாற்றவும் பல் தொழில்கள் சார்ந்த வல்லுனர்களும் எமக்குத் தேவைப்படுகின்றார்கள். இந்த நோய்த் தொற்று காலத்தில் அதிகளவு தொழில்சார் விற்பன்னர்கள் தேவைப்படுகின்றார்கள். எனவே முதல்வர் டக் போர்ட் அவர்கள் தலைமையிலான அரசாங்கமானது 37 மில்லியன் டாலர்களை தொழில் சார் பயிற்சியாளர்களின் கல்விக்காகவும் பயிற்சிக் கூடங்களின் அபிவிருத்திக்காவும் ஒதுக்கியுள்ளது. இந்தி நிதி ஒதுக்கீட்டின் மூலம் எமது மாகாணத்தில் சுமார் 15000 பல்வேறு தொழில் துறைக-ளில் பணியாற்றக் கூடிய வல்லுனர்களை உருவாக்கலாம் என்றும் அதன் மூலம் எமது மாகாணத்தில் உள்ள தொழில் சார் வல்லுனர்களின் தட்டுப்பாட்டையும் நீக்கலாம் என்று கருதுகின்றோம்'' என்றார் அவர். மேலும். ஒன்றாரியோ மாகாண அரசின் சட்டங்களின் அடிப்படையில் ஒரு தொழில் பயிலுனர் தனது 28வது வயதில் தான் குறித்த ஒரு தொழில் சார் பயிற்சி நெறி-யிலி இணையலாம் என்ற வயதெல்லையை குறைப்பதற்கும் எமது அரசாங்கம் யோசித்து வருகின்றது என்று அமைச்சர் McNaughton குறிப்பிட்டார்.

Ontario
Ministry of Labour, Training and Skills Development



# தற்போதைய நோய்த் தொற்று சூழ்நிலையில் கனடிய அரசியல்வாதிகள் மக்கள் நலனை மட்டுமே மனதில் கொள்ள வேண்டும் என்கிறார் கனடிய Green Party யின் தலைவி




"அரசியல்வாதிகள் மக்கள் நலத்தை மற்றும் தான் மனதில் வைத்தது கொள்ள வேண்டும் என்றும். கடந்த சில நாட்களாக ஒரு அரசி-யல் கட்சிக்கு ஆதரவாக மிகவும் சார்புபடுத்தி பேசப்படுவதும், இதனால் கொரோனா வைரஸ் பரவியுள்ள இந்த நிலைமையில் Conservetive மற்றும் Liberal கட்சியினர் தமது சூடான விவாதங்களை தவிர்த்து மக்களுக்காக செயல்பட வேண்டும்". இவ்வாறு தெரிவித்தார் கனடா-வின் தேசியக் கட்சிகளில் ஒன்றான Green Party கட்சியின் தலைவர் திருமதி அன்னிமே போல். நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கனடா உதயன் பத்திரிகை மற்றும் நண்பன் இணையத்தளம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இணைய வழி மூலமாக நடைபெற்ற இந்த பேட்டியில் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேநதிரலிங்கம், 'நண்பன்' இணையத்தளத்தின் சார்பில் விக்னேஸ் மற்றும் விமல் நவரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர். *(உள்ளே விபரமான பேட்டி காணப்படுகின்றது)*

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

அறிவித்தல்களை உலகெங்கும் உடனுக்குடன் உங்கள் உறவுகளுக்கு கொண்டு செல்ல வேண்டுமா?
எமது கனடா உதயன் பத்திரிகையின் இணையத்தளமான www.uthyannews.ca இல் பிரசுரமாகும் அறிவித்தல்கள் மற்றும் அவசர விளம்பரங்கள் உதயன் பத்திரிகையிலும் அத்துடன் எமது சகோதர இணையத்தளங்களான www.nanban.ca மற்றும் www.voicefilankai.lk ஆகியவற்றில் பிரசுரம் செய்யுங்கள்.
உதயன் கட்டணங்கள் மிகக் குறைவு. நண்பன் WORLDWIDE Voice of ilankai Voice for Voiceless World Wide Web
தொலைபேசி இலக்கங்கள்: கனடா+1 416-587-0552 கொழும்பு: +94 777 555 026 யாழ்ப்பாணம்: +94 7666143 074 சென்னை: +91 784500 6977